குண்டூசி

தெய்வீகத்திங்களிதழ்

மார்ச் – 82

விலை ரூ. 1.20

உங்கள் குடும்பத்துடன்
விஜயம் செய்ய வேண்டுகிறோம்

ஸ்வீட் ஹோம் ஸ்வீட்ஸ்

★

பாஸந்தி - ரஸ்மலாய் - மலாய் - ரஸகுல்லா -
மலாய் குல்பி, பாதாம் கோஸ்ட் - கிரேப்
லெமன் - மற்றும் சூடான சமோசா.
கச்சோரி, குலோப்ஜாமூன்,
கேசரி மில்க் மற்றும்
காரவகைகளும்
உண்டு.

★

ராமகிருஷ்ணா லஞ்ச் ஹோம்

223, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் சாலை,
சென்னை-600 001.
போன் : 22154

பட்டை 35 — மணி 6

மார்ச் — 1982

648

தருமமிகு தமிழகம்

பொதுவாக பாரதம் தர்மத்தின் அடிப்படையில்தான் அந்தக்கால மன்னர்களால் ஆளப்பட்டு வந்திருக்கிறது.

தர்ம சொத்து, கோவில சம்பந்தப்பட்டது என்றால் அந்தக் காலத்தில் மிகவும் பயபக்தியுடன பரிபாலித்து வந்தார்கள். கோவில சொதது குல நாசம, என்று அதில் கைவைக்க மாட்டார்கள்.

தமிழகத்தில குறிப்பாக தருமமிகு சென்னையில் எத்தனையோ பக்திமான்கள் அறபணிகளுக்கும், கல்விக்கூடங்கள், கல்லூரிகள் போன்றவைகளுக்கு அறக்கட்டளைகள ஏற்படுத்தி உள்ளார்கள.

கோவில்களுக்கு அந்தக்கால அரசர் முதல் இன்றைய தர்மவான்கள் வரை ஏராளமான மானய நிலஙகளும், வீடுகளும் காணிக்கையாக சமர்ப்பித்துள்ளார்கள.

அவைகள் சரியானபடி நிர்வகிக்கப்பட்டு குறிப்பிட்ட காரியங்களுக்கு போய் சேருகின்றதா? எனபதில்தான முறைகேடுகள் நடப்பதாக நம் அரசே வேதனையுடன வெளிப்படுத்தும நிலை நீடிக்கிறது.

நம் அறநிலையத்துறை அமைச்சர் வீரபபன் அவர்கள் கூறும் புள்ளி விவரங்களுடன கோவில சொத்து பறறிய விளக்கத்தை பார்க்குமபோது, எவ்வளவு பணம் தனி நபர்களால பலஆண்டு காலமாக கோவில் சொத்தை கொள்ளையடித்து வருகிறார்கள் என்பது வெளிசசமாகிறது

தர்ம சொத்தை ஏப்பம் விட்டுக் கொண்டிருக்கும இவர்கள் நல்லாத்தானே இருககிறாகள என்று வாதிப்பவர்களும இருககத்தான் செயகிறார்கள்.

ஆனால், இவர்கள் ஆண்டவனை ஏமாற்றினாலும், ஏமாற்றிய இவர்கள் மனச்சாட்சியை ஏமாற்ற முடியாதல்லவா? .

எந்த வகையில் ஏமாற்றம் செய்பவர்களாயிருந்தாலும், சாகும்வரை இவர்களுக்கு மன அமைதி நிச்சயம் ஏற்படாது. அணு அணுவாக கெத்துக் கொண்டுதானிருப்பார்கள.

தெய்வம் சற்று நினறு நிதானித்துதான் தண்டிக்கும். தண்டனையிலிருந்து யாரும் தபபவே முடியாது.

சில ஆண்டுகளுக்கு முன் பழனி தண்டாயுதபாணி கோவிலில் சிப்பந்திகளுக்கு சமபளம கொடுக்கவே முடியாமலிருந்தது எனறு சொல்லப்பட்டது பழனியாண்டவனை மொட்டையாணடி அவன தலையையே மொட்டையடிததார்கள புண்ணியவானகள்

அவனை மறந்தவர் எவர் வாழ்ந்தார்? அவனை நினைந்தவர் எவர் தாழ்ந்தார்? என்பது பெரியவர்கள் வாகக ஆகவே சம்பநதப்பட்டவர்களுக்கு நல்ல புத்தியை கொடுக்க அவனையே வேண்டுகிறேன.

—ஜெய்ஹிந்த்

உங்கள் பக்கம்

டன்லப் ஸ்தாபன அன்பர் ஸ்ரீனிவாசன் கட்டுரை தொழிலாளி—முதலாளி இரு சாராரையுமே உண்மையில் சிந்திக்க வைக்கும் நல்ல அறிவுரை. உணர்ந்து செயல்பட்டால் நாமும் நலம் பெற்று நாடும் நலம் அடையும்.

எஸ். பத்மநாபன் — சென்னை-75.

சென்ற இதழில் வெளியிட்டுள்ள குருவாயூரப்பன் துதியைப்போல் ஒவ்வொரு இதழிலும் போடுங்கள். நாராயண! நாராயணு!!

ராமதிலகம் — திருவாரூர்

சொர்ணலதாம்பிகை பார்ப்பவர்களின் மனதில் பொற்கொடியாகவே சுற்றிக் கொள்கிருள், அவ்வளவு கொள்ளை அழகு. காரணீஸ்வரர், பிரதோஷமூர்த்தி யாவும் பக்தி மணக்கச் செய்கிறது.

ராஜலட்சுமி-ராமசாமி கோவை

கேள்வி-பதில் பகுதி ஆரம்பமானதே குண்டூசியில்தானே? தொடருங்கள். அத்துடன் நுனிப்புல் பகுதியும் ஆரம்பிக்கலாமே? யாருக்கும் பயப்படாத வணங்காமுடியான தாங்கள் ஏன் தயக்கம் காட்டுகிறீர்கள்? தொடருங்கள்.

விநாயகமூர்த்தி — சேலம்.

இந்த இரண்டு பகுதிவுமே உண்மையை தைரியமாக எடுத்துச் சொல்லும் அறிவுரைகள் வீணாக பலர் மனக்கசப்பிற்கு ஆளாக ஏற்படுகிறது. மேலும், கடவுள் பகதியும், தெய்வீக விஷயங்களுக்குமே பயன்பட பெரியவரின் கட்டளைப் படி இந்தப் பகுதிகளை நிப்பாட்டியுள்ளோம்.

—ஆசிரியர்

சென்ற இதழில் காட்சியளிக்கும் பொற்கொடி அம்மன் பார்க்க பரவசமாக உள்ளது. பள்ளிகொண்ட நீலகண்டம் கட்டுரை உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. ஒரு தலத்தில் இத்தனை மூர்த்திகளா? கேள்விப்பட்டதே இல்லையே!

டாக்டர். சீதாலட்சுமி — சிக்கல்

சொர்ணலதாம்பிகை — காரணீஸ்வரர் திருக்கோவில் குடமுழுக்கு விழா விரைவில் நிச்சயம் நடைபெறும், பொற்கொடி சீசன் சீக்கிரமே ஆரம்பமாகி விடும். லட்சுமி கடாட்சமும் ஏற்பட்டுவிடும்.

ஞானசம்பந்தன் — குடந்தை

சென்ற இதழ் தலையங்கம் டாப்கிளாஸ் நாடு உண்மையில் உருப்பட வேண்டுமானுல் நிச்சயம் ஒரு அதிர்ச்சி வைத்தியம் அவசியம் செய்யத்தான் வேண்டும். கட்சிமாறிகளின் ஆட்சி மாறத்தான் வேண்டும்.

பி. எஸ். அய்யர் — சென்னை-2

தியாகராஜ வைபவம், கட்டுரை பயனுள்ள நீதி போதிக்கும் சிறந்த விளக்க உரை.

ராமாபாய் — சித்தூர்

ஆனந்தவெள்ளம் கட்டுரையில் பாட்டுக்களை குறைத்து விளக்கம் தரும் உரைகளை அதிகமாக அளிக்க தியாகராஜருக்கு என் அன்பு கட்டளையை சமர்ப்பிக்கிறேன்.

ராயப்பன் — போர்ட் பிளேயர் (அந்தமான்)

ஆலயமும் ஆஸ்பத்திரியும்

காஞ்சி காமகோடிப் பாமாச்சார்யாள்

வ. சாமிநா... 1986

மனிதர்களுக்குச் சேவை செய்வ
ந பகவானுக்குச் செய்கிற பூஜை.
ரியாக பகவத்தியானம், பூஜை
துவும் வேண்டாம் என்று சொல்
பர்கள் இருக்கிறார்கள், இவர்
ரில் சிலர் கோயில்கள் முதலிய
திபாட்டிடங்கள் வேண்டிய
ல்லை. என்றும், அவற்றை வைத்
ப சாலைகளாகவும் பள்ளிக்கூட
களாகவும் மாற்றிவிட வேண்டும்
ன்றும் சொல்கிறார்கள்.

மனிதர்களுக்கு ஆறுதல் தருவது
நாய்ப்பிணி போக்குவது, கல்வி
றிவு தருவது எல்லாம் பரம உத்த
மான பணிதான். அதில் பகவான்
சயமாகப் ப்ரீதி அடைகிறான்
ன்பதும் ரொம்ப உண்மைதான்.
னால், யோசித்துப் பார்க்கும்
பாது, மனிதசேவை பகவத்
வை என்பதையே திருப்பிவைத்
சொல்வதும் ரொம்ப உண்மை
ன்று தெரிகிறது. அதாவது, பக
த்சேவை செய்வதும் மனிதர்
ரின் நன்மைக்காகத் தான் என்று
ரிகிறது. அதுவே மற்ற சமூக
வைகளை விட மனிதனுக்கு
ந்தர நலனைத் தருவதுமாகும்.

ஆஸ்பத்திரிகளில் நோயாளிகளை
ராஸ்தம் செய்து அனுப்புகிறோம்
புறம் அவர்கள் நல்லவர்களாக
ம வேண்டாமா? லோகத்துக்
கெடுதல் செய்கிறவர்களாக
, தங்களுக்கே அனர்த்தம்
ய்து கொள்பவர்களாகவும் அவர்
இருந்தால் அவர்களை சொஸ்
படுத்தியதின் பயனை நாம்
டையமுடியுமா?

த்திக் கோளாறு உள்ளதாகச்
ால்லப்படும் பலரை என்னிடம்
மைத்து வந்து சொஸ்தப்படுத்த
ண்டும் என்று கேட்கிற போது,
நான் இந்த ரீதியில்தான் உள்ளுக்குள் நினைத்துக் கொள்கிறேன். அதை அப்பொழுது அவர்களிடம் சொன்னால், என்னிடம் ஆறுதல் தேடி வருகிறவர்களுக்கு மனசு கஷ்டப்படும். அதனால் சொல்வதில்லை. இப்போது பொதுவாகச் சொல்கிறேன்.

புத்தி பூர்வமாக ஒரு தவற்றைச் செய்தால்தான் அது பாபமாகிறது. ஆனபடியால், புத்தி தங்கள் வசத்திலேயே இல்லாமல் சித்தப்பிரமை பிடித்தவர்கள் செய்கிற எந்தச் செயலிலும் பாபம் இல்லை. ஏதோ பூர்வ பாபத்துக்காக அவர்கள் இப்படியாகியிருக்கிறார்கள். ஆனால், இப்போது அவர்களுக்குப் பாபமில்லை. நாம் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவது போல் சித்தப்பிரமை பிடித்தவர்கள் பேசுவதில்லை. மனசில் எது வருகிறதோ அதையே சொல்லுகிறார்கள். ஏன் இவர்களையும் குணப்படுத்துவது என்கிற பெயரில் மற்றவர்களைப் போல் ஆக்கி, இவர்களுக்கும் பாபம் சேரும் படியாகப் பண்ண வேண்டும் என்று எனக்குத் தோன்றுவதுண்டு.

ஆஸ்பத்திரி வைத்து உடல் வியாதியைத் தீர்ப்பது போதாது. நோயாளிகளது மனஸில் கெட்ட எண்ணங்கள் என்ற வியாதி இல்லாமல் செய்வதே அதை விட முக்கியம். இவ்வாறேதான் பள்ளிக்கூடம் வைத்துப் படிப்பை விருத்தி செய்கிறோம். படித்து வெளிவந்தவர்கள் யோக்கியர்களாக இல்லாவிட்டால் பள்ளிக்கூடம் வைத்த பயன் நமக்கு ஏது? பக்தி, கட்டுப்பாடு, தியாகம் முதலானதுகள் இல்லாமல் படிப்பால் வெறும் புத்தியை மட்டும் வளர்த்துக்கொண்

கிருஷ்ணபுரம்

கிருஷ்ணபுரம் திருநெல்வேலிக்கு அருகில் உள்ள ஒரு சிற்றூர். அங்குள்ள திருவேங்கடநாதர் திருக்கோயில் சிற்பச் சிறப்பு மிக்கது. ஒவ்வொரு சிற்பமும் ஒவ்வொரு வகையில் மேலானது. ஒவ்வொன்றிலும் உணர்ச்சிபாவம் குதிகொள்ளும் சிற்பக் கலைச் செழிப்பை அங்கே தரிசனமாகக் காணலாம்

அன்னத்தின் மீது ஆரோகணித்திருக்கும் ரதிதேவி எவ்வளவு ஒய்யாரமாகக் காணப்படுகிறாள்! அவள் முகத்தில்தான் எத்துணை களிப்பு!

வானுலக மங்கை ஒருத்தி சர்வாலங்கார பூஷிதையாக திகழும் காட்சி — கால்சிலம்பு முதல், முடிச்சூடிகை வரையுள்ள தமிழ்நாட்டு அணிகலன்களுக்குப் பட்டியல் போட்ட மாதிரியுள்ளது அல்லவா?

ஜகுஹஸ்தமும், சூசிஹஸ்தமும் காட்டிச் சதுர தாண்டவம் புரியும் நாட்டிய நங்கையின் நளினம், முகபாவம், எல்லாம் நம்மை வசீகரிப்பனவாகும்.

நமது முன்னோர்கள் நமக்குப் பாரம்பரைச் சொத்தாக அளித்துவிட்டுச் சென்றுள்ளது இந்தக் கலைப் பொக்கிஷங்கள். இன்றைய மதிப்பீட்டில் இச் சிற்பங்கள் பல கோடி ரூபாய்க்குச் சமம். இந்த அரிய பொக்கிஷத்தைக் கட்டிக் காப்பாற்றிப் போற்றி, வரும் தலைமுறையினருக்கு அளிப்பது நம் கடமை; நமது பணி;

தலைமுறை தலைமுறையாக வந்த கலைப் படைப்பின் அடிப்படை தூய்மை என்னும் பக்தியும், நேர்மை என்னும் சக்தியும் தான்! அந்த அடிச்சுவட்டைப் பின்பற்றுவது நமது லக்ஷ்மி மில்ஸ்.

"செய்யும் தொழிலே தெய்வம்; அதில் நேர்மையே எங்கள் செல்வம்" என்ற குறிக்கோளுடன் மக்களுக்குச் சேவை செய்வதையே தனது தலையாய கடமையாகக் கொண்டு விளங்குவது நமது லக்ஷ்மி மில்ஸ்!

லக்ஷ்மி மில்ஸ்
கம்பெனி லிமிடெட்
கோயமபுத்தூர்

டால் சாதுரியமான அயோக்கியத் தனங்கள் செய்தும் தப்பித்துக் கொள்வதற்குத்தான் வழியாகிறது.

வித்தியாசாலையோடும், வைத்ய சாலையோடும் மனுஷ்யனின் வாழ்வு முடிந்து விடுகிறதில்லை. அவன் நல்லவனாக இருக்க வேண்டும் என்பது தான் லட்சியம். இப்படி நல்லவனாக்குகிற நிலையங்களாக ஆலயங்களும், ஆஸ்பத்திரி, ஸ்கூல் போலவே- ஆஸ்பத்திரியை ஸ்கூலை விடவும்- அவசியம் இருக்கத்தான் வேணடும் நாம் நல்லவர் ஆவதற்காக பகவத் தியானம், பூஜை இவைதான் அவசியம் இருக்க வேண்டியவை.

மனிதனின் உடம்புக்கு ஆரோக்கியம் தருவது, புத்திக்குப் படிப்புத் தருவது. அவனுடைய தரித்திரத்தை நீக்கிச் செல்வச் சுபிட்சம தருவது எல்லாவற்றையும் விட, அவனை பகவானிடம் சேர்ப்பதே பேருபகாரமாகும். நாமும் பகவானிடம் மனதைச் செலுத்தி, தியானம், பூஜை இவைகளை அநுஷ்டித்தால் தான மற்றவர்களை இவற்றில் ஈடுபடுத்த நமக்கு யோக்கியதை உண்டாகும் அப்போதுதான் நாம் செய்கிற பரோபகாரம் சக்தியோடு பலன் தரும்.

மனிதனையே தெய்வமாக நினைத்து அவனுக்குச் சேவை செய்வது சிலாக்கியம்தான். ஆனால், நாம் அப்படி நினைப்பதோடு நிற்காமல் அவனே உண்மையாகத் தன் தெய்விகத்தைக் கொஞ்சமாவது தெரிந்து கொள்ள நாம் ஆலயங்களை அவசியம் பேண வேண்டும்.

நல்லவனாவதற்கு பக்தி தேவையில்லை என்று ஒரு வாதம், ஆனாலும் நடைமுறையில் பலவிதமான சுயநல ஆசைகளால் ஆட்டி வைக்கப்படுகிற ஜீவனைப் பரிசுத்தப் படுத்துவதற்குப் பக்தியைப் போன்ற சாதனம் வேறு இல்லவே இல்லை, பகவான் என்று ஒருவன் சர்வ சாட்சியாகவும், சர்வசக்தனாகவும் இருந்து கொண்டு நம் கர்மங்களுக்குப் பலன் தருகிறான் என்கிற பய பக்தி உணர்ச்சிதான் யுக யுகாந்திரமாக மனிதனைத் தர்ம மார்க்கத்தில் நிறுத்துவதற்குப் பெரிய ஊன்று கோலாக இருந்து வந்திருக்கிறது

பக்தியின் லட்சியம் நல்லவனாக ஆக்குவது மட்டுமல்ல, நமக்குக் காரணமான சக்தியைத் தெரிந்து கொண்டு, அதற்கும், நமக்கும் பேதமில்லை என்ற பரமஞானத்தை அடைந்து, சம்ஸாரச் சுழலிலிருந்து தப்புவதே பக்தியின் லட்சியம், அதோடு, வெளி உலகத்துக்கு நல்லவனாக நடக்கவும் கூட அதுவே வேறெந்த உபாயத்தையும் விட மிகுந்த சக்தியுடன் உதவி புரிகிறது கோபுரம் கட்டி எல்லார் கண்களிலும் படவைத்து பகவானை ஞாபகமூட்டுவதைவிடப் பெரிய சமூக சேவை இல்லை.

தொகுப்பு :—எ. எஸ். மூர்த்தி,
சென்னை

❋

குணசாலியான ஒரு பெண் விலை உயர்ந்த முத்துக்களை விட மேலானவள். —பைபிள்

KR
போன். 23033
கோவை.

மந்த்ராலய மகானின் தரிசனங்கள்

20

ஸ்ரீ ராகவேந்திரர் அதோனிக்கு வரும் முன் கும்பகோணத்தில் பல காலம் இருந்தார். அப்போதே அவர் வேறு இடத்தில் பிருந்தாவனம் அடைய வேண்டும் என்று பகவத் ப்ரேரணை போலும். கும்பகோணத்தில் ஸ்வாமிகளைச் சந்திக்க மூன்று கேரளத்தைச் சேர்ந்த வித்வான்களாகிய ஜோதிஷர்கள் வந்து தரிசனம் செய்தனர். ஸ்ரீ ஸ்வாமிகளிடம் தமக்கு ஒரு நற்சான்று பெற எண்ணிய அவர்கள் தமது வித்வத்தைக் காண்பிக்க ஒரு தருணமளிக்கும்படி வேண்டினர்.

அப்போது, ஒரு ஜாதகத்தைக் கொடுத்து அந்த ஜாதகரின் ஆயுள் பாவத்தை கணிக்கும்படி கூறினர். மூன்று ஜோஸ்யர்களும் மூன்று விதமாக கூறினர். முதல் ஜோதிடர் 90 வருடங்கள் எனக் கூறினர். இரண்டாமவர் 300 வருடங்கள் என்றும், மூன்றாவது ஜோஸ்யர் 700 வருடங்கள் எனவும் கூறினர்.

ஜோதிடர்களும், அங்கிருந்த மற்றவரும் எவ்வாறு இப்படி கணிதம் ஏற்படுகிறதே என்று திகைத்தனர். ஸ்ரீ ஸ்வாமிகள் மூன்று பதில்களும் சரியே என்றார் மேலும் அவர் இது மூலராமருக்கு பூஜை செய்பவரின் ஜாதகம் என்றார். ஆகவே அது ஸ்ரீ ஸ்வாமிகளின் ஜாதகம் என்பது தெளிவாயிற்று.

எல்லோருடைய கோரிக்கைக்கும் உட்பட்டு ஸ்ரீ ராகவேந்திரர் குறிப்பிட்ட அந்த ஆயுள் பலனைக் குறித்து விளக்கம் தெரிவித்தார். மூன்று பதில்களும் சரிதான். முதலவரின் தெளிவில் இந்த பூததேகத்தின் ஆயுட்காலமும், இரண்டாமவரின் திருஷ்டியில் க்ரந்தங்களின் ஆயுட்காலமும், மூன்றாமவரின் திருஷ்டியில் ப்ரபாவங்களின் ஆயுளும் தெளிவுப்படுத்தப்பட்டன.

நான் உடல் கொண்டு வாழ்வது 90 வருடங்கள், எனது புத்தகங்களும் வியாக்யானங்களும் 300 வருடங்கள் பிரசித்தமாக இருக்கும். எனது ப்ருந்தாவன வாசம் 700 வருஷங்கள் இருக்கும் ஆகவே மூன்று பதில்களும் சரியே என்று எடுத்துரைத்தார். அங்குள்ளவருடைய ஆச்சரியத்திற்கு ஏற்றவாறு!

மேலும் ஒரு நாள் ஸ்வாமிகள் சிஷ்யர்களுக்கு பாடம் கூறும் வேளையில் திடீரென்று ஸ்வாமிகள் எழுந்து ஆகாசத்தை நோக்கி கை கூப்பி வணங்கினர் அப்போது ஒரு துளசி மாலை அவரது கழுத்தில் விழுந்தது. மேலும் அவர்கள் ஆகாயத்தைப் பார்த்தபோது, ஒரு விமானம் செல்வதையும் அதில் ஒரு மகான், மூன்று முறை இரு விரல்களைக் காட்டி சமிக்ஞை செய்ததையும் கண்டார்கள்.

ஸ்ரீ ராகவேந்திரர் பிறகு அது ஸ்ரீ கிருஷ்ண த்வைபாயனர் எனவும், தனக்கு துளசிமாலையளித்து அனுக்ரஹித்ததாகவும், தாம் பிருந்தாவனம் அடைய 2 வருஷம், 2 மாதம், 2 நாள் இருப்பதாகவும் தெரிவித்ததாகக் கூறினர் தமது சிஷ்யர்களிடம்

பின்பு ஸ்ரீ மடத்தின் பரிபாலனத்தில் இருந்த ஸ்ரீ சக்கரபாணி, ஸ்ரீ சாரங்கபாணி கோயில்களை ஸ்ரீ அக்கோயில மடத்தில் பரிபாலனை செய்யும்படி ஏற்பாடு செய்தார், அதேபோல் தமது கவனிப்பின் கீழ்

பி. எஸ். பரமேஸ்வரன், பி.ஏ. பி.எல்., சென்னை.

இருந்த ஸ்ரீ கும்பேஸ்வரர் ஆலயத்தை ஸ்ரீ காமகோடி மடத்தினிடமும் ஒப்படைத்தார். இதன் பின்னர் ஸ்வாமிகள் அதோனியடைந்த வரலாறு ஏற்கனவே விவரிக்கப்பட்டுள்ளது.

திவான் வேங்கண்ணரால் நிர்மாணிக்கப்பட்ட முதல் பிருந்தாவனத்தை தனக்கு பிருந்தாவனமாக கொள்ளாது ஸ்வாமிகள் மாதவரம் என்று மந்திராலயத்திலிருந்து ஐந்து மைல்கள் தூரத்தில் உள்ள ஒருஸ்தலத்தினுள் ஏரிக்கரையில் இருந்த ஒரு பெரும் பாறையைக் காண்பித்து. இராமாயண காலத்தில் இராமர் இந்த கல்லில் சிறு காலம் ஓய்வெடுத்துக் கொண்டார். இந்தக்கல்லிலேயே எனக்கு பிருந்தாவனம் நிர்மாணிக்க வேண்டியது என்று உத்தரவிட்டார்.

வேங்கண்ணா நல்ல சிற்பிகளை ஏற்பாடுசெய்து ஒரு அழகிய பிருந்தாவனத்திற்கு கற்கள் செதுக்கச் செய்தார். மிருந்த கல்லில் ஒரு ஆஞ்சநேயஸ்வாமி விக்ரஹமும் வடிக்கச் செய்தார். கோயிலைச் சுற்றி ஒரு உயரமான சுவர் எழுப்பப்பட்டு வாயில்படியின் மீது ஆட்டின் தலையும் பொருத்தப்பட்டது.

இப்படி உயர்வாக சுவர் சுற்றிலும் எடுப்பதைக் கண்ட ஆதோனி நவாபு, சுவாமிகளை தரிசிக்கும்போது அந்த கட்டிடத்தைப் பார்வையிட்டார். அப்போது ஸ்வாமிகளிடம், நீங்கள் பிருந்தாவனம் அடைந்த பின் எங்கள் போன்ற முகம்மதியருக்கு எளிதில் உள்ளே வந்து உங்கள் பிருந்தாவனத்தைக் காண இயலாதே என்று வருந்தினார் சுவாமிகளிடம். மேலும், எங்களுக்கு வெளியிலிருந்தே பார்க்கும் விதமாக எதாவது உயர்ந்த ஒரு நிர்மாணம் இருந்தால் நாங்கள் வழிபட நன்மையாக இருக்கும் என்று வினயமாகச் சொல்ல, கவலைப்பட வேண்டாம், வாசல் கதவிற்கு எதிரே ஒரு சிறிய கோபுரம் கட்டப்படும், அந்த கோபுரத்தின் வழியாக நான் உங்களுக்கு அனுக்ரஹம் அளிப்பேன் என்றார் ஸ்வாமிகள். அதன்படி ஒரு சிறு கோபுரம் இன்றும் உள்ளது.

ஸ்ரீ ராகவேந்திரரின் உத்திரவும்படி 1200 ஸாளக்ராமங்கள் சேர்க்கப்பட்டன. அவைவெல்லாம் லக்ஷ்மிநாராயண என்ற வகைப் பட்ட ஸாளக்கிராமங்கள். இவைகள் வெங்கண்ணா ஏற்பாட்டில் நடந்தன மேலும் பிருந்தாவனத்தைச் சுற்றி அறுபது வீடுகள் அந்த கோயிலுக்கு சேவை செய்யும் பிராம்மணர்களுக்காக கட்டப்பட்டது.

ஸ்ரீ ராகவேந்திரர் தமது பூர்வாசிரம கமையனாரின் பேரனாகிய வெங்கண்ணாச்சார் என்பவரை வரவழைத்து அவருக்கு சந்நியாஸம் வழங்கினார். அவரையே தனக்குபின் ஸ்ரீ மடத்துக்கு ஸ்வாமிகளாக நியமித்தார். தீக்ஷை கொடுத்தபின் அவருக்கு ஸ்ரீ யோகீந்திர தீர்த்தர் என்ற நாமகரணம் கொடுத்தார்.

திவான் வெங்கண்ணாவைக் கூப்பிட்டு புது மடாதிபதியிடம் அனுசரணையாக நடந்து கொள்ளும்படியும் கட்டளையிட்டார். திவான் வேண்டியபடி நடப்பதாகக் கூறினார். மேலும் எல்லா சாஸனங்களை

யும் ஸ்ரீ யோகீந்திர தீர்த்தருடைய நாமத்திற்கு மாற்றச் செய்தார்.

சில காலம் சென்றதும் ஸ்ரீ ராகவேந்திரர் ஒரு நாள் திவான் வெங்கண்ணாவை வரவழைத்து தனக்கு பிருந்தாவனப்பிரவேசத்திற்கு சாலிவாஹன சகாப்தம், 1593 (1671 A. D) கிருஷ்ணபக்ஷ த்விதியை, வியாழக்கிழமை, தை மாதம், விரோதிக்ருது வருஷத்தில் நாள் குறித்துச் சொன்னார்.

இதைக்கேட்ட திவான் துக்கத்தினால் திக்பிரமை கொண்டு கண்களில் கண்ணீர் சிந்த ஏதும்சொல்ல முடியாது வருந்தி நின்றார். இதனைப் பார்த்த ஸ்ரீ ராகவேந்திரர், அவரைத் தேற்றும் வகையில் வெங்கண்ணா! எதற்காக அழுகிறாய்? உன்னை நான் எப்போதும் அருள் பாலிப்போன். இந்த பூத உடல் ஒன்றுதான் கண்பார்வையிலிருந்து மறைந்துவிடும், நான் எப்போதும் பிருந்தாவனத்தில் உறைந்து கொண்டு உனக்கு ஆசீர்வாதம் புரிந்தவண்ணம் இருப்பேன் கவலைப்படாதே என்றார்.

திவான், ஸ்வாமிகள் உத்தரவுப்படி ஏற்பாடுகள் செய்வதாகச் சொல்லி வருத்தத்துடன் தன் செயலில் ஈடுபட்டார்.

இப்படி நாள் குறிக்கப்பட்ட செயதி எங்கும் பரவி, ஊரிலிருந்தும் பல தூரபிரதேசங்களில் இருந்தும் உண்மை பக்தர்கள் வந்து ஸ்வாமிகளை தரிசித்த வண்ணமிருந்தனர்.

—தொடரும்

கர்மவினை போக்க வழி

எந்த ஒரு காரியமும் ஒரு காரணம் இல்லாமல் செயல்படுவதில்லை. வினைப்பயனை அனுபவிக்காமல் குறையாது எவ்வளவு உயரிய மகான்களானாலும், மகரிஷிகளானாலும் அனுபவித்தால்தான் விமோசனம் ஏற்படும் என்பதுதான் பொது விளக்கம்.

மஹாவிஷ்ணுவின் 136-வது திருநாமம் க்ருதா-க்ருத: எனச் சொல்லப்படுகிறது இப்புனித நாமாவை தியானிப்பதின் மூலம் நிச்சயம் வினையின் விளையாட்டிலிருந்து நாம் விடுதலை அடைய முடியும் என்பது பெரியோர்களால் சொல்லப்பட்ட உண்மை இத்திரு நாமாவை ஒரு சக்திவாய்ந்த மந்திரமாகவே பலர் போற்றி பயனடைந்து வருகிறார்கள் என்றும் சொல்வார்கள்.

திருவண்ணாமலை மகான் சேஷாத்திரி சுவாமிகள் காமோ அகார்ஷித் மன்யுர கார்ஷித என்ற திருமந்த்ரத்தை ஜபித்து சித்தி பெற்றார் என்பதும் தெளிவான உண்மை.

எனவே, நாமும் ஓம் க்ருதா க்ருதாய விஷ்ணவே நமஹ என்ற திவ்ய நாமாவை பணிந்து போற்றி ஜபித்து, கர்மவினையைப் போக்கிக் கொண்டு நற்கதி அடையலாமல்லவா?

விளக்கம்—மரக்காணம் – சி. ஜெயகுமார்

மகான் விஷ்ணுபூரி அருளிய

பக்தி ரத்னாவளி

ஸ்ரீசுகர், பகவான் எவ்வாறு ப்ரேம பக்தியை விரும்புகிறார் என்பதை எடுத்துக் காட்டுகிறார்;

ஸ்வமாது: ஸ்வின்னகாத்ராயா விஸ்ரஸ்தக பரஸ்ரஜஹ
த்ருஷ்டுவா பரிச்ரமம் க்ருஷ்ண: க்ருபயாஸீ த்ஸ்வபந்தனே

ஏவம் ஸந்தர்சிதா ஹ்யங்கம் ஹரிணா பக்தவச்யதா
ஸ்வவசேனாபி க்ருஷ்ணேன யஸ்யேதம் ஸேசவரம் வசே

நேமம் விரிஞ்சோ ந பவோ ந ஸ்ரீரப்யங்கஸம்சரயா
ப்ரஸாதம் லேபிரே கோபி யத்ததபராப விமுகதிதாத்

நாயம் ஸுகாபோ பகவான் தேஹினாம் கோபிகாஸுத:
ஞானினாம் சாத்பபூதானாம் யதா பகதிமதாமிஹ (61 – 64)

தன்னிடம் ப்ரேம பக்தியை பகவான் சிலாகிக்கிறார் என்பதை ஸ்ரீ சுக மஹரிஷி விவரிக்கிறார் ஒருகால், குழந்தையாகிய ஸ்ரீ கிருஷ்ணனின் உபத்திரவம் தாங்காதவளாக யசோதை ஒரு மர உரலில் கட்ட தீர்மானிக்கிறாள். அதற்காக கயிற்றை யெடுத்து கட்ட முற்படும் போது கயிறு நீளம் போராதிருக்க வேறு கயிற்றைச் சேர்த்து முடிந்து கட்ட முற்படுகிறாள், இவ்வாறு எத்தனை கயிறுகள் கொண்டு வந்தாலும், மேலும் கொஞ்சம் அளவு குறைந்து விளங்குகிறது ஒவ்வொரு முறையும்.

தன் தாய் வெகுநேரம் பல கயிறுகளை ஒன்று சேர்த்ததில் களைப்புற்று கூந்தல் அவிழ்ந்து புஷ்ப மாலைகள் சிதறிய நிலையில் நிற்பதைக் கண்டு ஸ்ரீ கிருஷ்ணன் தன் அன்னையின் மீது இரக்கம்கொண்டு. தன்னுடைய கயிற்றினால் கட்ட உடன்பட்டார்.

ஸ்ரீஹரி எல்லாவற்றையும் அடக்கும் வல்லமையுடையவர்; தன்னை அடக்கும் வண்ணம் கட்டுண்டு இங்கு பக்திக்குத்தான் கட்டுப்படுபவர் என்பதை உணர்த்துகிறார் ஸ்ரீசுகர். இங்கு பக்தர்களுடைய ப்ரேமபக்தி ஒன்றுக்கே எல்லையற்ற சுதந்திரராகிய பகவான் கட்டுப்படுகிறார் என்பது கருத்து.

அன்னை யசோதையின் அன்பு கயிற்றுக்குக் கட்டுண்டது போல், முக்தியை அளிக்கவல்ல ஸ்ரீ பகவான் பிரும்மாவிற்கோ, சிவனுக்கோ, அல்லது தன்னுடனேயே இருக்கும் ஸ்ரீதேவிக்கோ அத்தகைய அருள் நிலையை அளிக்கவில்லை. ஞானிகளுக்கும், தியானம் செய்பவருக்கும் இத்தகைய எளிய வகையில் பகவத் அருள் கிட்டுவதில்லை. பரம ப்ரேம பக்தியை தம்முள் கொண்ட பக்தர்களுக்கு வெகு சுலபமாக ஸ்ரீ பகவான் கருணைபாலிக்கிறார், யசோதைக்கு அருளியது போல அவர்களுடைய ப்ரீதிக்கு கட்டுண்டு.

பி. எஸ். பரமேஸ்வரன், பி.ஏ.,பி.எல்., சென்னை

ஸ்ரீபிரும்மா ப்ரேமபக்தியே பகவானை அடைய ராஜப்பாட்டை என்பதை:

ச்ரேய: ஸ்ருதிர் பக்திமுதஸ்ய தே விபோ க்லிச்யந்தி யே கேவலபோதலப்தயே
தேஷாமஸௌ க்லேச எவ சிஷ்யதே நான்யத்ததா ஸ்தூலதுஷாவகாதினாம்
புரேஹ பூமன் பஹவோபி யோகின — ஸ்தசர்பிதேஹா நிஜகாமலப்தயா
விபுத்ய பகதயைவ கதோபனீதயா ப்ரபேதிரே அஞ்சோ அச்சுயுததே கதிம்பராம் (65, 66)

ஹே! பகவான்! சாயூஜ்ய நிலை பெறவேண்டி வேறுபாடுகள் செய்து தம்மை மேல்நிலைக்கு ஏற்ற வேண்டி பலகாலும் போராட்டத்தை மேற்கொண்டு, உன்னிடம் உண்மையான ப்ரேம பக்தி மார்க்கத்தை விடுத்து செயல்படுவோரின் முயற்சி வெறும் பயனற்ற முயற்சியேயாம் அவர்கள் அரிசி நீக்கிய உமியை இடிப்பவர் போல் பலன் ஏதும் பெருர்.

யோகத்தில் ஈடுபட்டு முயன்ற பல யோகிகளும் முன்பு, அழிவற்ற உன்னை அடைய முடியாது, பேரானந்தனத்தினை பெற இயலாது தமது தவத்தையெல்லாம் உனக்கே அர்ப்பணித்து, தமது பூர்வஜன்ம புண்ய பலனுலும், உனது புகழினையும் குணநிசயங்களையும் எண்ணி எண்ணி தியானித்து, சுத்த சத்வமான ப்ரேம பக்தியையும், அதனுல் தெளிவும் பெற்று உமது உயரிய நிலையையும் அடைந்தனர்.

உத்தவர் நந்தகோபரிடம் ப்ரேம பக்தியைக் குறித்து புகழ்வது:

தஸ்மின் பவந்தாவகிலாத்மஹேதௌ காரணமர்த்ய மூர்த்தௌ
பாவம் விதத்தம் நிதரம் மஹாத்மன் கிம் வாவ சிஷ்டம்யுவயோஸ்து கருத்யம் (67)

மஹான்களாகிய நீங்கள் (யசோதையும், நந்தகோபரும்) பெருமைக்குரிய வாத்ஸல்ய பாவனையுடன் எத்தகைய ஒரு தெய்வ ஸ்வரூபமாக விளங்கும் ஸ்ரீமந் நாராயணனை — ஸ்ரீ கிருஷ்ணனென்ற உங்கள் தனையனுக பெற்று அன்பு செய்யும் பாக்கியம் பெற்றீர்கள். (அதாவது பிரதி பலனை எதிர்பாராது கொள்ளும் ப்ரேம ப்ரீதியை இயற்கையாக ஏற்று விட்டனர் என்பது கருத்து)

மனித ரூபமாக விளங்கும் அந்த பரம்பொருளிடம் ப்ரேமை செலுத்துவதால், யாவரும் அடைய வேண்டிய மனித வாழ்க்கையின் உயர்ந்த (ஒரு குறிக்கோளையும்) பயனையும் பெற்றபின் வேறு நீங்கள் என்ன செய்வதற்கு இருக்கிறது. (உங்களுக்கு வேறு கடமையேதும் இல்லை என்பது கருத்து. அதாவது கர்மங்கள் யாவும் முடிவுற்றன.)

உத்தவர் பக்தி எப்படி உருவாகிறது என்கிருர்:

தானவிருததபோஹோம - ஜபஸ்வாத்யா யஸம்யமை:
ச்ரேயோபிர்விவிதைச்ரான்யை: கிருஷ்ணே பக்திர்ஹி ஸாத்யதே (68)

தானதர்மங்கள், விரத நியமங்கள், வேள்விகள், பகவத் நாம ஜபங்கள், வேத சாஸ்திர படிப்பு, மனதை ஒருமுகப்படுத்தும் மற்ற பல ஆன்மீக உயர்வுபெறும் கட்டுப்பாடுகள் கிருஷ்ணரிடம் ப்ரேம பக்தியை உண்டுபண்ணும்.

கோபிகளின் ப்ரீதி பக்தியினை புகழ்ந்து உத்தவர், பகவத் அருளால் அவர்களுக்கு உயர்ந்த ப்ரேமபக்தி ஏற்பட்டதையும், அவர்கள் மேலே குறிப்பிட்ட எந்த தகுதியையும் பெற்றவர்களல்ல என்பதையும் குறிப்பிடுகிருர்

க்லேமா-ஸ்திரியோ வனசரீர்வ்யாபிசார துஷ்டா:
க்ருஷ்ணே கக சைஷ பரமாதமனி ரூடபாவ:
நன் விச்ரோன்னுபஜதோ அவிதுஷோ அபிஸாக்ஷா—
ச்சேயஸ்தனோப்யகதராஜ இவோபயுக்த:

நாயம் ச்ரியோங்க உரிதாந்தரதே: ப்ரஸாத:
ஸ்வர்யோஷிதாம் நலினகந்தருசாம் க்ருதோஅன்யா:
ராஸோத்ஸாவஅஸ்ய புஜதண்ட க்ருஹீதகண்ட —
லப்தாசிஷாம் ய உதகாத்வ்ரஜ வலலவீனும்

ஆஸாமஹோ சரணரேணுஜுஷாம ஹம் ஸ்யாம்
வ்ருாதாவனே கிமபி குல்மலதௌஷதீனும்
யா துஸ்த்யஜம் ஸ்வஜனமார்யபதம் ச ஹித்வா
பேஜுர்முகுந்தபதவீம ச்ருதிபிர்விம்ருக்யாம் (69, 70, 71)

இந்த ஆயர்பாடி கோபஸ்த்ரீகளின் நிலை எவ்வளவு தாழ்ந்த நிலையானது அவர்கள் வனாந்தரங்களில் தமது பசுக்கள் மேய்க்த புல்வெளிகளைத் தேடுபவர், தம் சமூகத்தில் கற்பு நிலையில் கட்டுபாடுகளற்றவர், பாலுணர்வு மிகுந்த வாழ்க்கையை நடைமுறையில் கொண்டவர். அப்படியிருந்தும அந்த சோரமான வாழ்வின் மத்தியில் சற்றும் காண முடியாத ஒரு அந்தரங்க ஆன்மீக உயர்வுடன் பகவான் கிருஷ்ணனிடம் ஆழ்ந்ததோர் மறக்க முடியாத தீவிர பக்தி ப்ரேமையைச் செலுத்தினர். அது பகவானுடைய பெருமையை வெளிப்படுத்துகிறது, ஏன் எனில்;

உயர்ந்த ஔஷதம் தன்னுடைய உண்மை சக்தியைத் தெரியாத வியாதியஸ்தனைத் தேற்றுவது போல், பகவானுடைய உன்னத நிலையை அறியாது. தன் மனமும், ஆத்மாவும் ஒன்று சேர யாதொரு பண் உண்மை அன்போடு தொண்டு செய்வாளாயின், அவன் கருதயோ, நாகரீகமோ, இல்லாத மூடனேயாயினும் பகவான் உயர்ந்த தன்மையை அளிக்கிறார்.

தேவலோகத்திலிருக்கும் மாதரும் ஏன் சதா பகவானிடத்திலேயே வசித்து இருக்கும் ஸ்ரீலக்ஷ்மிதேவியும் கூட அந்த கோபிகைகளுக்கு அளித்த அருள் விசேஷத்தை பகவானிடமிருந்து பெற முடியவில்லை கோபிகைகள வ்ரஜத்தில ராஸ லீலையின் போது பகவானுடைய கைகளை தமது தோள்களில் தாங்கும் பரம பாக்கியத்தைப் பெற்றனர்; அப்படியிருக்க மற்ற பக்தர்களைப பற்றி என்ன சொல்ல இருக்கிறது என்கிறார் உத்தவர். அதாவது கோபிகைகளின் நிலை மிக உயர்ந்தது என்பது விளக்கப்படுகிறது.

கோபிகைகள் தமது குடும்பம் சுற்றம் இவற்றைத் துறந்ததோடு, உலக மூழ்கியிருக்கும் கட்டுப்பாடான ஒழுககம் முதலிய தளைகளை யெல்லாம் விட்டு, வேதங்கள் எல்லாம் தேடும் பகவான் ஸ்ரீ கிருஷ்ணனின் பாதங்களைத் தேடியடைந்தனர் அத்தகைய கோபியரின் பாத தூளிகளினால் மூடப்பட்ட புதராகவோ, கொடியாகவோ, அல்லது ஒரு செடியாகவோ பிருந்தாவனத்தில் நான் இருக்க விருமபுகிறேன் என்கிறார் மகாத்மாவாகிய உத்தவர்

ப்ரேம பக்தியின் இலக்கணம் பாகவதம். பாகவதத்தில் கோபிகளின் நிலை வெகு தெளிவுடன் பார்க்க வேண்டிய ஒருநிலை, ராஸக்

கிரீடை, ஸ்ரீகிருஷ்ணரின் ஏழாவது வயதில் நடந்த சம்பவம். ஸ்ரீவியாஸர் ஒரு மகா கவி யென்பதால் ச்ருங்கார ரஸபாவத்தை அதில் ஏற்றி கல்மஷமற்ற கோபியரின் மனதில் பகவானை ஒரு நாயக பாவத்தில் உருவகப்படுத்தி தமது கற்பனையால் சிறந்த கவிதையை உருவாக்கியுள்ளார்.

மனதின் வேகத்தில் குழந்தை நாயகனாகவும், தம்மை நாயகிகளாகவும் எண்ணுகின்றனர் கோபிகைகள் அப்பொழுது அவர்கள் தம் சுற்றமும், உள்ளும் புறமும் (சமூக கட்டுப்பாடுகள் துறந்து) எல்லாம் துறந்து ஸ்ரீகிருஷ்ணனையே தமது எல்லாமாகக் கொண்டு தொழுது அவரிடம் சமமாக ராஸக்கிரீடை செய்கின்றனர்.

சுத்த சத்துவமான பரம்பொருள், எல்லோரிலும் ஆத்மாவாக உறைகிறது அந்த பரம்பொருளைத் தழுவி தமது ஆத்மாவைப் பூர்ணமானதாக உயர்த்துகின்ற பெருமை கோபிகைகளுக்கு பகவத் கிருபையால் கிட்டியது. இது வேறு யாருக்கும் கிட்டவில்லை என்பதே உத்தவரின் உறுதியான நிலை.

(தொடரும்)

*

பண்பும், மரியாதையுடனுமிருப்பவன் உலகில் எதையும் சாதித்து விடுவான். பகைமை பாராட்டுபவனும் பணிந்து போவான். —குகதாசர்

அன்பு மட்டும் ஒருவனிடம் இருந்தால் போதாது. பரிவும், பாசமும் ஏற்பட்டால்தான் கருணை பிறக்கும். ஒருவனுக்கு உதவும்படி உள்ளே தூண்டிவிடும். கருணையுடன் அன்பு செலுத்துபவன்தான் மற்றவனுக்கு உபகாரம் செய்வான். அன்பு மட்டும் காட்டுபவன் பார்த்துக்கொண்டு ஐயோ பாவம்! என்று சொல்லிவிட்டு போய்விடுவான். —குகதாசர்

திருப்பூரில் நீண்ட காலமாக பத்திரிகை நிருபராகவும், பத்திரிகை விற்பனையாளராகவும் தொண்டாற்றி வரும் எனது நண்பரும், குண்டுசி, ஏஜண்டுமான ஸ்ரீ. C. V. S மணியன் அவர்களின் மகள் சௌபாக்யவதி ஜெயந்தியின் திருமணத்தை சென்ற ஜனவரி மாதம் 31ம் தேதி திருப்பூரில் மிகவும் சிறப்பான முறையில் நடத்தி வைத்தார். மணமகன் சிரஞ்சீவி சுந்தரேசன். பொருத்தமான ஜோடி. மணவிழாவிற்கு உறவினர், வெளியூர், உள்ளூர், வியாபார பிரமுகர்களும், பத்திரிகையாளர்களும் வந்திருந்து வாழ்த்து கூறினார்கள்.

ஜெயந்தி – சுந்தரேசன்

பல வருடங்களாக குண்டூசிக்கு நல்ல முறையில் ஆதரவு அளித்துவரும் திரு மணியம் தம்பதிகளுக்கும், புதுமண தம்பதிகளுக்கும் முருகப்பெருமானின் திருவருளை வேண்டி நலலாசிகூறி வாழ்த்துகிறேன். —ஆசிரியர்

ஆன்மீக சிந்தனை

டி. வி. வி.

நமது மனோபாவம் விசித்திரமானது குழந்தையாக பிறந்ததும், பெற்றவர்கள் பாசத்திலும், ஆசையிலும் பால பருவத்தை அடைகிறோம். சிலர் வசதி மிகுந்த குடும்பத்தில் ஜனிக்கின்றனர். பலர் வருவாயில்லாத ஏழ்மையில் வளர்கின்றனர்.

ஆரம்ப கல்வியுடன் பலருக்கு கல்வி பயில வசதியிருப்பதில்லை. பயிலும் சிலர் கல்வியில் சிறந்த மாணவர்களாக வியக்கும் வகையில் பிரகாசிக்கின்றனர்.

வசதி மிகுந்த குடும்பத்தில் பிறந்த அனைவரும் கல்வியில் பிரகாசிப்பதில்லை. பெரிய படிப்பு என்றில்லாத பலர் ஒரு தொழிலில் ஊக்கமாக ஈடுபட்டு முன்னேறி விடுகிறார்கள்.

இப்படிப்பட்ட பிரச்னை மனித பிறவிக்கு நிகழ்ந்து ஆட்டிவைக்கப்படுவது யாரால்?

பரம்பொருள், கடவுள், ஆண்டவன், தெய்வம் என்ற பல பெயரில் சிருஷ்டிக்கப்பட்ட உயிரினங்கள் யாவும் இயங்குவது நிதர்சனம்.

இதனால் ஐந்தறிவு உள்ள மனித குலம் தனாசரி தியானத்திலே எல்லாம் அவன் செயலென்று இன்பத்திலும் துன்பத்திலும் ஈடுபட வேண்டியது அவசியம்.

யாருக்குத்தான் முயற்சி இல்லை. சதா மூக்கை பிடித்துக்கொண்டு தெய்வமே கதியென்று சோம்பேறியாக இருக்க இயலுமா?

எல்லாரும் துறவியாக முடியுமா? அவர் அவர்க்கென்றே கருமத்தையும் அயராமல் செய்யவேண்டும். பலனை முன்னிட்டல்ல கர்மம், தூய்மையுடன் கருமத்தில் ஈடுபட வேண்டும். பலனை நாம் காணாத சக்தியிடம் விட்டு விடுவது சாலவும் சிறந்தது.

குடும்ப பாரம்பரியமும், பெற்றோர் செய்யும் நல்வினையும், தீவினையும் அவரவர்கள் சந்ததியை நிச்சயம் வந்தடையும். ஒருவன் அதிர்ஷ்டவசமாய் உயர் பெற்றால் அவன் ஆணவம் அகங்காரத்திற்கு அடிமையாகக் கூடாது.

தாழ்ந்து விட்டால் சிரத்தையுடன் கர்மவினையை சகித்துக் கொள்ள வேண்டும்.

எந்த அடிப்படையில் செல்வத்தை நாடி ஓடுகிறோம்?

செல்வத்தை சேமிக்கும் தனி மனிதனே இதை பூராவும் ஆண்டு அனுபவிக்கின்றானா?

ஆகவே, வாழ்வில் பகவத் கிருபையால் உயர்வு பெறும் ஒவ்வொருவரும் நல்ல வசதியில் உள்ளபோதே நற்பணியில் ஈடுபட்டு நற்கதி பெற வழி தேட வேண்டும். சிந்தியுங்கள் செயல்படுங்கள்.

★

உன்னைச் சுற்றி வந்து உன் பணத்தில் வயிற்றுப்பாட்டை கழித்து வருபவர்கள் உன்னை பாராட்டியே காலம் தள்ளுவார்கள். அவர்களில் யார் உன்னை எதிர்த்து துணிந்து உண்மையை சொல்லுகிறானோ, அவனுடைய அறிவுரையை அலட்சியம் செய்யாதே.

—குகதாசர்

மூன்று வித கஷ்டங்கள்

கலியுகம் மிகவும் வேகமாக முன்னேறிச் செல்லும் கோரமான காலம்.

விஞ்ஞானத்தின் வளர்ச்சி உச்சகட்டத்தை அடையும் காலம். எந்த நிலையிலும் எப்பொழுது முடிவு பெறும் என்று சொல்ல முடியாது.

இந்த நிலையில் ஞானமார்க்கமும் உச்சநிலையில் வளர்ச்சி பெற்றால்தான் உலகம் சற்று சாந்தியும் மகிழ்ச்சியும் அடைய முடியும்.

பொதுவாக மக்களுக்கு ஏற்படும் மூன்று விதமான கஷ்டங்களைப் பற்றி திண்டுக்கல் ஸ்ரீ. இராமகிருஷ்ண சுவாமிஜி தரும் விளக்கத்தைக் கவனியுங்கள்.

—ஆசிரியர்

ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதி-தெய்விகம் இவைகள் மூன்று விதமான கஷ்டங்களை மனிதனுக்கு உண்டாவதை விளக்குகிறது.

1. ஆத்யாத்மிகம்: இது இரண்டு வித துக்கத்தை அளிப்பவை.

ஆதி என்பது மனம், புத்தியில் ஏற்படும் சித்த சுவாதீனம் அற்றுப் போதல், பைத்தியம், ரேகை, மயக்கம் போன்ற பல கஷ்டங்களை. காம, குரோத, லோப, மோக, மத, மாச்சரிய, ராக, துவேஷ, பொறாமை பயம, வஞ்சனை, அகந்தை, (செருக்கு) மமதை முதலியன ஆத்யாத்மிக விஷயங்களுக்கு குந்தகம் விளைவிக்கும் துர்க்குணங்கள், மற்றும் இவைகள் யாவும் மன நோய்களுக்கு ஆதி என கூறப்படுகிறது.

இரண்டாவது, சரீரத்திற்கு ஏற்படும் நோய், வியாதி எனப்படுகிறது. இக்கஷ்டங்கள் எல்லாம் நமக்கு சர்வ சாதாரணமாக வந்து கொண்டே இருக்கிறது. இக்கஷ்டங்களை நாம் அனுபவித்துக் கொண்டு இருக்கிறோம்.

2. ஆதி பௌதிகம்: மனிதர், பசு பக்ஷி, புழு பறவைகளால் ஏற்படுவது.

3. ஆதி-தெய்விகம்: வாயு, அக்கினி ஜலம், விருஷ்டி, தேச, கால நட்சத்திர சூரிய, சந்திர முதலிய அபிமான தேவர்களால் ஏற்படுபவை.

இவைகளிலிருந்து மனிதன் சற்றே கடைத்தேற பகவத் காரியங்களிலும், ஹோம, யக்ஞாதிகளிலும் உண்மையான பக்தியுடன் ஈடுபட வேண்டும்.

மகான்களாலும் சாதுக்களாலும் செய்யப்படும் புனித காரியங்களுக்கு மக்கள் ஆதரவு தர வேண்டும்.

சில போலி பக்தர்கள் வியாபார நோக்குடன் செய்யும் செப்படி வித்தைக்காரர்களிடம் ஏமாறாமல் இருக்க வேண்டியதும் முக்கியம்.

மிக மிக முக்கியமானது ஒவ்வொருவரும் பகவான் நாமாவை சிரத்தையோடு உள்ளுணர்வுடன் ஸ்மரணம் செய்து அவன் திருவடிகளை சரணடைந்துவிட வேண்டும். நிச்சயம் நமக்கும் உலக க்ஷேமத்திற்கும் இவை நல்ல பலனைத் தரும் என்பதில் ஐயம் இல்லை.

விளக்கம்:

ஸ்ரீ இராமகிருஷ்ண சுவாமிகள்
முகாம் — பம்பாய்

தில்லியில் ஓர் அன்பு மனிதர்

புது தில்லியில் குடியரசு தினமாகிய ஜனவரி 26-ம் தேதியன்று, பாரத உப ஜனாதிபதி திரு. எம். ஹிதயதுல்லா அவர்கள் மத்திய அரசு கூட்டு கைத்தறி கமிஷனர் டாக்டர் என். பி. சேஷாத்திரி அவர்களுக்கு தேசிய கைத்தறி விருதையும், தங்கப் பதக்கத்தையும் அளித்துப் பாராட்டினார்.

டாக்டர் சேஷாத்திரி ஒரு தலைசிறந்த நிர்வாகி, கலாச்சார சேவைகளை திறமாக செய்திருக்கிறார். இவரது சேவைகள் நாட்டுக்கு மேலும் சிறந்து ஓங்க வேண்டும் என்று புகழ்ந்து பேசினார்.

இம்மாதிரி உத்தமமான உண்மை உழைப்பாளிகளுக்கு அளிக்கப்படும் விருதுகள், பதக்கங்கள் தான் பெருமையடைகின்றன.

இவர் எங்கு சென்றாலும் முதலில் அவ்விடத்தில் உள்ள கோயிலுக்குச் சென்று வழிபட்டுத்தான், பின்னர் வேலையை தொடங்குவார். உலகம் முழுவதும் சென்றாலும், தமது குல ஆசாரத்தை மறக்காதவர். நெற்றியில் எந்நேரத்திலும் "திருமண் ஸ்ரீசூர்ணம்" பார்க்கலாம். யார் இவரிடம் சென்றாலும் "வெறுங்கையுடன்" திரும்பியதில்லை. இல்லை என்பது இவரிடம் இல்லை

இவருடைய வீட்டிற்குள் நுழையும்போதே புனிதமான திருக்கோயில் கர்ப்பக்கிரகத்திற்குள் செல்வதுபோல் பக்தி மணம் கமழும்.

தென்னகத்திலிருந்து தலைநகர் செல்லும், யாராயிருந்தாலும் அவர்களுக்கு ஏற்றவகையில் பயனுள்ள சேவை செய்வது இவருடைய பரந்த நற்பண்பை காட்டுகிறது.

தில்லியில் வாழ்ந்து வரும் இந்த அன்பு மனிதர் டாக்டர் சேஷாத்திரி அவர்களுக்கு நீண்ட ஆயுளும், ஆரோக்கியமும் அளித்து மக்களுக்கு மேலும் பல நற்பணிகளை செய்ய எம்பெருமானை பிரார்த்தித்து நல்லாசி கூறி வாழ்த்துகிறேன்.

—ஆசிரியர்

உண்மையான பக்தியின் இயல்பு

சிருங்கேரி சாரதா பீடாதிபதி ஸ்ரீ. பரமாச்சாரியார் சுவாமிகள்

மதுசூதன ஸரஸ்வதி என்பவர் அத்வைத ஸித்தி என்ற நூலின் புகழ் பெற்ற ஆசிரியர். தலைசிறந்த அத்வைதியாக விளங்கினாலும் அவர் கிருஷ்ணபக்தர். கண்ணன் மீது அவர் உள்ளம் கவரும் சுலோகங்களை எழுதத் தவறவில்லை. பக்தியின் மூன்று வித நிலைகளைப் பற்றி அவர் தெளிவுபடுத்தியுள்ளார். அதன்படி பக்தியின் முதல் நிலை என்னவென்றால், பக்தன், நான் உன்னுடையவன் என்று இறைவன் விஷயத்தில் கொண்டிருக்கும் மனோபாவமேயாகும்.

அதாவது, பக்தன் இறைவனிடம் தன்னையே அர்ப்பணித்து விடுகிறான் என்று சொல்லலாம். இறைவனின் உண்மையான சேவகனிடத்தில் ஒரு விசேஷகுணம் உண்டு. அவன் தனது சேவைக்காகவும் பக்திக்காகவும் இறைவனிடமிருந்து பதிலுக்கு ஒன்றும் எதிர்பார்க்க மாட்டான்.

இவ்விடத்தில் பாகவதக்கதை ஒன்றை நினைவு கூறலாம். இரண்யகசிபு, பிரகலாதனிடம் ஒரு தூணைக் காட்டி அங்கே இறைவன் இருக்கிறானா? என்று கேட்டான். தூணிலும் இருக்கிறான், துரும்பிலும் இருக்கிறான் என்பதை நிரூபிக்க, இறைவன் நரசிம்மாவதாரம் எடுத்து அந்தத் தூணிலிருந்து தோன்றினான். நரசிம்மமூர்த்தி ஹிரண்யகசிபுவைச் சம்ஹாரம் செய்து முடித்தார். இது நடந்த பின்னும் அவனுடைய கோபம் அடங்கவில்லை. தேவர்களும், மகாலட்சுமியும் கூட அவரை நெருங்குவதற்கு அஞ்சினார்கள்.

கடைசியில் மற்றவர்கள் பகவானைப் பிரகலாதனை தான் சாந்தப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். இளஞ்சிறுவனான அவனும் அதற்கு ஒப்புக் கொண்டான். மனத்தில் சிறிதளவும் அச்சம் இல்லாமல், கோபமே உருவான இறைவரிடம் சென்ற பிரகலாதன் அவரைப் பலவாறு துதித்துப் பாராட்டினான். அன்புடன் நமஸ்கரித்தான். உடனேயே பகவானின் கோபம் தணிந்தது. கருணை பெருகியது. உடனே பகவான் தாம் அமர்ந்திருந்த ஆசனத்திலிருந்து எழுந்து தம் கரத்தை சிறுவனின் தலையில் வைத்தார். தம் பக்தன் விஷயத்தில் மிகவும் திருப்தியடைந்த இறைவர், தம்மிடம் ஒரு வரம் கேட்குமாறு பிரகலாதனிடம் கூறினார். ஆனால், தான் இறைவரிடமிருந்து ஒன்றையுமே விரும்பவில்லை என்றே பதில் கூறினான் பிரகலாதன்.

இது சம்பந்தமாகப் பாகவதத்தில் ஒரு சுலோகம் இருக்கிறது. அதில், பிரகலாதன் இறைவரை நோக்கி, எவனொருவன் இறைவரிடமிருந்து ஏதாவது விரும்புகிறானோ அவன் வியாபாரியே தவிர இறைவரின் சேவகன் அல்ல என்று கூறுகிறான்.

இந்தக் கதை நமக்கு இரண்டு கருத்துக்களைத் தெளிவாக்குகிறது. இறைவரின் உண்மையான சேவகன், இறைவரைத் தவிர வேறெந்த அடைக்கலத்தையும் அறியாதவன். இதனால் தான் பிரகலாதன் இறைவரிடம் செல்லும் போது அச்சம் இல்லாது சென்றான்.

இந்தச் சுலோகத்திலிருந்து தெளிவாகும் இரண்டாவது கருத்து என்னவென்றால், இறைவருடைய உண்மையான சேவகன் இறைவரி

டமிருந்து ஒன்றையுமே பெற ஆசை படமாட்டான், என்பது. பார்க்கப்போனால் மோட்சத்துக்காகக் கூட அந்நகைய பக்தன் பிரார்த்தித்துக் கொள்ளமாட்டான்.

சிவானந்த லஹரியில் சங்கரர் இறைவரை நோக்கி, துன்பம் நிறைந்த இந்த உலக நிலையிலிருந்து என்னை விடுவிக்கவில்லை. நான் இவ்வாறு அடிபணிவதுதான் உனக்குப் பிடிக்கும் என்றால் நான் அடைய வேண்டிய அனைத்தையும் அடைந்தவனாகிவிட்டேன் என்று கூறுகிறார் பகவானின் திருப்திக்குப் பிறகு பக்தன் அடைய வேண்டியது ஒன்றுமே இல்லை என்னும் மனோ பாவம் இங்கே காட்டப்படுகிறது

பக்தியின் இரண்டாவது நிலை. இறைவர் விஷயத்தில் அவர் என்னைச் சேர்ந்தவர் என்னும் மனோபாவமேயாகும். இங்கே இறைவரது நலத்தில் கூடப் பக்தனுடைய மிகுந்த அக்கரை கொள்கிறான். பக்தன் ஒருவன் தன்னைக் கவனித்துக்கொள்ள வேண்டும் என்ற தேவை இறைவருக்கு இல்லை. ஆனாலும், இறைவர் பக்தனுடைய அன்புக்கு இணங்கி, அவனுக்குக் கட்டுப்படவும் செய்கிறார்.

இங்கே யசோதை, கிருஷ்ணனிடத்தில் வைத்திருந்த அன்பை சற்று நோக்குவோம் யசோதை கிருஷ்ணனுடைய நலத்தில் மிகுந்த அக்கறை வைத்திருந்தாள். அவளைப் பொறுத்தவரையில் கிருஷ்ணன் பிரியமான குழந்தையாகவே இருந்து வந்தானே தவிர, உத்தமமான இறைவனாக அல்ல பார்க்கப் போனால்கிருஷ்ணனே அவனுடைய தாய் பாசத்தை விருப்பத்துடன் சுவைத்து வந்தான்போலும் ஏனெனில், தான் இறைவன் என்னும் அறிவையே அவனியிருந்து நீக்கி விட்டிருந்தான் அல்லவா? மேலும் யசோதை தன்னை உரலோடு கட்டவும் அவன் அனுமதித்தான். இந்த உதாரணம் பக்தியில இரண்டாவது நிலையை நமக்கு தெளிவுபடுத்தும்.

பக்தியின் மூன்றாவது நிலையாதெனில், இறைவர் விஷயத்தில் நான் தான் அவர் என்ற மனோபாவமேயாகும். சுருங்கக் கூறினால் அத்வைத நிலைதான் உத்தமமான நிலையாகும். சிலர் இங்கு அத்வைதம்தான் எவ்வாறு பக்தியின் உத்தம நிலையாகும் என்ற சந்தேகத்தைக் கிளப்பலாம் இதற்குப் பதில் என்னவென்றால் மற்றவர்களெல்லாம் பகவானிடத்திலிருந்து மிக நுண்ணிய அளவு பிரிவையாவது பொறுத்துக் கொள்ளலாம் என்று இருக்கும் போது, உத்தமமான பக்தன் இவ்வித நுண்ணிய அளவுப் பிரிவைக் கூடப் பொறுத்துக் கொள்ளமாட்டான். பிரிவு என்பதை எப்போது பூரணமாக நீக்குவது?

எப்போது ஒருவன், தான் பரம் பொருளைக் காட்டிலும் வேறானவன் அல்ல என்பதை உணர்கிறானோ, அப்போதுதான் பிரிவு என்பது முழுவதும் நீங்கும் இது விஷயமாகக்கீதையில் கிருஷ்ணன், தத்துவத்தை அறிந்தவன் எனது ஆத்மாதான் என்று கூறுவதைப்பார்க்கலாம்.

தொகுப்பு. —சேது, சென்னை

KR சன்ஸ் ஜுவல்லர்
போன்: 23033
கோவை.

வியாஸ பாகவதம்

கவிஸேரி
சுப்பிரமணிய
சாஸ்திரிகள்

75

கோபிகளிடம் ஸ்ரீ பகவான் மேலும், மறைந்திருந்த என் பொருட்டு வீட்டையும் சுற்றத்தையும் விடுத்து மனம் தூண்டிய வழியே சற்றேனும் சுற்றத்தை மதியாது என்னையே சித்தத்தில் இருத்தி ஓடிவந்த உங்களை நான் மறப்பது எங்ஙனம்? என்னிடம் உங்களுக்கு அருமை கொள்வது தகுதியல்ல. களங்கமற்று அன்பு செய்யும் உங்களுக்கு ஆயுட்காலம் முழுவதும் பிரதிபலன் செய்யினும் தீராது என்றார்.

மதியை மயக்கும் இம்மொழியைக் கேட்ட கோபிகள் தம்மை மறந்தனர். மேலும், தம்மை விடுத்துச் சென்ற கிருஷ்ணனின் பிரிவினை துயரை அறவே மறந்தனர். ஒருவருக்கொருவர் கைகோத்து நிற்கும் அந்த கோபிகளின் நடுவே ஸ்ரீபகவான் ராஸக்ரீடை செய்தார். ராஸம் என்பது ஒருவகை நடனமாகும். கோபிகள் யாவரும் வட்டமாக நிற்க, இரு கோபிகளின் நடுவே ஸ்ரீகிருஷ்ணன் பிரவேசித்து அவர்கள் தோள்களில் கைகளைக் கட்டி அவர்களுடன் நடனம் ஆடினார்.

ஒவ்வொரு கோபிகையும், தன் சமீபத்தில் அவர் இருப்பதாக எண்ணினாள். யோக மகிமை கொண்டு ஒவ்வொரு கோபிகையும் தனித் தனியே தன்னுடன் ஸ்ரீகிருஷ்ணன் இருப்பதாக எண்ணச் செய்து அவர்களோடு சேர்ந்து களித்தார். அவர்களும் மெய்மறந்து ஆனந்தமாக களித்தனர். கானம் செய்தவராய், வளைகள், பாதச் சிலம்புகள், சலங்கைகள் அசைந்து சப்தித்தவராய் கோபிகள் நர்த்தனம் செய்ய அவர்கள் நடுவில் ஸ்ரீகிருஷ்ணன் ஆடித் திரிந்தான்.

சிறுவனாகிய ஸ்ரீபகவான் அந்த கோபியர் நடுவே நின்று ஆடுவதைக் காண வானோர் எல்லாம் வந்து நின்றனர் விமானங்களில். சிறுவனாகிய பகவானின் சரீரத்தை ஸ்பர்சித்த சந்தோஷத்தில் கோபிகள் உரக்க கானம் செய்தனர். அந்த கானம் ஜகத் முழுவதும் வியாபித்தது. ஒரு கோபி ஸ்வர ஜாதிகள் தனியே தெரியும் வண்ணம் பாடினாள். ஸ்ரீகிருஷ்ணனும் அவளை ஆமோதித்து த்ருவ தாளத்திற்கு ஏற்ப, தானும் பாடி அவளை கௌரவித்தார்.

பல நாழிகைகள், ராஸத்தில் ஆடிக் களைத்த கோபி ஒருவள், ஸ்ரீகிருஷ்ணனின் தோளில் சாய்ந்தாள். ஒரு கோபி சந்தனக் குழம்பு மணக்கும் ஸ்ரீகிருஷ்ணனின் கையை முகர்ந்து முத்தமிட்டு மயிர்கூச்ச

விட்டு நர்த்தனம் செய்தாள். மற்றொருவள் கிருஷ்ணரின் குண்டல அசைவுகளால் மகிழ்ந்து அவருடைய கன்னத்தைத் தனது கன்னத்துடன் சேர்ந்து முத்தமிட்டாள். ஒவ்வொரு கோபியும் கிருஷ்ணனை தனது நாதனாக எண்ணி அவருடைய குணங்களைக் கானம் செய்து நர்த்தனமாடினர்.

வானத்தில் சந்திரனும், மற்றவரும் கிருஷ்ணனின் விளையாட்டைக் கண்டு மோகித்து நின்றார்கள். கிருஷ்ண வேடம் தரித்த பகவான், தான் ஆத்மாறான கோபிகளுடன் ரமித்தமாக பாவனை செய்து விளங்கினார். மேலும், களைத்திருந்த கோபிகளுடன் அப்போது கிருஷ்ணன் ஜலக்கிரீடை செய்யும் எண்ணங் கொண்டு ஜலத்தில் மதயானை இறங்குவது போல் இறங்கினார். கோபிகள் சிரித்த முகத்துடன் கிருஷ்ணனின் முகத்தின் மீது ஜலத்தை வாரி இறைத்து அவருக்கு அபிஷேகம் செய்தனர். நீராடிக் கரையேறிய எல்லோரும் வனத்தில் திரிந்தனர் இவ்வாறு பல இரவுகள் ஸ்ரீ கிருஷ்ணரின் கட்டளைப்படி கடந்தன.

இதனைக் கேட்டு வந்த பரீக்ஷித் மகாராஜா, ஸ்வாமி! தர்மத்தை நிலைநிறுத்தவும், அதர்மத்தை ஒழிக்கவும் கிருஷ்ணன் அவதாரம் எடுத்தார். அப்படியிருக்க ஆயர்ப்பாடி கோபிகளுடன் இரவெல்லாம் அவர் களித்தது சரியா? என்று சுகரைப் பார்த்து வினவினார்.

சுகர் இதனைக் கேட்டு, நெருப்பு கெடுதல், நல்லது என்ற பாகுபாடு இன்றி எல்லாவற்றையும் விழுங்கி விடுகிறது. ருத்ரன் விஷம் உண்டான், எல்லோராலும் அருந்துவது இயலுமா? காமத்தினால் கட்டுண்டவருக்கு விதிக்கப்படும் வழிகள் இறைவனுக்கு விதிக்கப்படுவதற்கில்லை. மாயையை தன் வசமாக்கி அவதரித்த பகவானுக்கு பந்தமும், செய்கையால் பலனும், ஏது நாடி வருவாருடைய கோரிக்கை நிறைவேற வேண்டி கருணையும் அருளும் தான் உண்டு.

ஆயர்பாடி மாதரின் மனதிலிருக்கும் ஆத்மஸ்வருபம் அவன் தானே. கிருஷ்ணன் நடித்து காண்பித்தது ஒரு மாயாவிலாஸம். பிருந்தாவனத்தில் கோபிகள் தன்னுடன் களிக்கும் போது ஆயர்பாடி ஆடவர் தமது கோபிகள் தம்முடன் இருப்பதாக கருதினர். அதிகாலையில் கோபிகள் வீடு திரும்பினர் என்பது அவர்களுடைய அறிவுக்கு தெரியவில்லை. அதனால் அவர்களுக்கு கிருஷ்ணனிடம் அசூயை ஏற்படக் காரணம் இல்லை. இந்த ராஸக்கிரீடை வைபவத்தை மனதில் பரம பக்தியோடு கேட்பவன் பகவானிடம் ப்ரேம பக்தியடைவான், வைராக்கியம் நிச்சயம் உண்டாகும் என மொழிந்தார் முனிவர்.

பகவானின் லீலைகள் பக்தனை திருப்தி செய்ய வேண்டி, ஆயின் அவன் நிலை அப்போது ஒரு ஏழு வயது சிறுவன். ப்ரேம பக்தியால் ஆயர்பாடி பெண்கள் அவனை தமது நாதனாக (தெய்வமாக) உருவகப்படுத்தி அவனுடன் நாயகி பாவத்தில் களித்து மகிழ்ந்தனர். இங்கு ஜீவபரமாத்ம தத்துவம் தான் விளங்குகிறது இந்த தத்துவம் கவியால் உருவகப்படுத்தி கவின்னயத்தோடு கூறும் தொகுப்பு ராஸக்கிரீடை.

ஒருவன் தன்னுடைய குறைகளைப் பற்றியே அதிகம் சிந்தித்தால், தாழ்வு எண்ணங்கள் ஏற்படும். நிறைகளைப் பற்றியே அதிகம் சிந்தித்தால், கர்வம் ஏற்படும். ஆகவே, நிறைகளால் குறைகளை வென்று சமநிலை அடைதல் வேண்டும்.

இதனை ஒரு உயர்ந்த பக்தியோடு நோக்கி கேட்பவருக்கு பகவத்பக்தி யேற்படும் என்பதில் ஐயமில்லை. தவறான மனத்தோடு அந்த வைபவத்தை தனக்கு ஒரு முன்மாதிரியாக ஏற்று செயல்படுபவன் மகா மூடனாவான். நாசமுமடைவான்.

பகவான் சர்வாந்தர்யாமி. சர்வ சுவதந்திரன். எல்லையற்றவன், பரப்பிரம்மம். அவனுக்கு ஏது காமம், பலன் என்ற பாகுபாடு, சுகம், துக்கம் என்பவைகள். ஆகவே தானாக மாயையை ஏற்று பக்தர்களுடைய அபீஷ்டங்களைப் பூர்த்தி செய்ய அவதரித்தான்.

இங்கு கோபிகைகளாக விளங்குபவர் முன் பிறவியில் முனிவர்களாக இருந்து ஸ்ரீராமபிரானை அடைய முடியாதவரும், தேவமாதரும், வேதங்களும் மனித வடிவில் வந்து பரம்பொருளை அடைய எண்ணியதாக அறியப்பட வேண்டும்.

“கோபிகா கீதம்”, ‘ராஸக்கிரீடை’ இரண்டும் பரம பக்தனின் உயரிய நிலையில் வேண்டிய பக்திரஸம் நிறைந்த காவியமாகும்.

ஒருகால், கோபர்கள் அனைவரும் அப்பிகாவனம் சென்று ஈஸ்வரனை குறித்து நோன்பு நோற்று பார்வதி பரமேஸ்வரர்களைத் தொழ எண்ணினர். அம்பிகாவனம் அன்னைக்குப் பிரியமான இடம். அங்கு கோபர்கள் ஸரஸ்வதி நதியில் நீராடி சிவனையும் பார்வதியையும் பூஜித்தனர். அந்தணருக்கு பொன்னும் பசுவும் தானம் செய்தனர். இறைவன் இதனால் நம்மைக் காப்பான் என எண்ணி வேண்டிக்கொண்டு நோன்பு ஏற்றனர்.

அன்றிரவு வீதியில் தூண்டப்பட்டதாகிய ஒரு பெரும் பாம்பு பசியுடன் சஞ்சரித்து படுத்திருக்கும் நந்தகோபரை விழுங்கத் தொடங்கியது மெதுவாக. நந்தன் அப்

பழநியம்பதியில் கலியுக வரதனாக அவதரித்த
ஸ்ரீ பழநி ஆண்டவரை தரிசிக்கும் பக்தகோடிகள்
அனைவரும் விரும்புவது

பழநி

S. சித்தனாதன்

ஸ்பெஷல் ஜவ்வாது வாசனை விபூதி, ஸ்பெஷல் பஞ்சாமிர்தம்

*

பரிமள விலாஸ்

S. சித்தனாதன் சன்ஸ், விபூதி ஸ்டோர்,

அடிவாரம், பழநி-624601.

போன்: கடை 405 வீடு & ஸ்டோர்: 406

போறு கிருஷ்ணு! கிருஷ்ணு! பெரும் பாம்பு என்னை விழுங்குகிறது என்று கத்த, அங்கிருந்த இடையர்கள் பரபரப்புடையவராய் அந்த ஸர்ப்பத்தை கட்டைகளால் புடைத்தனர். ஆயினும் பாம்பு நந்தனை விடவில்லை அப்போது அங்கு வந்த ஸ்ரீகிருஷ்ணர் தனது காலால் அந்த ஸர்ப்பத்தை உதைத்தார். அவருடைய பாதம் பட்ட மாத்திரத்தில் பாபங்கள் நீங்கிய பாம்பு ஒரு வித்யாதரரூபம் பெற்று அழகனுக விளங்கினுன்.

நல்ல லக்ஷணங்களும், காந்தியுடனும் விளங்கும் அந்த வித்யாதரனைக் கண்ட ஸ்ரீகிருஷ்ணன், யார்? என்று வினவ, அவன், தான் சுதர்சனன் என்ற கந்தர்வன் என்றும், ஒருகால் தான் அழகு மிகுந்தவன் என்ற செருக்கால் விமானத்தில் ஏறிச் செல்லும்போது அங்கிரஸ முனிவரின் விரூபத்தைக் கண்டு பரிகாசம் செய்ததால், அவருடைய சாபத்தால் இந்த ஸர்ப்ப ரூபமெனவும், தேவரீரது பாத ஸ்பரிசத்தினுல் பாபங்கள் நிவர்த்தியாயின. சம்சார பந்தங்கள் விலகியது. எனக்கு விடை கொடும் என நமஸ்கரித்தான்.

கிருஷ்ணர் விடை கொடுக்க அவன் ஸ்வர்க்கம் சென்றுன். கோபர்கள் கிருஷ்ணனின் மகிமையைக் கண்டு ஆனந்தமடைந்தவராய் அவ்வனத்தில் செய்ய வேண்டிய நோன்பை முடித்துக் கொண்டு சந்தோஷமுடையவராய்--கிருஷ்ண சரிதத்தை மிக மகிழ்ச்சியுடன் பாடிக்கொண்டு கோகுலம் சென்றனர்.

மற்ரெரு இரவு பிருந்தாவனத்தில் ஆயர்பாடி மங்கையர் பசுக்களுடன், ஸ்ரீகிருஷ்ணர், பலராமர் எல்லோரும் விளையாடி களித்திருந்தனர் கோபிகைகள் அவர்களை துதித்துப் பாடினர். சந்திரனும் நட்சத்திரங்களும் பிரகாசித்தன. குமுதம் வாசனை சொரிந்தது. தென்றலில் குமுத மல்லிகை புஷ்பங்களின் நறுமணம் கமழ்ந்தது. வண்டுகள் ரீங்காரமிட்டன. அச்சமயம் ஸ்ரீராமகிருஷ்ணர்கள் வேணு கானம் செய்தனர். மோகனமான அந்த ஸ்வரகானத்தில் யாவரும் மெய்மறந்தனர்.

அந்த வேளையில், குபேரனின் பணியாளான சங்கசூடன் என்ற ஒருவன் அங்கு வந்தான். அவன் கோபிகைகளை வடக்கு திசையில் துரத்தி ஓடினுன். அவர்கள் பயந்து ஓடினவராய், ஸ்ரீகிருஷ்ணு, ராமா, எங்களைக் காப்பாற்றுங்கள் என்று கதறினவராய் பயந்து ஓடினர். இதனைக் கண்ட அவர்கள் ஸால மரத்தை கையிலேந்தி சங்கசூடனை தொடர்ந்தனர். ராமகிருஷ்ணர்கள் வருவதறிந்த சங்கசூடன் பயந்து தப்பினுல் போதும் என்று கோபியரை விடுத்து விரைந்து ஓடினுன்.

ஸ்ரீகிருஷ்ணர், பலராமனும் மங்கையரும் காத்திருக்க, சங்கசூடன் தலையில் இருக்கும் ஒளிமிகுந்த ரத்தினத்தைக் கண்டவராய் அவனை துரத்தினுர் சங்கசூடனைப் பிடித்து அவனை வதம் செய்து தலையிலணிந்திருந்த ரத்தினத்தை எடுத்து பலராமனிடம் கொடுத்தார்.

(தொடரும்)

முன் கவனம் உள்ள ஒரு நண்பனைப் போல வாழ்க்கையில வேறு பாக்கியமில்லை.
—யூரிபிடிஸ்

திருப்பூர் அருள்மிகு

லலிதாம்பிகை திருக்கோயில்

திருப்பணி

பிரம்மாதி தேவர்கள் மூவரும் தம் தொழில் இனிது நடைபெற அம்பாளின் பாதகமலங்களின் கீழ் திருமுடி தாழ்த்தியுள்ளார்கள் என்பதை சௌந்தர்யலகரி முதலிய தேவி மந்திரங்கள் மூலம் அறிகிறோம். தெய்வ அம்சங்களில் சிறந்தது ஸ்ரீ லலிதாம்பிகை திரிபுரசுந்தரி எனவும், யந்திரங்களில் சிறந்தது ஸ்ரீசக்ரமெனவும், மந்திரங்களில் சிறந்தது பஞ்சதசாக்ஷரி சோடசியெனவும் சொல்லப்படுகிறது.

அளவிடற்கரிய பேராற்றலும், பேரன்பும் பெருங்கருணையும் நிறைந்த அன்னையை, தொழிலும் செல்வமும் பக்தியும் வெகு வேகமாக வளர்ந்து வரும் திருப்பூர் மாநகரின் மத்தியில் அருள்மிகு ஸ்ரீ கொங்கணகிரி கந்த பெருமான் ஆலயத்திற்கு அருகில், ஸ்ரீசக்கர மகாமேரு ரூபமாக பிரதிஷ்டை திருப்பணி நடைபெற்று வருகிறது.

இப்புனிதப் பணிக்கு ஆன்மீக அன்பர்கள் தங்களால் இயன்ற அளவு காணிக்கையை அளித்து அம்பாளின் அருள் பெற்று நல்வாழ்வு பெற வேண்டுகிறோம்.

நன்கொடை அனுப்ப வேண்டிய விலாசம் :

தலைவர் :	செயலாளர் :
ஸ்ரீ வித்யானந்தா	M. A. அருணாசலம், M.A.

அருள்மிகு லலிதாம்பிகை திருக்கோயில்

(ஸ்ரீ சக்கர மகாமேரு பிரஸ்தம்) நிர்மாண சங்கம்,

திருப்பூர் - 638 601.

மனித குலம் நல்வாழ்விற்காகவும், உங்கள் வாழ்வு மலரவும் அன்னை ஸ்ரீ லலிதாம்பிகையின் சன்னிதானத்தில் பிரார்த்தனை செய்ய ஏற்பாடுகள் செய்துள்ளோம்.

உங்கள் குறைகள், தேவைகள் மற்றும் பிரச்சினைகளை எழுதுங்கள். உங்கள் நல்வாழ்வுக்காகவும், அமைதிக்காகவும், மகிழ்ச்சிக்காகவும் பிரார்த்தனை செய்து குங்குமப பிரசாதம் அனுப்பி வைக்கிறோம்.

உங்கள் விருப்பம் நிறைவேற எழுதுங்கள்;

ஸ்ரீ வித்யா பிரார்த்தனைக் குழு

தபால் பெட்டி எண் : 16 — திருப்பூர் - 638 601.

திருப்பாலைவனம்

தமிழ் நாட்டில் ஒரு பாலைவனமா? அதுவும் சென்னைக்கு மிக அருகில். இது வெறும் பாலைவனமல்ல இறைவன் குடிகொண்ட திருப்பாலைவனம்

பாலீசுவரம் என்று புராணகாலத்தில் அழைக்கப்பட்ட இத்திருப்பாலைவனம் சென்னையிலிருந்து பழவேற்காடு செல்லும் வழியில் கடற்கரை ஓரமாக, பழவேற்காட்டிற்கு, நான்கு ஐந்து கல் முன்னதாக உள்ளது.

பாலை மரங்கள் நிறைந்த காடாக ஒரு காலத்தில் இருந்ததால், பாலைவனம் என்று அழைக்கப்பட்டது.

இக்கோயிலின் தலபுராணம் மிகப் புகழ் பெற்றது அமிர்தத்துக்காக பாற்கடலை தேவர்களும், அசுரர்களும், கடைந்ததும் இதில் வந்த ஆலகால விஷத்தை சர்வேச்வரனான பரமேச்வரன் விழுங்கி தன்னுடைய கண்டத்தில் நிறுத்தி, நீலகண்டனானதும் எல்லோரும் அறிந்ததே. ஆனால், பாற்கடலில் கிடைத்த அமிர்தத்தை தேவர்கள், அரக்கர்களிடமிருந்து காத்து, பங்கிட்டுக் கொண்ட இடமே இத்திருத்தலம்.

மேலும், ஆலகால விஷமுண்ட நீலகண்டனுக்கு அமிர்தத்தின் ஒரு பகுதியையே சமர்ப்பிக்கின்றனர் அமிர்தத்தையே சிவலிங்கமாக்கி வழிபட்டனர். அமிர்தேசுவரர் என்ற பெயரிட்டு அழைத்தனர்.

பிற்காலத்தில் பாலை மரமொன்று சிவலிங்கத்தைத் தழுவிய நிலையில் மூடிக்கொண்டது. சோழ அரசன் ஒருவன் இதை அறியாமல் தன்னுடைய யானையை மரத்தில் கட்டுகிறான். மரத்தில் கட்டிய யானை திடீரென்று இறக்கிறது.

கோபம் கொண்ட அரசன் மரத்தைக் கோடரியால் வெட்ட மரத்தினடியிலிருந்து குருதி கொப்பளித்தது. மன்னன் உடல்நடுங்கி அதிசயப்பட்டு அவ்விடத்தைச் சோதித்துப் பார்த்தான். சிவலிங்கத்தை மரம் மூடியிருந்ததைக் கண்டான். லிங்கத்தின் திருமுடி கோடரியால் பிளக்கப்பட்டதையும் கண்டு மனம் நொந்தான்.

தன்னுடைய செயலுக்கு வருந்தி பக்திப் பெருக்கால் இறைவனுக்கு அழகான கோயிலையும் கட்டுவித்தான்.

பாலைமரம் சிவலிங்கத்தைத் தழுவியிருந்ததற்கு, சிவாச்சாரியார் மேலும் பல விளக்கங்களையும் வரலாறுகளையும் தருகிறார்கள்.

தேவர்கள் அமிர்தத்தை பங்கிட்டுக்கொண்ட தகவல் அரக்கர்களுக்கு எப்படியோ தெரிந்து விடுகிறது. அவர்கள் அமிர்தத்தை உண்ட பிறகு கைகழுவும் நீரில் தவளை வடிவமாக தங்கலாம் என்று நினைக்கிறார்கள். அந்த நீரைப் பருகி சாகாநிலையை அடையலாம் என்று திட்டமிடுகிறார்கள்.

எல்லாம் தவிடு பொடியாகிறது. தாங்கள் கைகழுவும் நீரில் தவளையிருக்கக்கூடாது என்று தேவர்கள் வரம் பெறுகிறார்கள். தேவர்கள்

கைகழுவிய இத்திருக் குளத்து நீரில் இன்றும் தவளைகள் இல்லை.

ஐந்து நிலைகள் கொண்ட ராஜகோபுரம் கிழக்கு நோக்கி யுள்ளது. அதற்கு முன்பாக பதினாறு கால் மண்டபமும், அமிர்த புஷ்கரணியும் உள்ளது. குடி தண்ணுருக்கு இத்திருக்குளத்து நீரையே மக்கள் பயன்படுத்துகின்றனர்.

இக்கோயில் கிழக்குமேற்கில் 560 அடி நீளமும், தெற்கு வடக்கில் 550 அடி நீளமும் உடையது. கோயிலின் வெளிச்சுவற்றில் தென்மேற்கு மூலையில் பாலைமரம் தலமரமாகத் தழைத்தோங்கி வளர்ந்துள்ளது.

வெளிச்சுற்றில் கொடி மரம், நந்தி மண்டபம் விஜயநகரப் பாணியில் சிறந்து விளங்குகிறது.

என்றும் பிரியாத நாச்சியார் என்றும், லோகாம்பிகை என்றும் அழைக்கப்படுகிற அன்னையின் சந்நிதி கிழக்கு நோக்கிக் காட்சி தருகிறது. இறைவனுக்கு வலப்புறம் அம்பிகை இருப்பது மிகவும் விசேஷம். அம்பிகை தவம் புரிந்த தலங்களில் இதுபோன்ற அமைப்பைக் காணலாம்.

கருவறையில் பாலீசநாதர் ஸ்வயம்பு மூர்த்தியாக காட்சி தருகிறார். வெண்மை நிறத்தோடு காட்சி தரும் ஈசனைக் கண்டால் உடல் சிலிர்க்கும், உள்ளம் உருகும் லிங்கத்தின் மேல் மரப்பட்டையால் மூடப்பட்டது போல காணப்படுகிறது. லிங்கத்தின் மீது சாத்தப்படும் சந்தனம் கவசமாக, வெள்ளியால் செய்யப்பட்ட திருநீற்றுப் பட்டத்தின் மீது சந்தனம் சாத்தப்படுகிறது லிங்கத்திற்கு பால், இளநீர், பன்னீர், தண்ணீரால் மட்டுமே அபிஷேகம் செய்விக்கப்படுகிறது.

இக்கோயிலில் மற்றொரு சிறப்பு ஆடுங்கூத்தனின் அழகிய சபை. சிதம்பரம் போலவே விமானம் நடராஜரின் சந்நிதியை அலங்கரிக்கிறது.

மாணிக்கவாசக ஸ்வாமிகள் இயற்றிய கீர்த்தித் திரு அகவலில் இத்தலத்து இறைவனைப் பாடியுள்ளார்.

சுமார் 71 கல் வெட்டுக்கள் இக்கோயிலில் உள்ளன. சோழர்கள், விஜயநகரத்தார் திருப்பணிகள் இங்கு ஏராளம்.

திருமதிலைக் கட்டியவன் சடையவர்மன் சுந்தர பாண்டியன் என்னும் பாண்டிய அரசன்.

சிவராஜ ஸ்வாமிகள் என்னும் மஹான் பல பாடல்களால் இத்தலத்தைப் பற்றி பாடியுள்ள ஒரு பாடலை படியுங்கள்.

பாலைமரப் பொழினிறையுள் பதியடைந்த சோழன்
பகராரிய சேனையிலோ ரானைதரு பிணைத்த
காலையதின் கருவிகளிற் களவுதிரம் பெருகிக்
கணப்போதி லுயிரிலங்கக் கண்டவனும் பயந்தே
சோலையில மரத்தடியைச சோதனை செய்துளது
சுயம்புருவங் கண்டுமன்னன் துய்ய செம்பொன் கோயில்
சீலமுடன் செய்து தொழும் திருப்பாலை வனவாழ்
தெள்ளமுதாம் பாலீசா திருவருள் செய்தருளே

பழவேற்காட்டிற்குச் செல்லும் பஸ்ஸைப்பிடித்தால் எளிதில் இத்திருத்தலத்தையடையலாம. மிகப் புராதனமான இக்கோயிலையும் அங்கே வீற்றிருக்கும் இறைவனையும் தொழுது எல்லா இன்பங்களையும் வாழ்வில் பெற வேண்டுகிறேன். ○

திருக்கடவூர்

அன்னை அபிராமவல்லி விஜயம்

கோமளவல்லியை அல்லியம் தாமரைக் கோயில் வைகும்
யாமள வல்லியை ஏதமிலாளை எழுதரிய
சாமள மேனிச் சகல கலாமயில் தன்னைத் தம்மால்
ஆமள வும் தொழுவார் ஏழு பாருக்கும் அதிபரே. 96

தன் உடல், பொருள், ஆவி மூன்றையும் அபிராமிக்கு அளித்து அன்னையையே தன் சரணாக அடைந்து விட்ட பக்தராகிய பட்டர், "நீ கொடுத்த அன்றே உனக்கென அளித்துவிட்டேன் இனி யெனக்கென்ன குறை" என்று கூறுகிறார். அதனால் வாழ்வில் நிகழும் நன்மை, தீமை இரண்டுக்கும் தனக்கு ஏதும் தகுதியில்லை என்பது பட்டரின் கூற்று.

அக இதழ் பொருந்திய தாமரை தளங்களின் மீது வீற்றிருக்கும், இளமை செல்வி பொருந்திய காமவல்லியாகிய அபிராமியம்மை ஒப்பு உயர்வு அற்றவள். எழுதற்கு முடியாத சியாமள மேனி நிறமுடையவள். பச்சைநிற சகல கலா மயிலாகிய அபிராமியை தம்மால் இயன்ற அளவு தொழுதேற்றுபவர் ஏழு உலகங்களுக்கும் அதிபதியாக விளங்குவார்கள் என்கிறார் பட்டர் பெருமான்.

ஆதித்தன் அம்புலி குபேரன் அமரர் தங்கோன்
போதிற் பிரமன் புராரி முராரி பொதியமுனி
சாதிப் பொருபடைக் கந்தன் கணபதி காமன்முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே 97

ஆதித்தன், சந்திரன், செல்வத்துக்கு உரியவனாகிய குபேரன், தேவேந்திரன், படைப்புத் தொழில் செய்யும் பிரம்மா, முப்புரங்களை எரித்த சிவபெருமான், முரன் என்ற அசுரனை அழித்த முகுந்தன், பொதிய முனியாகிய அகஸ்தியர், பெரும் போர் படையுடைய ஸ்கந்த பெருமான், ஆனைமுகத்தோனாகிய கணபதி, மன்மதன் முதலிய, பல சாதனைகள் புரிந்த எண்ணிலாத புண்ணியர் எல்லோரும் அபிராமி தேவியை வணங்கி வழிபடுபவர் என்கிறார் பட்டர்.

இவ்வாறு தேவர்களாலும் வணங்கப்பட்ட பெருமை உண்டு தனது தெய்வமாகிய அபிராமியம்மைக்கு என்பதைத் தெளிவு படுத்துகிறார். அத்தகைய அன்னையை வழிபடுவதால் எல்லா நன்மைகளையும் பெறலாம் என்கிறார்.

இதன் முன்பாட்டில் அன்னையை தொழுபவர் ஏழு உலகுக்கும் நாயகனாக விளங்குவார் என்றதால், இப்போது கூறிய யாவருக்கும் அத்தகைய நிலையேற்பட அன்னையை வணங்குவதே காரணம் என்று உறுதியாகக் கூறுகிறார்.

பி. எஸ். பரமேஸ்வரன், பி.ஏ. பி.எல்., சென்னை.

தைவந்து நின் அடித் தாமரை சூடிய சங்கரற்குக்
கைவந்து தீயும் தலைவந்த ஆறும் கரந்த தெங்கே
மெய்வந்த நெஞ்சினல்லால் ஒருகாலும் விரகர் தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புக வறியா மடப் பூங்குயிலே! 98

சூரியன் முதலாய எண்ணிலாத் தேவர் யாவரும் வழிபடும் அபிராமி தேவியின் அருளுகைக்கு நாம் சரணடைந்து வழிபடுவதால் நன்மை ஏற்படும் என்று எடுத்துக் கூறிய பட்டர், இங்கு இன்னும் அன்னையின் உயர்வை விளக்குகிறார்.

அம்மா! உனது திருவடிகளை கைகொண்டு வரும்போது சிவபெருமான் கையிலிருந்த தீ என்ன ஆயிற்று? அத்திருவடிகளை வருடிய பின் தலையில் சூட்டிக்கொண்ட காலத்து கங்கா நதி எங்கே ஒளிந்தது? நீயே அறிவாய் அவர் நிலையை என்கிறார் பட்டர். அதாவது அந்த கையிலிருந்த தீ உன் பாதங்களை சுடவில்லை தலையிலிருந்த ஆறு உன்னை குளிரச் செய்யவில்லை,

உண்மை அன்பு சுரந்து நிற்கும் உள்ளத்தல்லாது, வேஷதாரிகளாகிய பொய்மிக்க நெஞ்சமுடையவர்களிடம் ஒரு காலத்தும் அன்னை தங்கமாட்டாள். அன்னை அத்தகையோர் நெஞ்சத்து புகுதல் கிடையாது. பூப்போன்று மென்மையும் குயில் போன்ற குரல் நயமும் பொருந்திய அபிராமியன்னையின் சிறப்பைப் போற்றி விளக்குகிறார்.

(தொடரும்)

★

உள்ளே நுழையுமுன் வெளியே வருவதைப்பற்றி யோசனை செய்ய வேண்டும்.
—அரேபியப் பழமொழி

எட்டத்தில்தான் இன்பம் இருக்கிறது என்று எண்ணி ஏங்கக் கூடாது. உன் காலடியிலேயே அது கொட்டிக் கிடப்பதைக் காண வேண்டும்.
—ஏ. நடராஜன்

உமாமஹேஸ்வரி - ரவீந்த்ரன் திருமணம்

கோவை பிரபல பத்திரிகை விற்பனையாளரும், ஆனந்த விகடன் ஆர்கனைஸருமானவரும், குண்டுசிக்கு சுமார் முப்பது வருடங்களாக ஆதரவு அளித்து வருபவரும், என் அன்பு நண்பருமான திரு. A. ராமசுவாமி பிள்ளை அவர்களின் அன்பு மகள் சௌ. உமாமஹேஸ்வரியின் திருமணத்தை சென்ற பிப்ரவரி மாதம் மூன்றும் தேதி கோவை ஆர். எஸ். புரத்தில் மிகவும் சிறப்பான முறையில் நடத்தி வைத்தார். மணமகன் சிரு. ரவீந்த்ரன். மிகவும் பொருத்தமான ஜோடி.

மண விழாவிற்கு உறவினர் மற்றும் வியாபார பிரமுகர்கள் முதலியவர்கள் வந்திருந்து வாழ்த்திச் சென்றார்கள். அன்பு மனிதர் திரு. ராமசுவாமி தம்பதிகளுக்கும், புதுமண தம்பதிகளுக்கும் முருகப்பெருமான் திருவருளை வேண்டி நல் ஆசி கூறி வாழ்த்துகிறேன்.
—ஆசிரியர்

பாபா சொன்ன கதைகள் - 1

பிரார்த்தனை

கிரண் என்பவன், தாய் தந்தையருக்கு ஒரே மகன். அவன் தன் வீட்டிலும் - பள்ளியிலும் மற்றும் யாவரிடமும் உத்தமமானவன் என்ற பெயர் பெற்றிருந்தான். பெற்றோர், உபாத்யாயர் முதலானவர்களின் மனங்களைக் கவர்ந்தவனாக இருந்தான்.

கிரண் பத்து வயது பாலகனாக இருந்தாலும் தன் தாய் தகப்பனார் காரியாதிகளை பரிசிலனை செய்து வந்தான். அவன் தகப்பனார் ஓர் ஜில்லாவின் நீதிபதி தன்கடமையை நேர்மையுடனும் ஏழைகளை அன்புடன் பார்த்து வந்தார்.

அவன் தாயார் பக்தி உள்ளம் கொண்டவள். அனுதைகளை ஆதரவுடன் ஆதரித்து வந்தார். ஆனால் பகவானிடம் தன் தாய், தந்தையருக்கு உள்ள பக்தியில், கிரணுக்கு, சிற்சில சமயங்களில் சந்தேகம் ஏற்படும். தகப்பனார் ஒவ்வோர் ஞாயிற்றுக் கிழமையும் சிவாலயத்திற்கு ஏன் போகிறார்? அடிக்கடி பல கிராம வாசிகள் கூடும் கூட்டங்களில் போய் சத்சங்கமென கலந்து கொள்வது எதற்காக? மறுபடி தாயார் கண்களை மூடிக் கொண்டு காலை மாலை தியானம் செய்வதும் மந்திரங்களைப் படிப்பதும். துர்காதேவியை அன்றுடம் பிரார்த்திப்பதும், யாவும் பொன்னான காலத்தை வீணாகக் கழிப்பதை விட மேன்மையான வேலைகளை செய்தால் பயன் ஏற்படுமல்லவா? என்று பெற்றோரைக் கேட்டான்.

இதைக் கேட்டதும், அவன் தாயார் சிறித்து துர்காதேவியை வணங்கி அம்மா தாயே! கிரண் சிறு பையன் அவனுக்கு பக்தி விஸ்வாசங்களை அருளி அனுக்ரகம் செய் என பிரார்த்தித்தாள்.

அன்று மாலை கிரண் பள்ளிக்கூடத்திலிருந்து வீடு திரும்பினான் வீட்டில் தாய் தந்தையரில்லை. அக்கம் பக்கத்தார்! கிரண், உன் தகப்பனார் லாரியால் அடிபட்டு ஆஸ்பத்ரியில் உள்ளார் என்றனர். இதைக் கேட்டவுடன் அவன் தாயார் பூக்களால் அலங்காரம் செய்து பூஜை செய்யும் துர்காதேவியின் ஞாபகம் வந்து, திரும்பி தேவியின் முன் நின்று தன் தாயார் பூஜை செய்யும்போது அவ்வப்போது தன் காதுகளால் கேட்ட,

ஓம் ஸ்ரீ துர்கே துர்க விநாசனி
ஓம் ஸ்ரீ சர்வ சக்தி ஸ்வரூபிணி
ஓம் ஜக தம்பே ஜகன்மாத்ருகே
ஓம் ஸ்ரீ சங்கரி சர்வஸ்ஸுபம்கரி

என்னும் மந்திர ஒலிகளை உணரலானான். உடனே தன்னை மறந்து கைகளைக் கூப்பி- கண்ணீர் கண்களில் வழிய, குழம்பிய ஒலியுடன் தாயே துர்கா தேவி என் தகப்பனாரைக் காப்பாற்று, அவரைப் பிரிந்து அரை நிமிஷம் வாழமுடியாது என வேண்டிக் கொண்டான். சிரசை தேவியின் பாதங்களில் தொடசெய்து கைகளால் நமஸ்காரம்செய்து, ஓர் புஷ்பத்தை எடுத்துக் கொண்டு ஆஸ்பத்திரியை நோக்கி நடந்தான். அங்கு தன் தகப்பனார் நிலையைக் கண்டதும் துக்கமேலீட்டால் அப்பா என கூச்சல் போட்டு அழஆரம்பித்து விட்டான்.

தகப்பனுருக்குப் பக்கமாய் கண்

கண்ணை மூடிக் கொண்டு தாய் ஆடாமல் அசையாமலிருப்பதைக் கண்டான். அம்மா தியானம் செய்கிருள் என்பதை உணர்ந்ததும், அவனுக்குள் எழும்பிய, ஆவேசம் மாயமாய் மறைந்தது. முகம் மலர்ச்சியுற்றது மெதுவாக தாயாரிடம்சென்று அம்மா! இதோ துர்க்கா தேவியின் பாதகமலங்களிலிருந்து தகப்பனுருக்காக, இந்த புஷ்பத்தை கொண்டு வந்தேன் என தாயின் கையில் கொடுக்காமல் அந்த ரோஜா புஷ்பத்தை தன் தகப்பனுரின் நெஞ்சின் மேல் வைத்தான்.

உடனே தன் தகப்பனுர் கண் திறந்தார், புஷ்பத்தை வைத்தும் வைக்காததற்குள் ஏற்பட்ட, மாற்றத்தைப் பார்த்த அங்குள்ளவர்கள் ஆச்சர்யப்பட்டார்கள். அதே சமயம் டாக்டரும் வந்தார். பெரிய கண்டம் தப்பிற்று, பகவான் காப்பாற்றி விட்டார் என்ருர்.

கிரண், மிக புத்திசாலி ஆனதினுல், இந்த அபூர்வமான அனுபவம் அவன் உள்ளத்தில் நிலை பெற்று விட்டன ஒரு மாதம் சென்ற பின் தகப்பனுர் ஆஸ்பத்திரியை விட்டு சுகமாய் வீடு வந்து சேர்ந்தார். தகப்பனுர் தன் மகன் கிரண் மாற்றமடைந்ததை பார்த்து ஆச்சர்யப்பட்டார். தாயார் தியானம் செய்ய உட்கார்ந்தால்! கிரணும் தியானம் செய்ய உட்கார்வான். ஞாயிற்றுகிழமை தாயார் பூஜை செய்யும் போது தாயாருக்கு உற்ற துணை செய்வதைக் கண்ட, தகப்பனுர் பூரிப்படைவார். தகப்பனுருடன் கிரண் கோயிலுக்குச் செல்லும் பழக்கத்தைப் பின் பற்றலானுன்.

பள்ளியில் போதித்த பாடங்களைப் படிப்பது, அவை பூர்த்தியானதும் ஸ்வாமி விவேகானந்தர், ஏசுப்பிரபு கெளதம புத்தர் முதலானவர்களின் திவ்ய சரித்திரங்களை கிரண் படிப்பான்.

பிரார்த்தனையில், எவ்வளவு மகிமை உள்ளதோ, அது கிரணுக்கு முதலில் உணர முடியவில்லை. அது நமக்குள் சத்தியம், தயை சேவா மனப்பான்மை, அன்பை, வளர செய்யும். உள்ளத்தில் விஸ்வாசம் தைரியம் ஏற்பட செய்யும் நம்மை நல் வழியில் நடத்த செய்து சாந்தியுடன் சந்தோஷ உள்நிறைவை ஏற்பட செய்யும்.

ஸ்ரீ சத்ய சாயிபாபா அருளியது

தொகுப்பு :— R. பாலபட்டாபி,
உடுமலைப்பேட்டை

❋

நேற்று என்பது நினைவு, இன்று என்பது நனவு, நாளை என்பது கனவு. பூக்களாய் சிரிக்கின்ற இதத்தைய நாட்களாய் உள்ளடக்கிய ஆண்டுகள் ககாநத வண்ணம இருக்கின்றன.
—எம ஜி.ஆர்.

வெறும் வாசசி ஒருவனை மனிதனுககுவது இலலை. சிந்தனைதான் மனிதனை உருவாககுகிறது.
- ஐசகடெயிலர்

நமபிககையில குழநதையைப் போல அன்றியொழிய, ஈசுவரனைக காண்பது துர்லபம. யாரேனும் ஒருவனை சுட்டிக்காட்டி, "அவன் உன சகோதரன" என்று குழநதையிடம சொனனுல, அககுழநதை அவன சொலவதை உண்மையென நமபும். இப்படிபபட்ட குழநதை போனற விசுவாசம் எவனிடம் இருக்கிறதோ, அவனிடநதான ஈசுவரனுககு தயை பிறககிறது எலலாவற்றிலும கணககுப் பார்க்கும சுபாவத்துடனிருநதால, ஈசுவரனைக காணவே முடியாது.

தொகுப்பு :—ருகமணிராமன், நாகர்கோயில —பகவத்கீதை

அட்டைப் படம்

திருவாரூர் கமலாம்பிகை

(பாஸ்கரதாஸன்)

சோழ நாட்டில் காவிரியின் தென்பால், விராட்புருடனுடைய மூலாதாரமெனவும், பூமாதேவியின் இதயமெனவும், பஞ்சபூதத்தலங்களில் முதலாவதான ப்ருதிவித் தலமெனவும், இந்திரன் முதலானோர் கறையான் வடிவு கொண்டியற்றிய புற்றை இடமாகக் கொண்டு லிங்க உருவில் தோன்றியதால் புற்றிடங் கொண்டார் (வன்மீகநாதர்) என்று விளங்கும் வன்மீகபுரம் எனவும், திருமகள் வழிபட்டுப் பேறு பெற்றமையால் கமலாலயம் எனவும், சிறப்புப் பெற்றது திருவாரூர் என்னும் நால்வராலும் பாடல் பெற்ற புனித பதி

திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன் என்ற சுந்தரமூர்த்தி நாயனாரால் போற்றப் பெற்றது. தரிசனம் செய்யவரும் தேவர்கள் சமயம் பார்த்துக்கொண்டு தங்கியிருப்பதற்கான தேவாசிரயம என்ற மண்டபத்தை உடையது திருத்தொண்டர் புராணம் பாடுவதற்கு சுந்தரமூர்த்தி நாயனாரை தொகை நூல் பாட தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன் என அடியெடுத்துக் கொடுத்த இறைவரின் பழம் பதி. உனக்குத் தம்மைத் தோழனாகத் தந்தோம் என சுந்தரமூர்த்தி நாயனாரின் பக்திக்காதலுக்கு உறைவிடமான ஆரூரன் என்ற தியாகராச மூர்த்தியின் தலம்.

இத்தலத்தில் இறைவன் 360 லீலைகள் செய்ததாகக் கூறுவர். சிதம்பரம் மறைஞான சம்பந்த நாயனார் இயற்றிய கமலாலயச்சிறப்பு என்று திருவாரூப் புராணம் வழங்குகிறது. இதுதவிர பெரிய நூலாக இத்தலவாலாற்றினைப் பாட விரும்பிய திரிசிரபுரம் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் தியாகராசலீலை எனப் பாட ஆரம்பித்து. மூல நூலின் வடமொழிப் புத்தகம் கிடைக்காததால் 13 திருவிளையாடல்கள் மட்டும் பாடிய ஒரு நூல் இதற்கு உண்டு. பூராவும் பாடும் பேறு கிட்டவில்லையே எனப் பிள்ளையவர்கள் கடைசிவரை கூறிக் கொண்டிருந்தார் என்பர் தமிழ்த் தாத்தா.

இவ்வாறு சிறப்புள்ள வன்மீகநாதர் என்ற புற்றிடங்கொண்ட பெருமானின் பிராட்டியாக விளங்கும் அம்மையின் பெயர் கமலாம்பிகை. அம்மையின் மகுடத்தை கரண்ட மகுடமென்றும், உட்கார்ந்து சேவை சாதிக்கும் நிலையை குட்டிகாசனமென்றும் கூறுவர். அத்தகைய கம்பீர நிலையில் காட்சி தரும் அம்மையை;

மாமேவு முக்கண் இருபுயம் பசிய நிறம், கரண்ட மகுடம் வாய்ந்து
தூவுமேவு யோகபீடத்து இடக்கைக் கவானூன்றிச் சுடர் வலக்கை
தேமேவு நறு நீலம குட்டி காசனத் தடிகடிருந்த மேவு
மோமேவும உயர் பரையைக் குளமேற் பலவிதழ்க்கமலத் துன்றுவாமே

எனப் பாடிப்பரவுகிறார் பிள்ளையவர்கள். அத்தகைய புராண சிறப்புபல பெற்ற திருவாரூர் அன்னை கமலாம்பிகை இவ்விதழின் அட்டையில் காட்சி கொடுத்து அருள் பாலிக்கிறாள்.

❋

தியாகராஜ வைபவம்

ஸ்ரீ தியாகராய ஸ்வாமிகள் ராம பஜனை செய்வதால் ஏற்படும் நன்மைகளைக் குறித்து பல பாடல்கள் பாடியுள்ளார். நாமஸ்மரணம் என்பது கலியில் மிகவும் முக்கியமான வகை பக்தி. மற்றவகை பக்தி ஏதும் செய்ய முடியாதவர்கள் நாம உச்சாரணம் செய்து பலன் அடையலாம் என்பது பெரியோர்கள் எல்லோரும் ஒரு மிக்க கூறியுள்ளார். இதனால் மற்ற பக்தி வழிபாடுகள் எல்லாம் தேவையில்லை என்பதல்ல. அத்தகைய வழிபாடுகள் தாங்கள் ஏற்படினும் நாமஸ்மரணை செய்வதால் நன்மையுண்டு என்பதே கருத்து.

ராகம் : ஸாரங்கி — பல்லவி — தாளம் : ரூபகம்

மேது ஜூசி மோஸ போகவே மனஸா
லோனி ஜாட லீலாகு காதா? (மே)

அனுபல்லவி

ஹீனமைன மல மூத்ர ரக்தமுல
கிரவம்சு மாயாமய மைன சான (மே)

சரணம்

கனுலனேடி யம்ப கோல சேத குச்சி
சனுலனேடி கிருல சிரமுனுஞ்சி
பனுலு சேதுரட தியாகராஜனுதுனி பா
க நீவு பஜன ஜேஸு கொமமி ஸ்தரீல (மே)

ஏ மனமே! மயக்கும் மங்கையரில் வெளிப்பகட்டில் ஏன் ஏமாற்றமடைகிறாய்? உண்மையாக நீ அவர்கள் உள்ளினை கவனிப்பாயெனில், மல மூத்திரங்கள், ரத்தம், மாமிசம் முதலிய வெறுப்பூட்டும் பொருள்களை மூடியிருக்கும் ஒரு மூடியன்றோ அவர்கள் ரூபம்.

அவர்களின் கூரிய வேல் விழிகள் கொண்டு தமது காமத்தினை வெளிப்படுத்தி, புருஷர்களின் மனதைக் கவருவதுடன், அவர்களுடைய உயர்ந்து குன்று போன்ற மார்புகள் சிரமபரிகாரம் செய்து தலைகளை வைத்துக் கொள்ளும் அணைகள் போல் விளங்குகின்றன இதனையெல்லாம் கண்டு ஏமாற்றமடைவதேன்?

ஸ்ரீ ராமபஜனை செய்து பக்தி புரிந்து மனம் ராமபிரானிடம் லயித்து இருப்பதினால் இவர்களின் கவர்ச்சியிலிருந்து தப்ப முடியும். எனவே, ராமபஜனை செய் என்கிறார் தியாகராஜஸ்வாமிகள்.

இதனால் காமம் மிகுந்தவரும் பக்தியில் ஈடுபட்டாரேயாயின், ஸ்ரீ ராமபஜனை அவர்களை புலன்களின் பிடியிலிருந்து தப்பவைக்கும் என்பதாம். ஸ்ரீ ராம நாமஸ்மரணை செய்வதால் மனம் பகவானிடம் செல்லும் அத்தகைய பழக்கம் நல்ல வழியில் மனதைக் கொண்டு செல்லும் சிற்றின்பத்தினை விடுத்து மனம் பேரின்பத்தை நாடும் நிலை ஏற்படும் என்பது ஸ்வாமிகளின் உபதேசம்.

விளக்கம்:— பி. எஸ். பரமேஸ்வரன், பி.ஏ., பி.எல்

அர்ச்சுன கர்வபங்கம்

பஞ்ச பாண்டவர்களில் நடுவனான அர்ச்சுனனின் மனதில் பல நாட்களாக ஓர் எண்ணம் இருந்து வந்தது. அது அவன் செயலிலும் தென்பட ஆரம்பித்தது. அதாவது தம்மைப் போல் சிறந்த கிருஷ்ண பக்தன் யாருமே இருக்க முடியாது என்பது தான்.

ஒரு நாள் பரந்தாமன் பார்த்தனை தேரில் ஏற்றிக் கொண்டு ஓர் குடிசைக்கு அழைத்துச் சென்றார். பார்த்தனையும், பரந்தாமனையும் தம் குடிலில் பார்த்த முதியவர் ஓடோடி வந்து கிருஷ்ணனின் பாதாரவிந்தங்களில் விழுந்து வணங்கி, இருவரையும் வரவேற்று உபசாரம் செய்து, பல கனிவகைகளை வழங்கி உபசரித்தார். ஏழு வயது பாலகன் ஒருவன் அப்பா என அழைத்தவாறு ஓடி வந்தான். வியப்புடன் பார்த்த அர்ச்சுனனை நோக்கி;

இவன் எனது ஒரே மகன். முதுமையில் பரந்தாமன் எனக்களித்த ஒரே வாரிசு என பெரியவர் கூறினார்.

கிருஷ்ணன் அப்பெரியவரைப் பார்த்து உமது மகனை என் முன்னால் நிற்க வைத்து, நீரும் உமது மனைவியும் சேர்ந்து அவன் உடலை இரு சம பாகங்களாக வெட்டி வலது பாகத்தை எனக்குத் தர வேண்டும் என பணித்தார்.

அப்படியே செய்கிறேன் எனக் கூறிய பெரியவர், மனைவியையும் மகனையும் அழைத்தார். தாய் மகனை அணைத்து முத்தமிட்டு கிருஷ்ணனுக்கு முன் நிற்க வைத்தாள். ரம்பத்தை எடுத்து வரும் பெரியவரைப் பார்த்து கிருஷ்ணன்;

நீங்கள் மூவரும் முழுமனதுடன் இதில் ஈடுபட வேண்டும். யாராவது ஒருவரது கண்ணிலிருந்து ஒரு சொட்டு கண்ணீர் வந்தாலும் கூட நான் எழுந்து போய் விடுவேன். என எச்சரித்தார்.

ரம்பம் பாலகனின் தலையை விட்டு இறங்கி நெற்றிப் பொட்டை வந்தடைந்தது, பாலகனின் கண்ணிலிருந்து ஒரு சொட்டு கண்ணீர் கன்னம் வழியாக வழிந்தோடியது.

கிருஷ்ணன் கோபாவேசமாக எழுந்தார் இது தான் உன் பக்தியின் லட்சணமா? என வினவியவாறு அர்ச்சுனனை பார்த்தார். அர்ச்சுனன், தனக்கு நிகர் யாருமே இல்லை என்ற எண்ணத்தில் ஆழ்ந்திருந்தான்

கிருஷ்ணா! விவசாயி, விதை விதைக்கும் பொழுது எல்லா விதைகளும் முளைத்து, தழைக்கும் என்று தான் நம்புவான். அப்படி முளைக்காவிட்டால் அது அவன் தவறாகுமா? அது போல் என் விதையான இந்த பாலகன் எனது பக்திக்கு ஒரு சோதனையாகி விட்டதில் அடியேன் என்ன செய்ய முடியும்? என்றார் அந்த முனியவர்.

கண்ணா! என குரல் எழுப்பிய அந்த பாலகன் இரு கரங்களையும் கூப்பி கூறுகிறான்;

எந்தக் கண்ணிலிருந்து கண்ணீர் வழிந்தது என பார்த்தாயா கண்ணா? இடக்கண்ணிலிருந்து தான் கண்ணீர் வழிந்தோடியது. ஏன் தெரியுமா? நீ என் அப்பாவிடம் எனது வலது பாகத்தை கேட்டாய் இடது பாகம் என்ன பாவம் செய்தது? அதை நீ ஏன் காணிக்கையாக கேட்கவில்லை என்ற வருத்தத்தில் தான் எனது இடக்கண்ணில் நீர் சுரந்தது. கண்ணா!

அர்ச்சுனன் வெட்கி தலை குனிந்தான்.

புலவர். கீரன் அவர்கள் கூறியது

தகவல்: ஸ்ரீமதி சாரதா-கண்ணன், மதுரை

லக்கின லக்ஷணங்கள்

A. ராகவய்ய ஜோஸ்யர் - திருவள்ளூர்

கன்னி லக்கினம்

பனிரெண்டு லக்னங்களில் ஆரும இடம் பெற்றது கன்னியா லக்னம். புராணத்திற்கும் இதறகும் நெருங்கிய தொடர்புண்டு. கன்னியாக பூமியில் பிறந்து தவம் செய்து கன்னியாகுமரி என்னும் பெயர் பெற்ற அம்மை, பார்வதியின் சிறப்பைக் கூறும் லக்னமாக அமைந்துள்ள லகனமிது. கருணைக் கடவுளாம் சக்தயின் அம்சமாக வரும் கன்னியாலக்னத்தில் பிறந்த நேயர்களின் குணாதிசயங்களைப் படியுங்கள்.

அத்தகைய கன்னியா லக்னத்தின உருவம் கன்னிப்பெண். அங்கம் பககம். அதிபதி புதன். தெய்வம் விஷ்ணு பெண் லக்னம. உபய லகனம். இத்தகைய கன்னியா லக்னத்தில பிறந்தவர்கள் நடுத்தரமான உயரம், நற்குணம், சாந்தம, பயந்த சுபாவம் கொண்டவர்கள். துன்பததை தாங்காதவர்கள். எபபோதும் இன்பமாகவே இருப்பார்கள். பிறர்க்குத் துன்பம் தர விரும்பாதவர்கள். படிப்பில் உயர்வும், கல்வியே சிறந்தது. உதவக் கூடியது என எண்ணி படிபபில்ஆர்வம செலுத்துவார்கள். படிபபில் மட்டும் போதுமென்னும் மனப்பான்மை இவர்களுக்கு வராது. பலவகை நூல்களைக் கற்று, அதன் சாராம்ஸத்தை மனதல பதியவைத்துக்கொண்டு பிறர்க்கு எடுத்துச் சொல்வார்கள்.

இவர்களுக்கு உயர்ந்த வேலை கொடுக்கபபெற்றாலும, ஆக்கிய ராகவே வேலை செய்ய விரும்பி பலரியாற்றுவார்கள். கணிதம், கற்பனைக் கலைகளில் தேர்ந்தவராக இருப்பார்கள். ஆனுல் இவர்களுக்கு புத்தி பலஹீனத்தால் ஆஸ்த்துமா, கல்ஈரல சம்பந்த புண் போன்ற வியாதிகளும் மயக்கம், வயிறு கோளாறுகளும உண்டாகி நிவர்த்தியடையும்.

குடும்பத்தை விட்டு பிரியாமல் ஏக குடும்பமாக இருக்கவே விரும்புவார்கள். சிலர் சிறுவயதில் பிணிகளால் அவதிப்பட்டு நடுவயது முதல் சரீரசுகத்தை அடைவார்கள் சகோதரனுல் இவர்களின் வாழ்க்கைத் தடைபடும். தாயார் மீது அதிக பாசம், தாய் சொல்லைத் தட்டாதவர்கள். சகோதரி மீதும் அதிக அன்பு பாசம் உள்ளவர்கள். ஆனுல் அவர்கள் அன்பாய் இருக்க மாட்டார்கள்.

பொதுவாக அனைவரிடமும் அன்பு வைத்திருப்பதுடன், மலர்ந்த முகத்துடன் பேசக்கூடியவர்கள் எல்லோரும் இவர்களின் வார்த்தையை மீறாமல் மதிப்பு தருவார்கள், இவர்கள் வெண்ணிற ஆடைகளை அதிகம் விரும்புவார்கள். பரம்பரை சொத்து உடையவர்கள். ஆனுல தகப்பனுக்கு சுவிகார சொத்து வந்து சேருவதால இவர்களுக்கு உயர்வு இருககாது. இவர்கள் கல்வியறிவாலும், சுய முயற்சியாலும் விருத்தி அடைபவர்கள்.

சிலர் விஷ்ணுபக்தர்கள். விஷ்ணு புராணத்தின மீதும் ஆசை, பக்தி

த்காரிய அம்மானி. வசதியிருந்தும் சிலருக்கு தரித்திரம் ஏற்படும் எக்காரியத்தில் ஈடுபட்டாலும் துணையுடன்தான் ஈடுபடுவார்கள். இவர்களுக்கு கோபம் வந்துவிட்டால் ருத்ரதாண்டவம்தான். மூத்தவர்களால் இவர்களுக்கு சுகம் இராது. இவர்களிடம் எல்லாம் ரகசியமாகவே இருக்கும். நீதிக்கு தலை வணங்குவார்கள். பந்துக்களுக்கு அன்பன். புண்யகாரியங்களுக்கு வெளிப்படையாக வரமாட்டார்கள்.

பெண்கள் மூலமாக சிலர் சுகத்தையும், தனத்தையும் அடைவார்கள். மனதிலே உள்ள துன்பத்தை வெளிக் கூறாதவர்கள். இவர்களுக்கு குதிரை ஏற ஆசை உள்ளவர்கள். சிலர் இளமையிலேயே விவாஹம் செய்துக் கொள்வார்கள். ஆனால் அதன் சுகங்கள் குறைவு. சிலருக்கு வயது முதிர்ந்த பிறகே விவாஹம் நடக்கும். மனைவி படித்தவள் டாம்பீக வாழ்க்கை செய்ய பிரியமுள்ளவள். முரட்டு சுபாவமுள்ளவள். அறிவு, ஆற்றல் உள்ளவள். ஆனால் அவர்களால் இவர்கள் நற்சுகத்தை அடைய மாட்டார்கள். சிலருக்கு சந்தான குறைவால் தத்து புத்ர வளர்ப்புகள் ஏற்படலாம். பெண்சந்ததிகளால் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்பட வாய்ப்புண்டு.

பெண்கள்

இவர்கள் பார்ப்பதற்கு அழகுடையவர்கள். பயந்த சுபாவம். தெய்வ பக்தியைவிட சினிமா பக்தி அதிகமுள்ளவர்கள். வெளியோரின் பேச்சைக் கேட்டு கணவனின் மீது வழக்குகள் செய்தாலும் முடிவில் அவர் கட்டளைக்கு அடங்கிவிடுவார்கள். கணவன் உரத்த குரலில் பேசினால் நடுங்கி விடுவார்கள். இவர்களின் திருமணம் பெரியோர்களின் நிர்பந்தத்தால் நடக்கும்.

இந்த லக்னக்காரர்களுக்கு புதன் வியாழன், வெள்ளிக்கிழமைகளில் விசேஷ நன்மைகள் ஏற்படும். பிரதி மாதம் 5, 14, 23, ஆகிய நாட்கள் வெற்றிக்கு உகந்தது. மற்றைய நாட்கள் எதிர்ப்பு தரக்கூடியது, 5, 14, 23 32, 41, 50, 59, 68 வயதுகளில் இவர்களின் வாழ்க்கை செம்மையாக இருக்கும். சூர்ய தசை, சந்திர தசை, செவ்வாய் தசை, குரு தசை, சனி தசைகளில் இவர்களின் வாழ்க்கையில் சோதனை உண்டாகும். புதன், சுக்ரன், ராகு கேது தசைகளில் விசேஷ சுகங்கள், வீடு, பூமி, வாகன லாபங்கள் நிச்சயம் உண்டாகும்.

கோவையில்

அழகிய ஆபரணங்களுக்கு நம்பிக்கையான இடம்

★

நவரத்னா ஜுவல்லர்ஸ்

135-B, ராஜவீதி :: கோயமுத்தூர் - 641 001.

போன் : கடை : 36642 — வீடு : 24720

நாலாயிர திவ்யப் பிரபந்த சாரம்

திருக்கண்ணமுது

(இரண்டாம் கிண்ணம்)

2. மாயனைக் காணப் புறப்படும் மங்கையர்

பக்தர்களுக்கு எதைக் கண்டாலும் இறைவனின் உருவாகவே தெரியும் என்பர். மழை வேண்டிய பெண்கள் சூல்கொண்ட மேகத்தை "ஆழிமழைக் கண்ணா!" என அழைக்கின்றனர். மேகம் மேக வண்ணனான கண்ணனை நினைவூட்டுகிறது. இறைவன் எல்லோருக்கும் பாகுபாடில்லாமல் கருணை செய்பவன். அதேபோல் நீயும் ஒளிக்காது பெய்வாயாக நீ ஒன்றும் கைகரவேல் என்கின்றனர் நீ உலகமெல்லாம் செழிக்க நன்கு மழையளிக்க வேண்டுமாதலால், குளம் குட்டைகளிலுள்ள நீரை உறிஞ்சி வந்தால் போதாது. கடலையே உறிஞ்சிக் கரியநிறம் பெற்ற கண்ணன் போல ஈரத்துடன், இரக்கத்துடன் வந்து கண்ணன் கையிலுள்ள சக்கரம் மின்னுவதை யொத்து மின்னி, அப்பெருமானது சங்குபோல் இடிமுழக்கம் செய்து, சார்ங்கம் என்ற அவனது வில்லிலிருந்து அம்புகள் வருவது மாதிரி மழையைப் பொழிய வேணும். இறைவனை மழைவண்ணத்து அண்ணல் என்பார் கம்பர் கண்ணனின் பக்தைகளாக கோபிகைகளுக்கு மேகம் கண்ணனாகவே காட்சி கொடுக்கிறது.

அப்படி மழை பெய்து நீர் நிரம்பிய பின், மகாமாயாவியான கண்ணனை மனத்தினால் சிந்தித்து, வாயால் பாடி, மலர்தூவித் தொழுதால் இதுவரையும் செய்த பாபங்களும், இனி வரக்கூடிய கெடுதல்களும் தீயினில் விழுந்த தூசுபோல் மறையும் என்கின்றனர். கண்ணன் வடமதுரைக்குத் தன்னை யளித்ததால் அத்திருவூர் பெருமை பெற்றது (மன்னு வடமதுரை மைந்தன்) பால் குடித்து வளர்ந்த ஊரை அவன் தோன்றிய இடமாகக் கூறுகின்றனர். இரவில் சிறையில் பிறந்து கோகுலத்திற்கு வருவதற்கு வழிவிட்டதாம் யமுனை. இறைவன் திருவடிபட்டதால் தூய்மை பெற்று ஐந்து லட்சம் பெண்கள் நீராட ஏற்றதாயிருந்தது. தூய பெருநீர் யமுனைத் துறைவன் என்கின்றனர். கண்ணனைப் பெற்றதாயின் திருவயிறு பரிசுத்தமானது. நல்லோன் தோன்றிய நல்லிடமல்லவா? தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதரன் என்றெல்லாம் அவனது புகழ் பாடுகின்றனர்.

ஆறாவது பாடல் முதல் பத்துப் பாடல்களில் ஒவ்வொரு ஆழ்வாரையும் எழுப்புவதாகச் சிலர் பொருள் கூறுவர். கண்ணனைப் பிரிந்தபோது தூக்கம் வராது. கண்ணன் தோன்றிக் காட்சி தந்தால் களிப்பின் மிகுதியிலே தூக்கம் வரவே வராது. எனவே என்றும் இறைவனை தரிசித்து ஆனந்தமடையும் ஆழ்வாராதிகள் தூங்கினர் என்றும் அவர்களைக் கோபிகைகள் எழுப்பினர் என்பதும் அவ்வளவு பொருந்தாது என்பது உத்தம வியாக்யான ஆசிரியர்களின் முடிபு.

இறைவன் மனிதர்களுக்கு இல்லாத ஒரு சக்தியைப் பறவைகளுக்கு

ஸ்ரீ. ராமநாம பரதேசி

அளித்துள்ளான். குளிர் அல்லது மழை காலங்களில் சூரியன் தெரியத் தாமதமானால், நாம பொழுது விடியவில்லையோ என எண்ணுவோம். ஆனால் பறவைகள் பொழுது விடிகிற அந்தச் சரியான நேரத்திற்குச் சத்தமிட்டுக் கூவ ஆரம்பிக்கின்றனர். அந்த முறையில் ''பறவைகள் ஒலிக்கின்றன'' என ஒரு பெண்ணை அழைக்கின்றனர். அது மட்டுமல்ல. ''கோயில்'' வெண் சங்கு ஊதும் சத்தம் கேட்கின்றதே'' எனக் கூறி, பொழுது விடிந்து சங்கின் நிறம் தெரிகிறதே வெள்ளை விளிசங்கம பேரரவம் கேட்டிலையோ? என்கின்றனர். சங்கின் ஒலி பேரொலியாக முழங்குகின்றதே! பூதகியின பாலை அருந்துவது போல் அவளது உயிரையுண்டவன (பேயமுலை நஞ்சுண்டு) சகடாசரனை எட்டி உதைத்து அழித்தவன் கள்ளச் சகடம் கலக்கழியக் காலோசசி என்று கண்ணனுக்கு எதிரிகளால உணடான ஆபத்துக்களைக் கூறுகின்றனர். எமபெருமானுக்கு இவவளவு ஆபததா என அவள் திடுக்கிட்டு எழுவாளோ என எதிர்பார்க்கின்றனர். இவ்வளவு அபாயங்களையும் கடந்தவன் தண்ணீரில ஒரு பாம்பு மெத்தையிட்டுத் தூங்குகிறான அபாயங்களை விரட்டி வெற்றி கொண்ட களைப்புப் போலும்! எனபது தொனி. வெள்ளததரவில துயிலமாநத வித்தினை என பல அவதாரங்களும விதையான இப்பெருமானும் விதை நீருக்குள கிடப்பதுபோல் கிடக்கின்றான் என்கின்றனர்.

இவ்வளவு காரியங்களையும் செய்த இறைவனை முனிவர்களும் யோகிகளும, இறைவனை நெஞ்சில் கொண்டு மெளள எழுந்து 'ஹரி ஹரி' எனக் கூறுகிறார்களாம. குழந்தை பத்திரமாக இருக்கவேணுமென்று கர்ப்பிணி வெகு மெதுவாக எழுவதுபோல், மெதுவாக எழுந்திருக்கிறார்களாம். பிரகலாதனை மலையுடன் கட்டிக் கடலில் தள்ளிய காலத்தில் தனது நெஞ்சிலுள்ள இறைவனுக்கு ஏதாவது தீங்கு நேருமோ என எண்ணி 'ஹரி ஹரி' என்று கூறி நெஞ்சைப் பிடித்துக் கொண்டானும் அதே மாதிரி முனிவர்களும் இறைவன் நாமம் ''உள்ளத்து கொண்டு முனிவர்களும் யோகிகளும மெள்ள எழுந்து அரியென்ற பேரரவம்'' செய்வது உன் நெஞ்சில் புகுந்து எங்கள் மாதிரி உள்ளம் குளிர்ந்து எழுவாயாக'' என அழைக்கின்றனர் இறைவனது அருட் செயல்களையும், தீயவர்களை அடக்கிய, அவனது அழகிய 'ஹரி' நாமம் கேட்டு உள்ளம குளிர வேண்டுமென்பது கருத்து.

மேகத்தைக் கண்ணாக விளித்து மழை பெய்யுமாறு கூறி, அந்த நீரில் மார்கழி நீராட எண்ணிய பெண்கள், வாயினால் பாடி, மனத்தினால் சிந்தித்து தூமலர்க் தூவித் தொழுது தமது பாவங்களை நீக்கிப் பரிசுத்தமானபின், கண்ணன் தன்னைத் தற்காத்துக் கொள்ளவும், உலகிற்கு நன்மை செய்யவும், தீயவர்களை அழித்த திறம் கூறி முனிவர்களும், யோகிகளும் கூறிய 'ஹரி' நாமம் கேட்டு உள்ளம் குளிர வேணுமென்றதுடன் செம்போத்து என்னும பறவை கூவ. காலையில் ஆய்ச்சியர் தயிர் கடையும் அரவம் கேட்டு எழுந்திருக்கவில்லையே! எனத் தூங்கும் ஒருத்தியைக் கண்டு வியக்கின்றனர்.

இறைவனான இராமபிரானின் நாமம கூறிய அனுமனைக் கண்ட சீதாபிராட்டி, 'இவன யாராயிருந்தாலென்ன? என் அருமை நாயகனின் நாமம கூறி என் உளளத்தை உருக்கி உண்மை உணர்ச்சியைக் கொடுத்த உததமன் அன்றோ!' என மகிழ்ந்தாள்.

ஆரக்கனேயாக வேறோர் அமானேயாக அன்றிக்
குரசகினத் தலைவனேதான் ஆகுக! கொடுமையாக
இராககமேயாக வந்திங்கு எமபிரான் நாமம் சொல்லி
உருக்கியே உணர்வைத் தந்தான் உயிரிதின் உதவியுண்டோ

என்கிறது சுந்தரகாண்டம். பரமபதத்தில் நாராயண நாமம் தாங்கினவன், கிணற்றில் விழுந்த குழந்தையைக் காக்க வேண்டுமென்று தாயதானும் கிணற்றில் தாவுவதுபோல, பரமபதத்தை விட்டு இக்கர்ம பூமிக்குள் இராமன், கண்ணன் என்று பல மூர்த்திகளாக அவதரித்த அருமையறியாமல் அவன் நாமம் பாடும்போது இப்படி கிடக்கலாமா? உனது கம்பீரம், அன்பு முதானவற்றைக் கண்டு நீ எங்கள் தலைவியாயிருக்கத் தக்கவள் (நாயகப் பெண்பிள்ளாய்!) என எண்ணினோமே! ஏமாற்றி விட்டாயே!'' என ஒரு பெண்ணைக் கண்டு வியக்கிறார்கள். நாமம் கேட்டு ஒரு உணர்ச்சியுமில்லையா என்பது குறிப்பு.

எட்டாவது பாசுரத்தில் "கீழ்வானம் வெளுத்து விட்டது. (பனி பெய்த புல்லை அதிகாலையில் எருமைகள் மேயும். அதை சிறு வீடு மேய்தல் என்பர்) எருமைகள் சிறு வீடு மேய ஆரம்பித்து விட்டன. எல்லாரையும் காத்திருக்குமாறு கூறி நிற்கவைத்து உன்னை எழுப்ப வந்தோம். கேசி என்ற அரக்கனையும், சாணூரன் போன்ற மல்லர்களையும் அழித்தவன். அப்படிப்பட்ட பெருமானை நாம் தேடிச் சென்றால் "ஆஹா! நாம் இவர்களைத் தேடிச் சென்று அருள்புரிய வேணும் இவர்கள் நம்மைத் தேடி வருமாறு செய்து விட்டோமே'' என இரங்கியருள் செய்வான்.

> தேவாதி தேவனைச் சென்று நாம் சேவித்தால்
> ஆவா என்றாராய்ந்து அருளேலோரெம்பாவாய்

என்று கண்ணனின் எல்லையற்ற கருணையைக் காட்டிப் பேசுகின்றனர்.

இப்படியே செல்லும்போது பளிங்கு மாடம் ஒன்று தெரிகிறது. கண்ணாடி வழியாகக் காண்பது போல் உள்ளே நடப்பதெல்லாம் தெரிகிறது. தூபம் கமழுகின்றது. வாசனை தவிரப் புகையையே காணோம். அதன் நடுவில் குளிர்ச்சி

இன்றைய சினிமா உலகம்

நாட்டில் எங்கு பார்த்தாலும் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, திருட்டு என்கிறார்கள். இதை நான் மறுக்கவில்லை

இமயம் முதல, குமரி வரை இவை அதிகரித்து வருகிறது.

இதற்கெல்லாம் காரணம இப்போது வருகிற சினிமாப் படங்கள்தான். இப்போதுள்ள சினிமா படங்கள 75 வயது கிழவர்களுக்கும காம உணர்ச்சியை ஏற்படுத்தி 5 வயது பெண்ணை கற்பழிக்க வைக்கிறது

ஏமாற்றி கற்பழித்தாலும், அவர்களை அரபு நாட்டில சுட்டுத் தள்ளுகிறார்களே, அதுபோல சுட்டுத்தள்ள இந்த அரசு மத்திய அரசாங்கத்துக்கு சிபாரிசு செய்ய வேண்டும்.

அப்படிச் செய்தாலதான் சட்டம்-ஒழுங்கு, நீதி நியாயம், கற்பு காப்பாற்றப்படும். தறபோதைய சினிமாக்களில கட்டிப் புரளும் காட்சிகளைப் பார்த்தால், பெண்களுக்கு டிரவுசா போட்டும், ஆண்களுக்கு சேலை கட்டித்தான எடுக்க வேண்டும போலும்.

இந்த சினிமாக்கள் அறிவை வளர்ப்பதாக இலலை. ஆபாசத்தை வளர்க்கும் சினிமாவாக, கொள்ளை அடிக்க வைக்கும சினிமாவாக, கற்பழிக்க வைக்கும் சினிமாவாக இருக்கிறது.

இதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

—தமிழக மேலவையில் மதுரை - முத்து

யும் மென்மையும் மிகுந்த ஒரு துயிலணையில் படுத்திருக்கிறாள் ஒரு பேரழகி. அவளை அழைத்துக் கதவை திறக்குமாறு கேட்கின்றனர் கதவிற்கும் சுவற்றிற்கும் கூட வேறுபாடு தெரியாத தூமணி மாடம். அப்பெண்ணை அழைக்கும்போது அவளது தாய் எதிர்ப்படுகிறாள். "மாமி! அவளை எழுப்புங்கள்! பதில் பேசமாட்டேன் என்கிறாளே! அவள் ஊமையா? அன்றி நாங்கள் அழைப்பதைக் கேட்க முடியாத செவிடா? அல்லது கண்ணனை எண்ணி அமர்ந்திருக்கும் இன்பகரமான மயக்கமா? எங்களிடம் பேசாமல் யாராவது மந்திரம் போட்டு விட்டார்களா? என்கின்றனர். நம் நெஞ்சினுள் நிறைந்த மாயனான கண்ணனை அலட்சியம் செய்தால் பள்ளி கொள்ளும் பாற்கடலுக்கு அந்த மாதவன் சென்று விடலாம். அல்லது நாம் பின் தொடர முடியாத வைகுந்தத்திற்கே அந்த வைகுண்டன் சென்று விடலாம். ஆதலால் தூங்காது அவளைப் பாட வரவேண்டும் என அழைக்கின்றனர்.

இப்படி வந்து கண்ணனது இல்லத்திற்குப் பக்கத்தில்லம் வருகின்றனர். இடையிலே ஒரு சுவர்கூட இல்லாததால் இவள் நினைத்தபோதெல்லாம் கண்ணனைத் தரிசிக்க முடியும் தவம் செய்து கண்ணனை காணும் சுவர்க்க போகம் பெற்ற பாக்யவதியே 'நோற்று சுவர்க்கம் புதுகின்ற அம்மனாய்' என அழைக்கின்றனர். அவள் பதில் பேசாது படுத்திருக்கிறாளாம். கண்ணனைக் கண்ட இன்பத்திலே களிப்பு மிகுந்து பேச முடியாது போய்விட்டதா? கண்ணனுக்கு உன் உடலையும் மனத்தையும் அளிக்கத் தயாராகவுள்ள நீ உன் வாக்கையாவது எமக்கு அளிக்கக் கூடாதா? வாய் திறவாதுள்ள நீ வாசற்கதவையாவது திறக்கக்கூடாதா? மாற்றமும் தாராரோ வாசல் திறவாதாரா? என்று கேட்கின்றனர். கண்ணன் இங்கு வந்து இவளைக் கண்டு போயுள்ளான் போலும்! அதனால்தான் துளசி மாலையின் வாசம் வீசுகிறது! நாற்றத்துழாய் முடி நாராயணன். நாம் வணங்கி வழிபட்டால் வேண்டுவனவற்றை யளிக்கும் அந்த இறைவன் கும்பகர்ணனைக் கொன்று விட்டான். அவனிடமிருந்த நித்ராதேவி உன்னிடம் வந்துவிட்டாளோ? அதனால்தான் நீ பெருந்துயில் தூங்குகிறாயோ? அடி! அம்மா! பேரழகியான நீ எங்களுடன் சேர்ந்தால் அழகிய இரத்தின மாலைக்கு நடுக்கல் வைத்த மாதிரியன்றோ! திடமாக எழுந்து வா? என அழைக்கின்றனள்.

அடுத்து மந்தை மந்தையாகக் கால்நடையாகக் கால் நடைச் செல்வமுள்ள ஒருவனின் மகள். அவள் தந்தை பணக்காரன் மட்டுமல்ல. எதிரிகளை வெல்லக் கூடியவன். கொல்லக் கூடியவனல்ல! அவர்களின் பலத்தை (திறல் அழிய) அழித்து நண்பராக்கிக் கொள்ளக் கூடியயவன். ஆயுதமில்லாதவனுடன் போரிடல், பயந்து புறமுதுகு காட்டுதல் போன்றவை கூடாது என்று போர்வீரம் அறிந்தவன். அவனுடைய மகளைப் பொற்கொடியே என விளிக்கின்றனர். கண்ணன் மேகம் நிறம், நீ அவனைத் தழுவக்கூடிய பொன் போன்ற. மின்னல் போன்ற கொடியன்றோ! மயில் போன்றவளே! எல்லாரும் உன் முற்றம் புகுந்து கண்ணன் நாமம் பாட நீ இவ்விடம் பேசாமல் தூங்கலாமா? ஓய்வா எடுக்கிறாய்? கண்ணனைப் பற்றிப் பாடுவதும் ஆடுவதுமே ஓய்வுதானே!" என்கின்றனர்.

அடுத்த வீடு கண்ணனுடைய நண்பன் ஒருவனுடைய வீடு. அவன் வீட்டில் கன்றுகளை நினைத்து மடி சுரந்து பசுக்கள் பாலை ஒழுகவிட்டமையால் வீட்டு முற்றம் ஒரே பால் சேறு. கண்ணனுக்குச் சேவை செய்து அவனது அருளைப் பூரணமாகப் பெற்றவன். அதனாலே அவ

னைச் செல்வன் என அழைக்கின்றனர். அருட் செல்வத்துடன் பொருட் செல்வம் பெற்றவன். அவனுடைய தங்கையை எழுப்புகின்றனர். உள்ளே வருவதற்குப் பால் சேருக உள்ளதால் தடுக்கிறது. வெளியே நிற்கலாமென்றால் பனி பெய்கிறது அதனால் வாசலைப் பற்றிக் கொண்டு நிற்கின்றார்களாம் பனித் தலை வீழநின் கடை பற்றி நிற்கின்றோம். எங்களுக்காக எழாவிட்டாலும் மனத்துக்கினியவனான இராமனைப் பாடுகிறோம். இலங்கை அரசனைக் கொன்று தருமத்தை நிலைநாட்டியவன் மனத்துக்கினியவன் அன்றோ? உன்னை எல்லோரும் தேடி வர வேணுமென்று நினைத்திருப்பாயோ? எல்லோரும் வந்துவிட்டோம் எழுந்து வா!'' என காலடியில் பால் வெள்ளம், தலையிலே பனிவெள்ளம், மனத்திலே இறைவனின் மீது பக்தி வெள்ளங் கொண்டு எழுப்புகின்றனர். கண்ணனின் நண்பனாகும் பேறு பெற்ற ஒரு நற்செல்வனின் தங்கையை

இப்படி இராமனின் பெருமை பாடும் போது, கண்ணன் மீது அன்புள்ள சில பெண்கள் பிணங்க அவர்களை திருப்தி செய்வதற்காக பகாசுரன் என்பவனை பறவையுருகொண்டுவந்தவனை வாயைக் கிழித்தான் புள்ளின் வாய் கீண்டான் என குறிப்பிடுகின்றனர். பொல்லாத அரக்கர்களான இரணியன் இராவணன் போன்றவரை நகத்தால் பூக்கிள்ளுவது மாதிரிக் கிள்ளிக் கொன்றனன். அரக்கர்களிலும் பிரகலாதன், விபீஷணன் போன்ற நல்ல அரக்கர் பெருமையடைந்தனர். இரணியன்-இராவணன் போன்ற பொல்லா அரக்கர்களை களையெடுப்பது மாதிரி அழிக்கப் பட்டனர். என்பது குறிப்பு.

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

(மாதப் பத்திரிகை)

- தமிழகத்தின் சமய வளர்ச்சிக்காக ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனின் சார்பாக தமிழில் வெளிவருகிறது.
- மகான்களின் வாழ்க்கையில் நடைபெற்ற சுவையான நிகழ்ச்சிகள், நடைமுறை வாழ்க்கையில் மதத்தைக் கைக்கொள்ள வேண்டிய வழிமுறைகள், சாஸ்திரங்களின் உட்பொருள் விளக்கங்கள், ஆத்ம தத்துவம் குறித்த ஆராய்ச்சி, வேதாந்தம், பக்தி, சமய சமரசம், உபநிஷத் உண்மைகள், சைவம், வைணவம், ஞானக் கதைகள் ஆகிய கருத்துக்களைக் கொண்டது.
- தற்கால நவீன மக்களின் மனப்போக்குக்கு ஏற்ற வகையில் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரும், சுவாமி விவேகானந்தரும் காட்டிய வழியில் சிறந்த மனிதர்களை உருவாக்குவது ஒன்றே இப்பத்திரிகையின் இலட்சியம்
- உங்கள் உள்ளம் உயர, நீங்கள் அவசியம் படிக்க வேண்டிய பத்திரிகை இது.

சந்தா விவரம்:

வருட சந்தா ரூ. 12 — ஆயுள் சந்தா ரூ 150

தனிப் பிரதி ரூ. 1-20

ஆயுள் சந்தாவை மொத்தமாகவோ, பகுதியாகவோ, மாதம் ரூ. 15 ஆகவோ ஒரு வருடத்திற்குள் செலுத்தலாம்.

தேவைக்கு எழுதுங்கள்:

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் காரியாலயம்

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்

மயிலாப்பூர் — சென்னை - 600 004.

ஆண்டாள் பிறந்த அன்று வியாழனும் சுக்கிரனும் ஒரே ராசியிலிருந்தனர் எனச் சோதிடக் குறிப்பாக வெள்ளி எழுந்தது வியாழம் உறங்கிற்று எனக் கூறுகின்றனர். வெள்ளிக்கிழமை வந்துவிட்டது வியாழக் கிழமை கழிந்தது எனச் சாதாரணமான பொருள் கொள்ளுவதுதான் சிறப்பு என்பர் சிலர். பொழுது விடிந்தது வெள்ளிக் கிழமை சீக்கிரம் நீராடவா என அழைக்கின்றனர்.

காலையில் மலர்கள் மலர்ந்து விட்டன. அடியார்களான சன்னியாசிகள் திருக் கோயில் சேவை செய்யப் புறப்பட்டுவிட்டனர். எங்களை முன்னாலே வந்து எழுப்புகிறேன் எனக் கூறிய நீ தூங்குகிறாயே! வெட்கமில்லையா? அடியள் வேண்டும் போது சங்குசக்கரங்களுடன் தாமரை போன்ற முகத்துடன் காட்சியளிக்கும் கண்ணனையும் பாடவா என எழுப்புகின்றனர்.

அடுத்த பாசுரத்தில் ஒரு பெண்ணை எழுப்புகிறார்கள். இன்றும் தூங்குகிறாயா? எனக் கேட்க அப்படிச் சொல்லாதீர்கள் என்கிறாள் அவள். கேலிசெய்கிறாயா? அப்படிச் சொல்லாதீர்கள் இதோ வந்துவிட்டேன் என்கிறாள் அவள். கேலி செய்கிறாயா? நீ வாயாடி என அறிவோம் பரவாயில்லை நானே குற்றவாளியாகிறேன் என்கிறாள். நாங்கள் வந்தபோது நீ உடனே ஓடி வரவேண்டாமா? எனக்கேட்க எல்லாரும் வந்து விட்டார்களா? என்று பதில் கேள்வி போடுகிறாள். யாவரும் வந்து விட்டனர். வந்து எண்ணிக் கொள் என்று கூறி குவலயா பீடமென்ற யானைக் கொன்றவனை அரக்கர்களை அழித்தவனைப் பாடவா? என அழைக்கின்றனர்.

இந்தப் பாசுரத்துடன் பெண்களை எழுப்பும் வேலை முடிந்து கண்ணனின் அரண்மனை வாசலில் வந்து விட்டனர் என்பது அறியலாம்.

கடைசியான மேற்படி பாசுரத்தில் பக்தர்களை தரிசிப்பதும், அவர்களது சொற்களைக் கேட்பதும், இன்பமளிக்கும் என்பதால் இளங்கிளியே எனக் குறித்தார். பக்தர்களுடன் கலவாதிருக்கக் கூடாது என்பதை இன்னும் உறங்குதியோ எனச் சூசிப்பித்தார். திருமால் அடியார்களுக்குள் கடுஞ் சொல்வரக் கூடாத என்பதால் சில்லென்றழையேன் மன் என்றாள். திருமாலடியார்களிடம் கௌரவமாகப் பேச வேண்டுமென்பதால் நங்கைமீர் போதருகின்றேன் என்றாள். அடியார்கள் கடுமையாகப் பேசினாலும் அது நன்மை என்பதை வல்லை உன் கட்டுரைகள் என்றாள் பிறர் குற்றத்தையும் தன் குற்றமாகக் கொள்ளுதல் ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணம். ஆதலால், வல்லீர்கள் நீங்களே நானே தானாயிடுக! என்றார். திருமாலடியார்கள் சிறிது நேரம் கூடப் பிரியக் கூடாது என்பதை ஒல்லை நீ போதாய் எனக் கூறி துரிதப்படுத்தியவாறு, பகவானருள் பெற்று அனுபவமும் பக்தரிடமும் அன்பும் உடையவராயிருக்க வேண்டும் என்பதை உனக்கென்ன வேறுடையை என்று கூறினாள். அடியார் இறைவனையடைய ஆவலுள்ளவர் என்பதை எல்லோரும் போந்தாரோ எனக் கேட்பதன் மூலம் தெரிவித்தாள். பக்தர்குழாம் ஒருவர் கூடக் குறையக்கூடாது. ஒருவர் குறைந்தால் கூட இன்பம் குறையும் என்பதை 'போநதள் போய்ந்தண்ணிக் கொள்' என்றாள்.

பரிபூரணமான அருளை அடைய வேணுமென்ற ஒரு பெரிய பாகவத கோஷ்டியாகக் கண்ணன் மாளிகை எதிரில் வந்து கூடியுள்ள கோபிகைகளின் இதயகமல வாசனான கண்ணனை வணங்கி வாழ்வோம்!

ஆண்டாள் திருவடிகளே சரணம்

(தொடரும்)

இயற்கையில் இறைவன்

வே. சு. ஸ்ரீதரன்

இறைவன் எங்கு உள்ளான் என்பது அனைவருக்கும் சந்தேகத்துக்கு இடமாக உள்ளதல்லவா? இறைவன் என்ற சொல் ஒரு குறிப்பிட்ட ஆளைக் குறிக்கவில்லை. அது ஒரு கொள்கையைக் குறிக்கிறது. ஆகவே, கொள்கையைக் காண முடியாது அனுபவிக்கத் தான் முடியும். உணரத்தான் முடியும். இறைவனை ஒரு குறிப்பிட்ட வடிவத்துக்குள் அடக்கி விட்டால் அவன் இறைவன் என்ற எல்லையற்ற, பூரணமான, அழிவற்ற, பேதமற்ற நிலையிலிருந்து மாறி, ஒரு குறுகிய எல்லைக்குள் வந்து விடுவான். இருந்தாலும், மனதில் நிலைநிறுத்துவதற்காகவும், நடைமுறைக் காரணங்களுக்காகவும், அவன் ஒரு வட்டத்துக்குள் இருப்பதாக நாம் எண்ணிக் கொள்கிறோம்.

அப்படியே இறைவனை ஒரு வடிவத்தானாக எடுத்துக் கொண்டாலும் கூட, அவனே எல்லாவற்றையும் படைத்தும், அதன் உட்பொருளாயும் இருப்பதால், அவனை எல்லாப் பொருள்களிலுமே காண வேண்டும். கண்ணுக்கு முன்னே தோன்றும் இயற்கைப் பொருள்கள் அத்தனையுமே இறைவன் தான்.

இயற்கைப் பொருள்களினால், ஒவ்வொன்றிலும் அவன் ஒவ்வொரு அழகாக இருக்கிறான். மனிதர்களில் காணப்படும் அழகு, அறிவு திறமை பண்பு, உயர்ந்த எண்ணம் இவையெல்லாம் இறைவனின் முத்திரைகளே, குறிப்பாக இயற்கையின் அழகு, அறிவு, திறமை, பண்பு உயர்ந்த எண்ணம் இவையெல்லாம் இறைவனின் முத்திரைகளே, குறிப்பாக இயற்கையின் அழகு அதன் அளவில்லாத பரிணாமிப்புகள் இவைகளில் ஈடுபடாத மனித உள்ளமே கிடையாது. இசையில் மயங்காத இதயம் இல்லை. கலையில் மூழ்காத உள்ளம் இல்லை. இயற்கையின் விநோதமான படைப்புகள் இறைவனின் சக்தியின் மாட்சியை வல்லமையை எல்லோருக்கும் தெரிவிக்கும் சின்னங்களாய் விளங்குகின்றன. ஆதாரம் இல்லாத பொருள் ஒன்றும் இருக்க முடியாது என்ற நீதியைச் சொல்லாமல் சொல்லுகின்றன.

இயற்கைப் பொருள்களில் காணப்படும் வியக்கத்தக்க நேர்த்தியும், சீரான தன்மையும், மனித சக்திக்கு அப்பாற்பட்ட தன்மையும் அவைகளைப் படைத்தவன் யார் என்று சிந்திக்க வைக்கின்றன. இறைவன் என்ற கொள்கையை ஒத்துக் கொள்ள வேண்டி இருக்கிறது. பெயர்களில்தான் வித்தியாசம்.

இடி, மின்னல் போன்ற இயற்கை நிகழ்ச்சிகளில் இறைவன் கொடுமையைக் காட்டுகிறான். இதமான காற்றிலும், மலரின் மணத்திலும் இனிமையைத் தருகிறான். கண்ணுக்கு விருந்தான காட்சிகளில் மகிழ்ச்சியைத் தருகிறான். அருவியின் ஒலியிலும், பறவை

நீங்களே உங்கள் உறுப்புக்களை தீமை செய்யும் கருவிகளாக ஆக்காதீர்கள். கடவுளுக்கு ஏற்புடையதைச் செய்யும் கருவிகளாய் உங்கள் உறுப்புகள் இருக்கட்டும். நீங்கள் சட்டத்தின் அதிகாரத்தில் இல்லை. இறையருளின் அதிகாரத்தில் இருக்கிறீர்கள்.

—பைபிள்

களின் கானத்திலும் இசையாய் நிற்கிருன்.

இப்படி இயற்கையில் இறைவனைக் காணும் போதுதான், வேறுபாடான எண்ணங்கள் மறைகின்றன. ஒருமித்த அத்வைத நிலை உண்டாகிறது. தான்வேறு, உலகம் வேறு என்ற பேதம் அங்கு இருப்பதில்லை.

இயற்கையில் ஒரு உயிரோட்டம் இருக்கிறது. அது வெளிப்படையாகத் தெரிவதில்லை. அற்புதமான வகையில் பொருள்கள் தோன்றுகின்றன. வளர்கின்றன. இறைவனின் அம்சம் இல்லாமல் இந்த அற்புதங்கள் நடப்பதில்லை.

இயற்கையைக் கூட, அக இயற்கை, புற இயற்கை எனக் கூறலாம் கண்ணில் காண முடியாத தன்மைகளான பண்புகள், திறமைகள், அழகு இவைகளெல்லாம் அக இயற்கை, கண்ணில் தெரியும் பொருள்களெல்லாம் புற இயற்கை.

மனிதர்களின் சிந்தனைகளிலே எவ்வளவோ உயர்ந்த சிந்தனைகள் உள்ளன நல்ல எண்ணங்கள் உள்ளன. காரியங்களிலே எவ்வளவோ எண்ணங்களிலே எவ்வளவோ சீரும், நேர்த்தியும் உண்டு. அறிவிலே எவ்வளவோ வகையான அறிவு உண்டு. கலையுணர்விலே எவ்வளவோ சிறப்பு உண்டு. இவைகளெல்லாம் இறைவனின் தன்மையின் சிறுதுளிகளே

அவனன்றி ஒன்றும் இல்லை. என்றஎண்ணமே, எலலாம் அவனே என்று காண ஆரம்பித்தால் தான் புரியும். பெரும்சக்தியை இயற்கைப் பொருள்கள் சிறு அளவிலே ஆங்காங்கு பிரதிபலிக்கின்றன. இயற்கையைக் காண்பவர்கள் இறைவனைக் காண்கிருர்கள். ❋

1856-ம் வருஷத்திய ரிஜிஸ்த்ரேஷன் ஆப் நியூஸ பேபபர் (சென்டரல விதிகளில் 8-வது விதிபபடி, குணடுசி எனற தமிழ் மாதப் பத்திரிகையின் பத்திரிகையாளர் பற்றிய கீழக்கணட விவரங்கள் பிரசுரிககப்படுகின்றன.

பாரம் - 4

1.	பிரசுரிக்கப்படும் இடம்	சென்னை,
2.	பிரசுரத்தின் தன்மை	மாதப் பத்திரிகை
3.	அச்சிடுவோர் பெயர் விலாசம்	கே. ராதாகிருஷ்ணன். இந்தியர் நடராஜா பிரிண்டர்ஸ், 78, டாகடர் பெசணட் சாலை, சென்னை-14
	பிரசுரகர்த்தா, ஆசிரியர் பெயர் எத்தேசத்தவர்? விலாசம்	கே. ராதாகிருஷ்ணன் இந்தியர் 78, டாக்டர் பெசண்ட்சாலை, சென்னை-14
4.	இப்பத்திரிகையின் சொந்தக்காரர் பெயர், விலாசம், மொத்த முதலில் நூற்றுக்கு ஒன்றுககு மேல் முதல போட்டுள்ள கூட்டாளிகள், பங்குதாராகள் பெயர்கள், விலாசஙகள்.	நடராஜா பப்ளிகேஷன்ஸ கே. ராதாகிருஷணன், பூரண உரிமையாளர் 78, டாக்டர் பெசணட்சாலை, சென்னை-14.

கே. ராதாகிருஷ்ணன எனற நான், இதன் மூலம் தெரிவித்துக்கொளவது என்னவென்ருல், மேலே கொடுக்கபபட்டுள்ள விவ்ரஙகளனைததும் நானறிந்த மட்டில் உண்மை.

தேதி 1—3—81

(ஒப்பம்) கே. ராதாகிருஷ்ணன்
பிரசுரகர்த்தர்

பக்த விஜயம்

ஸ்ரீ. சுகானந்தர்

35

அமைதியும் அழகும் வாய்ந்த ஒரு சிற்றூரிலே சுகாநந்தா என்னும் வேதியர் சிறப்போடு வாழ்ந்து வந்தார். மனைவியின் பெயர் சுரசுரி. வேதியர் நான்கு வேதங்களையும் ஓதியுணர்ந்தவர். மகா பக்திமான். அடியார்களை உபசரிப்பதில் பெரும் ஆர்வமும் திருப்தியும் உள்ளவர். இவர் மற்றவர்கள் பாராட்டும் வண்ணம் வாழ்ந்து வந்தனர். ஊரார் இவரிடம் பெரும் மதிப்பு வைத்திருந்தனர்.

அங்கேயும் சில விஷமிகள் இருந்தனர். இவரது ஆசார அனுஷ்டானங்களும், தெய்வபக்தியும், தர்ம சிந்தனையும் அவர்களுக்குப் பிடிக்கவில்லை. இவரை எப்படியாவது அவமானப்படுத்தி சந்தோஷப் படவேண்டும் என்று நினைத்தனர். ஒரு நாள் கடை வீதியிலிருந்து லட்டு போன்ற இனிப்புப் பண்டங்களை வாங்கி வந்து இவை கோவிலிலிருந்து வாங்கி வந்த பிரசாதங்கள் நீங்களும் சாப்பிடுங்கள் என்றனர். கபடமில்லாத சுகாநந்தர் அதை நம்பினார். பய பக்தியுடன் அதை உண்டார். உடனே அந்த துவேஷிகள் குதூகலத்துடன் நீர் பிறர் வீட்டுப் பட்சணங்களையே உண்பதில்லையே! அப்படியிருக்க கடை வீதியில் வாங்கி வந்த பக்ஷணங்களை சாப்பிட்டு விட்டீரே! இவை கோவில் பிரசாதமில்லை. இப்போது உமது ஆசாரம் எங்கே போயிற்று? என்று பரிகாசம் செய்தனர்.

தாங்கள் ஏதோ பெரிய வெற்றி கண்டவர்கள் போல் கூத்தாடினர். மேலும், நீர் கடையில் வாங்கின பக்ஷணங்களை தின்று விட்டதால் ஆசாரக் குறைவுள்ளவனாகி விட்டீர். இதற்கு பிராயச் சித்தம் செய்து கொள்ள வேண்டும் என்றனர் சுகாநந்தர் இதைக்கேட்டு சிறிதும் கலங்கவில்லை. அவர்களைப் பார்த்து புன்னகை செய்து விட்டு, தாம் தின்ற லட்டு முதலியவற்றை அப்படியே முழுமையாக தம் வாயினின்றும் எடுத்து கீழே வைத்தார். விஷமிகள் அசந்து போனார்கள். அவர்கள் முகம் வெளுத்து விட்டது. ஸ்வாமி! தெரியாமல் தவறு செய்து விட்டோம், மன்னிக்கவேண்டும் என்று காலில் விழுந்தார்கள். சுகாநந்தர் சிறிதும் கோபமின்றி, பகவான் உங்களைக் காப்பாற்றுவார் என்று அன்புடன் கூறி அனுப்பினார்.

இதன்பின் சுகாநந்தருக்கு தீர்த்த யாத்திரை செல்ல வேண்டுமென்ற ஆவல் எழுந்தது. சுரசுரியை அழைத்து, நான் யாத்திரை சென்று விரைவில் திரும்பி வந்துவிடுகிறேன். நான் ஊரில் இல்லாத போதும் வழக்கம் போல் அடியார்களுக்கு அமுது படைத்து அவர்களுக்கு குறைவுஎதுவும் இல்லாமல் உபசரித்து வா என்று சொல்லி விட்டு யாத்திரை புறப்பட்டார்.

வீட்டில் பண்டங்களுக்கு குறைவில்லை. விருந்தளித்து உபசரித்து

வந்தான். இந்த சமயம் அவர் ஊரில்லாதபோதும்கூட அவர் மனைவி பக்தர்களை வரவேற்று உபசரிக்கிறாள் என்ற விஷயம் ஊரெங்கும் பரவியது.

அந்த ஊருக்குப் பக்கத்தில் ஒரு கயவன் இருந்தான். அவனுக்கு நெடுநாளாகவே ஒரு துர்புத்தி. இந்த சுரசுரீயுடன் தனித்துப் பேசி மகிழ வேண்டும் என்று ஒரு தீய எண்ணம். இப்போது அவள் தனித்திருப்பதையறிந்து கொண்டான். பக்தர்களை வரவேற்று உபசரிக்கிறாள் என்றும் தெரிந்து கொண்டான். ஒரு பக்தரைப்போல் வேஷம் பூண்டான், உடம்பெல்லாம் திருநீறு. மடிசஞ்சி. ருத்ராக்ஷமாலை. கையிலே சொம்பு. ரகுபதி ராகவ ராஜாராம் என்ற பாடலுடன் சுகாநந்தர் வீட்டு வாயிலில் வந்துநின்றான்.

கபடமறியாத சுரசுரீ அவனை நிஜமான பக்தன் என எண்ணி அமுதுபடியைக் கொணர்ந்து இட்டு பிரதக்ஷிணம் வந்து, "ஸ்வாமீ! தாங்கள் இன்று எங்கள் குடிலில் தங்கி பூஜையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றாள்" கபட பக்தர் ஒப்புக்கொண்டார். சுரசுரீ இவரை உள்ளே அழைத்துச் சென்று விசிறி, தீர்த்தம் அளித்து, சமையலறையில் நுழைந்தாள். கபடபக்தர் வீடுமுழுவதையும் ஒரு நோட்டம் விட்டு எங்கெங்கே என்னென்ன இருக்கிறது என்று தெரிந்து கொண்டார்.

சுரசுரீ சாப்பாடுபோட்டாள், இவனும வயிறுமுட்ட சாப்பிட்டான். அங்கேயே படுத்து சிரம பரிகாரம் செய்து கொள்வதாகச் சொன்னான். தெருத்திண்ணையிலேயே படுக்க இடமும் படுக்கையும் ஏற்பாடு செய்தாள் சுரசுரீ.

வெளியே குளிர் அதிகமாக இருக்கிறது. உள்ளேயே படுக்க அனுமதிக்க வேண்டும் என்று வேண்டினான் அவன். கபடமறியாத அவளும் இடமளித்தாள் இவனுக்கு சந்தோஷம். இவ்வளவு சுலபமாக தனக்கு இடம் கிடைக்கும் என்று அவன் நினைக்கவில்லை. இடைக்கழியில் படுத்து உறங்குவது போல் பாசாங்கு செய்தான். சுரசுரீ எப்போது வேலைகளை முடித்து உறங்கச் செல்வாள் என்று எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான். அவளும் தன் வேலைகளை முடித்து விட்டு பின் கதவுகளைத் தாளிட்டுக் கொண்டு கூடத்தில் வந்து தன் படுக்கையில் அமர்ந்தாள், வழக்கம் போல் தெய்வத்தை துதித்து விட்டு படுக்கையில் படுத்தாள்.

நடுநிசி ஏதோ ஓசை கேட்டு எழுந்தாள் சுரசுரீ, தான் வழக்கமாக படுக்கும் கட்டிலை நோக்கி அந்த பக்தர் செல்வது தெரிந்தது பக்தர் மெல்ல அடிமேல் அடி வைத்து கட்டிலை நெருங்கினார்.

அங்கே அவர் கண்டது பெரியதொரு வேங்கைப்புலி உறுமலுடன் எழுந்து கட்டிலின் மேல் நின்றது. ஐயோ? என்னைக் காப்பாற்றுங்கள் என்று ஓலமிட்டுக் கொண்டே முட்டி மோதிக் கொண்டு முற்றத்திலே வந்து விழுந்தான். அந்த கள்ள பக்தன். புலியோ வீட்டே அதிரும்

KR
போன். 23033
கடை வீதி
கோவை.

படி உறுமிக் கொண்டு கட்டிலி லிருந்து கூடத்தில் பாய்ந்தது.

புலியாக வந்துள்ளது இறைவனே என்றுணர்ந்த சுரசுரீ இரு கரங்களையும் குவித்துப் பலவாறு துதித்தாள். அந்த மாயப்புலி கூடத்தைத் தாண்டி பின்புறமாக ஓடி மறைந்தது.

முற்றத்தில் விழுந்த வேஷதாரி கல்லில் மோதி தலையில் காயம் பட்டுக் கொண்டு அழுத குரலில், அம்மணி என்னை மன்னிக்க வேண்டும். தங்கள் மகிமையை அறியாமல் தவறான எண்ணங்கொண்டேன். என்னைக் காப்பாற்றுங்கள் என்று கதறிக்கொண்டே காலில் விழுந்தான்.

சுரசுரீ அம்மையார் தன் கணவரை தியானித்து, மன்னித்தேன். எழுந்து ஓடு என்றாள். வேஷதாரியும் தப்பினேன். பிழைத்தோம் என்று வீதிக்கதவைத் திறந்து கொண்டு திரும்பிப் பாராமல் ஓடினான்.

சுகாநந்தர் வீடுதிரும்பி வந்ததும் நடந்தவைகளைக் கேட்டு இறைவனின் கருணையை எண்ணி மனமாறத் துதித்தார்.

அவனையே நம்பியிருக்கும் பக்தர்களை அவன் எப்படியும் காக்கின்றான் என்று இருவரும் அவனைப் பாடி மகிழ்ந்தார்கள் தங்கள் வாழ்நாள் பூராவும் தெய்வ வழிபாடும் அடியார்களுக்கு உபசரிப்பும் குறைவின்றி செய்து மகிழ்ந்தார்கள்.

சுகாநந்தரின் சரித்திரம் மஹா பக்தர்கள் வரிசையில் இடம் பெற்றது. —வைரம்

*

எல்லாம் பிரம்மம். பிரம்மத்தினிடமிருந்து நான் ஒதுங்கவில்லை. பிரம்மம் என்னை ஒதுக்காமல் இருக்கட்டும். —கேனோபநிஷத்

அலலிக்கேணியில் அதிசயக் காட்சி சாலை

உங்கள் குடும்பங்களுக்கும், கல்யாணம் மற்றும்
விசேஷ வைபவங்களுக்கும் தேவையான எல்லாவித அவசியப்
பொருள்கள் எப்பொழுதும் உங்களுக்கு திருப்தியளிக்கும்
வகையில் நம்பகமான, நியாய விலையில் கிடைக்கும்

ரொக்க விலைக்கும், சுலபமான தவணை முறையிலும் தருகிறோம்

எவர்சில்வர் பாத்திரவகைகள், பிரிஸ்டிஜ் குக்கர் மற்றும் பலவிதமான குக்கர்கள்
கிரைண்டிங் மிஷின் முதலிய உங்கள் வீட்டிற்கு தேவையான யாவும்
நம்பிக்கையுடன் வாங்க சிறந்த இடம்

மாதாந்திர சேமிப்பு திட்டத்தில் சேர்ந்து பயனடையுங்கள்

தமிழ்நாடு பாத்திரக் கடை

120, பெரிய தெரு — திருவல்லிக்கேணி, சென்னை-5.

எமது சார்பு ஸ்தாபனம் :— தமிழ்நாடு டிரேடிங் சென்டர், கல்பாக்கம்.

லக்ன பலன்



குண்டூசி ஜோஸ்யர்

(16 - 3 - 82 முதல் 15 - 4 - 82 வரை)

மேஷம்

இம்மாதம் மாணவர்களுக்கு கல்வி யில் ஆர்வம் ஏற்பட்டு நன்மையில் முடியும். வியாபாரிகளுக்கு ஆதா யம் ஏற்படும் வாய்ப்பு நன்றாக உள்ளது. இவர்களுக்கு இருந்த எதிர்ப்புகள், மறைந்து விடும். வழக்குகள் சுலபமாக முடியும். நோயாளிகள் உடல் நலம் பெறுவர். பணவிஷயம் தாராளமாக இருக்கும் நண்பர்கள் மூலமாகவும் உதவிகள் கிட்டும். ஒரு சிலருக்கு ஆடை ஆபரணம், வாகன வசதியாவும் ஏற்பட வாய்ப்பு உள்ளது. விவ சாயிகளுக்கு நல்ல விளைச்சல் கண்டு நல்ல லாபம் கிடைக்கும்.

ரிஷபம்

குடும்பத்தில் அன்னியர் மூல மாக சிறு குழப்பம் ஏற்படலாம். ஆயினும் இது தற்காலிக மானதே சிலர் புதிய தொழில்களில் ஈடுபட ஏதுவுண்டு. இது சம்பந்தமாக குடும்பத்தில் அபிப்ராய பேதம் ஏற் படலாம். ஆயினும் முயற்சியை கைவிட வேண்டாம். விவசாயி களுக்கு அனுகூலமான காலம் விளைச்சல் மிகுந்து செழிக்கும். கலைத்துறையினருக்கும் ஆதாய மான பலன்கள் காணப்படுகிறது. உத்தியோகஸ்தர்களுக்கு நல்ல எதிர் காலம் இருக்கும்.

மிதுனம்

இவர்களுக்கு புகழ், அந்தஸ்து யாவும் உயர்வாக இருக்கும். ஒரு சிலருக்கு நிலம் வீடு போன்றவை வாங்க வாய்ப்பு உள்ளது. மாணவர் களுக்கு நல்ல எதிர்காலம் உண்டு வியாபாரிகளுக்கும் இது ஒரு பொன்னான காலம். பெரியோர் களின் உதவி கிடைக்கும். சிலருக்கு அரசாங்க உதவியும் ஆதரவும் கிடைக்கும். புத்திரர்களால் பெருமை ஏற்படும். கலைத்துறையி னருக்கு புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கலாம். ஒரு சிலர் அயல் நாடு செல்வர்.

கடகம்

இவர்களுக்கு உல்லாச வாழ்க்கை யில் நாட்டம் ஏற்படலாம். சிலர் காதல் விவகாரமும் வைத்துக் கொள்வார். கலைஞர்களுக்கு புதிய தொடர்புகள் ஏற்பட்டு அதனுல் அனுகூலமும் ஏற்படும். பணவிஷ

செத்தவரைப் பற்றி நல்லதையே பேச வேண்டும், நல்லதையே எழுத வேண்டும்.

—ஒரு ஆங்கிலப் பழமொழி

யும். சரளமாக இருக்கும். நிதானத்துடனிருப்பது நல்லது. விவசாயிகளுக்கு நல்ல பலன்கள் உண்டு. குடும்பமும் செழிப்பாக இருக்கும்.

சிம்மம்

இவர்களுக்கு இது வரையில் இருந்து வந்த பணத்தட்டுப்பாடு தீர்ந்து சௌகர்யம் ஏற்படும். உறவினர்கள் உதவி செய்வார்கள். எதையும் தீர ஆலோசித்து முடிவு எடுப்பது நல்லது. குடும்பத்தில் பிரச்சனைகள் ஏற்படும். சந்தர்ப்பத்துக்குத் தகுந்தபடி புத்திசாலித்தனமாக நடந்து கொள்ள வேண்டும். உடல் நலம் சிறிது பாதிக்கப்படலாம். கலைத்துறையினருக்கு நல்ல யோக காலம் இது.

கன்னி

இவர்களுக்குப் பணமுடை ஏற்படும். கடன் வாங்கி சமாளிக்க வேண்டியிருக்கும். காதல் விவகாரங்களில் குடும்பத்தில் எதிர்ப்பு ஏற்படலாம். கலைத்துறையினருக்கு சற்று போதாத காலமாயிருக்கும். விவசாயிகளுக்கு சில நிர்பந்தங்களும் சோதனைகளும் ஏற்படும். கால் நடைகள் பயிர்கள் பாதிக்கப்படலாம் சிலருக்கு பிரயாணங்கள் நேரும். அதனால் சில அனுகூலங்களும் உண்டு.

துலாம்

பொருளாதாரம் மேம்பட இருக்கும். கௌரவம், செல்வாக்குயாவும் உண்டு. வியாபாரிகளுக்கு சுமாரான பலன்களாக இருக்கும். பெண்களால் சில சௌகர்யங்கள் ஏற்படும். விவசாயிகளுக்கு நன்மை உண்டு. சிலருடைய மனைவிமக்களுக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டு செலவும் ஏற்படலாம். எதிலும் நிதானமாகவும், தைரியமாகவும் இருப்பது உத்தமம்.

விருச்சிகம்

நெருங்கிய பந்துக்கள் வருவார்கள். தொழில் நன்றாக நடைபெறும் வியாபாரிகளுக்கு மிகவும் அனுகூலமான காலம் இது. வியாபாரம் விருத்தியாகும் ஆதாயமும் காணலாம். தொழில்துறை மாணவர்களுக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது. கவனமாக படிப்பில் ஈடுபட வேண்டும் வாகனம், பொருள் சேர்க்கையாவும் காணப்படுகிறது. கலை சம்பந்தப்பட்டவர்கள் முயற்சி செய்தால் நல்ல பலன் பெறலாம். விவசாயிகளுக்கும் இது நல்ல காலம்

தனுசு

மாணவர்கள் அக்கறையுடன் படித்தால் வெற்றி பெற வாய்ப்பு உண்டு வியாபாரிகளுக்கு சௌகர்யமான காலம் இது சிலருக்கு நண்பர்கள், உறவினர்களால் நன்மை ஏற்படும். சிலருக்கு காதல் விவகாரமும் முனைக்கும் கலைத்துறையில் உள்ளவர்கள் நல்ல எதிர் காலத்தை நம்பியிருக்கலாம் உஷ்ணசம்பந்தமான நோய்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு.

மகரம்

குடும்பத்தில் ஏற்பட்ட சஞ்சலங்கள் மறைந்து செளர்யமான வாழ்க்கை அமையும். வியாபாரிகளுக்கு

நல்ல காலமாக இருக்கும். மனதில் தைரியமும் தெம்பும் ஏற்படும். தொழில் துறையிலுள்ளவர்களுக்கு சற்று எதிர்ப்பு ஏற்படலாம். இருப்பினும் விரைவில் சரியாகி விடும். வழக்குகள் சுமுகமாக முடியும். எதையும் கவனத்துடன் செய்வது நல்லது. எதிர்ப்புகள் மறைந்து புகழ் ஏற்படும். வியாபாரிகளுக்கும் நல்ல காலம். இது சிலருக்குத் திருமணம் நடைபெறலாம். கலைத்துறையினருக்கு ஒரு யோகமான காலம் இது.

கும்பம்

மற்றவர்களோடு விவாதம் வைத்துக் கொள்ளாமல் அனுசரித்துப் போவது நல்லது. புத்திரர்களால் அனுகூலம் இருக்கும். வியாபாரிகளுக்கு ஒரு வேலையும் பாடுபடவேண்டிய நேரம் இது. சிலருக்கு வாகனம் வீடு போன்றவை கிடைக்கும். கலைத்துறையினருக்கு யோககாலம் ஆரம்பம் என்று கூறலாம். விவசாயிகளுக்கு இது வரையில் இருந்து வந்த தொந்தரவுகள் நீங்கி க்ஷேமம் ஏற்படும்.

மீனம்

குடும்பத்தில் கொஞ்சம் பண விரயம் ஏற்படலாம். சிலருக்கு வெளியூர் பயணங்களும் ஏற்படலாம். செலவுகளையும் எதிர்பார்க்கலாம். மாணவர்கள் அதிகசிரமத்தின் பேரில் வெற்றி பெற வேண்டியிருக்கும். வியாபாரிகள் எச்சரிக்கையுடனிருக்க வேண்டும். சிலருக்கு புதிய சிக்கல்கள் ஏற்படலாம். மேலதிகாரிகளின் தொந்தரவுகளுமிருக்கும். கலைத்துறையினருக்கு செலவுகள் அதிகம் ஏற்படும்.

—✳—

ஸ்ரீமத் ராகவேந்திர சுவாமிகள் அருளிய

ஏகஸ்லோகி சுந்தரகாண்டம்

யஸ்ய ஸ்ரீ ஹனுமாக் அநுக்ரஹ பலாத் தீர்த்வாம்புதிர் லீலயா
லங்காம ப்ராப்ய நிசாமய ராமதயிதாம் பங்த்வா வனம் ராக்ஷஸான்
அக்ஷாதீன் விநிஹத்ய வீக்ஷ்யதசமுகம் தக்த்வா புரீம்தாம் புனः
தீர்த்வாப்திம கபிபிர்யுத: யமனமத் தம ராம சந்திரம் பஜே

எவருடைய கடாக்ஷத்தினாலே ஸ்ரீ ஹனுமான் விளையாட்டாகக் கடலைத் தாண்டி இலங்கையை அடைந்து ஸ்ரீ ராமபத்னியான சீதையைக் கண்டு, அரக்கர்களுடைய வனத்தை அழித்து, அக்ஷய குமாரன் முதலான வீரர்களைக் கொன்று, ராவணனைக் கண்டு இலங்காபுரியை எரித்து, மறுபடியும் கடலைக் கடந்து வானரக் கூட்டங்களுடன் சேர்ந்து, எவருடைய திருவடித் தாமரைகளில் பணிந்தாரோ (சரணடைந்தாரோ) அப்படிப்பட்ட பெருமையுடைய, அண்டினோரை ஆதரித்து அருள்பாலிக்கும் ஸ்ரீராமச்சந்திரனை வணங்குகிறேன்.

இந்த ஸ்லோகத்தைப் பாராயணம் செய்வதால், சுந்தரகாண்டம் பூராவும் பாராயணம் செய்த பலனும், ஸ்ரீ ராமபிரான் அருளும் நிச்சயம் நமக்கு கிடைக்கும்.

—விளக்கம் :- டாக்டர் கே ராகவன், சென்னை-17.

கருணைக் கண்காட்டி களித்திட அருள்வாய்

இறைவனைக்காட்டிலும் அவனது திருவடிகள் பெருமையுள்ளன என்பர் பெரியோர். "நான் புலம்பினால் நீ பேசாமலிருந்தாலும், உன் திருவடிகள் எனது புலம்பலைத் தாங்காது, என்னிடம் உன்னை கொண்டு வந்து விடுமே என்பர் அருட்பிரகாச வள்ளலார். தனக்குத் திருவடி தீக்ஷை செய்ததை எண்ணி

சாடும் தனிவேல் முருகன் சரணம் சூடும்படி தந்தது சொல்லுமதோ

என்கிறார் அனுபூதி ஆசிரியர். இறைவனே! நல்லூரிலே அப்பர் பெருமான் திரு முடியிலே உன் திருவடியை வைத்தபோது, அவர் தம் திருமுடி எப்படிக் குளிர்ந்ததோ, அதை எண்ணி, என் தலை மட்டுமல்ல, மனமும் குளிருகின்றது.

துடிவைத்த செங்கையரசே நல்லூரில் நின் தூமலர்ப் பொன்
அடிவைத்தபோது எங்கள் அப்பர் தம் சென்னி அது குளிர்ந்து எப்
படிவைத்ததோ இன்பம் யானெணுந தோறு மிப்பாவிக்குமால்
குடிவைத்த புன்தலை யொன்றோ? மனமும் குளிாகின்றதே

என்றும் சுந்தரமூர்த்தி நாயனார் திருவதிகை-சித்தவடமடம் புகுந்து உறங்கிய காலத்து இரண்டு முறைகள் அவரது திருமுடியில் தனது திருவடியை வைத்தருளினார் இறைவன், இச்சம்பவத்தை;

ஒரு முடிமேல் பிறைவைத்தோய் அரி அயன் ஒண்மறை தம்
பெருமுடிமேலுற வேண்டிட வராது உனைப் பித்தனென்ற
மருமுடியூரன் முடிமேல் மறுப்பவும் வந்தது அவா
திருமுடிமேலென்ன ஆசை கண்டாய நின்திருவடிக்கே

என்ற பாடலில் சுந்தரமூர்த்தி நாயனாரின் திருமுடிமேல உனக்கு என்ன அவ்வளவு ஆசை எனக் கேட்கிறார். இப்படிப்பட்ட உன் திருவடியை தினமும் தொழுகிறேன் என்கிறார் ஸ்ரீ ஆசாரியாள்.

மனித உடலோ மனமோ ஏதோ ஒரு பொருளைத்தான் தாங்கும். மனிதன் கள்ளைக் குடிக்கிறான். கள் உள்ளே சென்று அவனது அறிவை வெளித் தள்ளிவிடும் தயிர் நிறத்து உறு கள் உளளம் தள்ளுற அறிவு தள்ளி என்பது கம்பன் வாக்கு. சிவ பெருமானை நெஞ்சிலே வைத்த இராவணன், சீதையை அதே நெஞ்சிலே வைத்தமையால், சிவபெருமான் அவனது நெஞ்சினின்றும் நீங்கினார். அதுவே அவன் அழிவிற்குக் காரணமாயிற்று என்பது உலகமறிந்த உண்மை. எனவே, இறைவனது நாமத்தைக் கூறி அவனை நம் நெஞ்சிலே வைக்க வேணும். பெண்ணாசையை மறந்தால் உன்னை மறவாதிருப்பேன்

மருவு பெண்ணாசை மறக்க வேண்டும், உனை மறவாதிருக்க வேண்டும்

ஸ்ரீ. ராமகதாரத்ன - V. தியாகராஜன்

என்பார் வள்ளலார். நாமத்தை மறவாதிருந்தால் இறைவன் நம் நெஞ்சிலே நிறைந்து விடுவான். அழியாத அவனை நினைத்தால் நமக்கும் அழிவு கிடையாது;

இறைவனது திருவடித் தாமரையை தினமும் தொழுது, அவனது நாமத்தைக் கூறி எவ்வேளையும் அவனது நினைவாகவே இருந்து வாழ்த்தி வணங்கினுல் அவனது கடைக் கண்பார்வை நம்மீது படும் கண்ணுல் பார்த்து அருளுவதை சட்சுதீக்ஷை என்பர். நாவுக்கரசு சுவாமிகளைக் கொல்லுமாறு சமணர்கள் யானை ஒன்றை ஏவ, நாம் அஞ்சுவதில்லை என அவர் பதிகம் பாடிய காலத்து, தற்செயலாக உத்தம அடியாரான சுவாமிகளின் அருட்கண் நோக்கம் பெற்ற யானை அன்புருவான சுவாமிகளை, சீடன் ஒருவன் தன் குருவை வலம் வந்து வணங்குவது போல், மும்முறை வலம் வந்து வணங்கி அகன்றது என்கிறர் சேக்கிழார்.

தண்டமிழ் மாலைகள் பாடித் தம் பெருமான் சரணைக்
கொண்ட கருத்தில் இருந்து குலாவிய அன்புறு கொள்கைத்
தொண்டரை முன்வலமாகச் சூழ்ந்தெதிர் தாழ்ந்து நிலத்தில்
எண்டிசை யோர்களும் காண இறைஞ்சி எழுந்தது வேழம்

இந்திரன் வியாழ பகவானுன குருவை இகழ்ந்ததன் காரணமாகப் பலவிதமான அல்லல்களை அடைந்து கடைசியாக கதம்ப வனம் (பின்னுல் மதுரையாகப்போகும்) என்ற இடத்தை அடைந்து அங்கிருந்த சிவலிங்கத்தைப் பூசிக்க, முன்னவன் அடியார் எண்ணம் முடிப்பவன் அருட்கண் நோக்கால் இந்திரனுக்கு அருளி, ஒவ்வொரு வருடமும் சித்திராபவுர்ணமியன்று பூசிக்கும் யாவருக்கும் வருடம் பூராவும் பூசித்த பலன் கிடைக்குமாறு அருளினுர் என்பது திருவிளையாடற் புராணம் கூறும் வரலாறு.

சிவபெருமானுடைய பாடலிலே குற்றம் கண்டுபிடித்த நக்கீரன், தான் படித்தோம் என்ற தருக்கிலே நெற்றிக் கண் காட்டி என்னை நீற்றினும உன் குற்றம் குற்றமே எனப் பேசி, நெற்றிக் கண்ணின் வெப்பம் தாங்காமல், பொற்றுமரைக் குளத்தில் விழுந்து மறைந்தனன். பின்னர் கபிலர், பரணர் போன்ற பெரியோர்களின் வேண்டுகோளுக்கு இரங்கிய சோமசுந்தரப் பெருமான் தனது அனற்கண்ணை மறைத்து அருட்கண்ணுல் நோக்க அன்புருவாகவே மாறி தண்ணீரிலிருந்து எழுந்து வந்தான்.

அனற் கணுல் நோக்கினுன் பின் அருட் கணுல் நோக்க ஆழ்த்த
புனற் கணே கிடந்த கீரன் பொறி புலன் கரணமெல்லாம்
கனற்கணுர் தமவேயாகக் கருணைமா கடலிலாழ்ந்து
வினைக்கணே எடுத்த யாக்கை வேறில் அன்புருவமானுன்

இறைவனது அருட்கண் நோக்கம் கீரனது குற்றத்தை மன்னித்தது சிவாபராதத்தால் அவனுக்கு ஏற்பட்ட தொழு நோயை நீக்கியது. அன்புருவாகமாறிய கீரன் கைலைபாதி, காளத்திபாதி, கோபப்பிரசாதம, திருவெழுகூற்றிருக்கை பெருந்தேவபாணி என்ற நூல்களைப் பாடவைத்தது இன்றும இந்த நான்கு நூல்களையும பாராயணம் செய்வோர் கொடிய நோய்களிலிருந்து மீண்டு சுகம் பெறுகின்றனர் என்பது இன்று நடப்பான உண்மை.

இறைவனது அருட்கண் நோக்கம் இது மட்டுமா செய்தது நக்கீரனுக்கு? இறைவனான சிவபெருமான் அகத்தியரை அழைத்துத் தமிழ் இலக்கணத்தைக் கற்பிக்கச் செய்தனர். இலக்கணம் கற்ற நக்கீரன் தனது பாடல்களிலேயே குற்றமிருப்பது கண்டு, சிவபெருமானது பாடலிலே குற்றம் கண்டோமே என வெட்கமடைந்து இறைவனை வணங்கினான்.

இவ்வளவு கருத்துக்களையும்,

எங்கும் நிறைந்த பெருமானே உம் திருவடிகளைப் பூசிக்கிறேன். எப்போதும் உம்மையே தியானம் செய்கிறேன் சரணாகதியடைகிறேன். வாயால் பாடுகிறேன் தங்களது கருணை நிறைந்த பார்வையை என் மீது செலுத்திப் பேரின்பம் தரும் உபதேசம் செய்தருள் வீராக என்று ஸ்ரீ ஆதி சங்கரர் வேண்டுகிறார். ஸ்ரீ ஜகத்குரு வணங்கிய ஜகதீஸ்வரனை நாமும் வணங்கிப் பேரின்பப் பெருவாழ்வு பெறுவோமாக

ஸ்லோகம்

த்வத் பாதாம்புஜம் அர்ச்சயாமி பரமம் த்வாம் சிந்தயாம்யன் வஹம்
த்வாமீஸம் சரணம் வ்ரஜாமி வசஸாத் வாமேவ யாசே விபோ
வீக்ஷாம் மேதிச் சாக்ஷுஷீம் ஸ கருணாம் திவ்யைச்சிரம் பிரார்த்திதாம்
சம்போ லோககுரோ மதீய மனஸஸ ஸௌகயோபதேசம் குரு

தமிழாக்கம்

தொழுகின்றேன் நின்பாத தாமரையே நாடோறும் தோன்றல் - உன்னை
எழுவதுமே நினைக்கின்றேன் சம்போ - நின சரணானேன் வாழத்தி ஏத்தி
விழைவன உன்பால் இரநதேன் தேவரெலாம் - விருமபு விழி அருளைநல்கி
அழிவில பரசுகமுறுவோர் மொழி புகல்க - உலககுருவான தேவே

—கோவை - கவியரசு. நடேசக் கவுண்டர்

ரகுவம்சம்

29

சுக்ரீவன் ஆணைப்படி அங்கதன் தலைமையில் தென்திசை கிளம்பிய வானரர்கள் எல்லா இடங்களிலும் தேடிவிட்டு தெற்கு சமுத்திரத்தை அடைந்தனர் வழியில் தன் பதினாறு வயது மகன் துர்தேவதை ஒன்றால் மரணமடைந்ததற்காக கண்டு என்ற முனிவரால் சாபம் பெற்று பாழான ஒரு இடத்தை அடைந்தனர். அங்கு மாரீசனின் மகனான ஒரு அரக்கன் வானரரை விழுங்க முயன்றான். அவனை அங்கதன் ஓங்கி ஒரு அறை அறைந்து கொன்றான்.

பிறகு, ரிஷிபிலம் என்ற தெற்குக் கடற்கரை ஓரத்தில் உள்ள மாய மாளிகைக்குள் தாகத்திற்காக தண்ணீர் தேடி வானரர்கள் வழி தெரியாது நுழைந்தனர். அந்த மாளிகை மயனால் நிர்மாணிக்கப்பட்டது. அங்கு நிரம்பி இருந்த உணவு வகைகளை உண்டு தாகம் தீர்ந்த வானரர்கள் வெளியில் வர வழி தெரியாமல் தவித்தனர். பின்பு அனுமனின் வேண்டுகோளாலும், ராமகாரியத்தை முன்னிட்டும் அங்கு வசித்த ஸ்வயம்பிரபை என்ற பெண் தவசி வானரர்கள் வெளிவர தன் தபோசக்தி மூலம் உதவினாள். வானரர்கள் யாவரும் வெளிவந்து தெற்குக் கடற்கரை ஓரத்தை அடைந்தனர். இதற்குள் சுக்ரீவன் கொடுத்த ஒரு மாத தவணை முடிந்துவிட்டதாலும் இன்னும் சீதாதேவியை காண முடியாததாலும் வானரர்கள் மனம் கலங்கினர்.

இதே நேரத்தில் கிழக்கு திசை சென்ற வானரர்கள் உலோக வளம் நிறைந்த ராஜதாகாரம் (ஜகர்தா), ஜவனர்கள் வசிக்கும் இடங்கள் (ஜாவா), யுவத்வீபம் (சயாம், மலேயா), க்ஷீரோதம் (பசிபிக்கடல் பகுதிகள்) முதலிய இடங்களில் தேடி மற்ற கீழ்திசை பகுதிகளிலும் முழுவதும் தேடி தேவலோகம் செல்லும் பாதைவரைச் சென்று கிஷ்கிந்தை திரும்பினார்கள்.

மேற்கு திசையில் சென்ற வானரர்கள் சூரம் (பம்பாய் பகுதிகள்) குட்க்ஷி (கட்ச் வளைகுடா), பீமம் (ராஜஸ்தான்), சிந்து நதிக்கரை, மேற்கு மலைத்தொடர், மேலைத் துறைமுகங்கள் முதலிய இடங்களில் தேடி மேற்குக் கோடியில் நரகாசுரனின் பட்டினமான ப்ராக்ஜ்யோதிஷமும் தாண்டி வருணலோக எல்லை வரை சென்று தேடி சீதாதேவியை காணாமல் கிஷ்கிந்தை திரும்பினார்கள்.

வடக்கே சென்ற வானரர்கள் மத்ரம், குரு, காம்போஜம், யவனம், சீனம், பரமசீனம், ரிஷிகம் (ரஷ்யா) கைலாயபர்வம், குபேரப் பட்டினம், வடதுருவம், ஏகாதச ருத்ரர்கள் வசிக்கும் இடம் ஆகிய இடங்களில் தேடி சிதையைக் காணாது கிஷ்கிந்தை திரும்பினர்.

இதே நேரத்தில் தென்திசை சென்ற வானரர்கள் சுக்ரீவன் தங்களுக்குக் கொடுத்த காலத்தவணை தீர்ந்துவிட்டதால் நாடு திரும்ப அஞ்சி, உண்ணா நோன்பிருந்து உயிர் துறக்க முற்பட்டனர். ராம

னின் துயரையும், சீதாபஹரணம், ஜடாயுமோக்ஷம், சுக்ரீவஸக்யம் முதலான விருத்தாந்தங்களை தங்களுக்குள் பேசிக் கொண்டனர்.

இதை அருகில் இருந்த மகேந்திர மலையிலிருந்து சூரியனின் தேர்ப்பாகனான அருணனின் புதல்வனும் சம்பாதி என்ற பெயர் கொண்டவனுமான கழுகரசன் செவி மடுத்தான். தன் தம்பி ஜடாயுவின் மரணம்பற்றி கேட்டதும் மிக அதிர்ச்சி அடைந்து, வானரர்களை அனுகி ராமகதை முழுவதும் அதுவரை நடந்தவைகளை கேட்டறிந்தான்.

பிறகு தானும் தன் தம்பி ஜடாயுவும் முன்னொரு சமயம் போட்டிப் போட்டுக்கொண்டு மேலே மேலே உயரப் பறந்ததையும், சூரியனின் வெப்பத்தால் தன் சிறகுகள் எரிந்ததையும், தம்பி ஜடாயுவை தன் சிறகுகளால் எரியாமல் பாதுகாத்ததால் ஜடாயு மட்டும் காப்பாற்றப்பட்டதையும் பிறகு தாம் இருவரும் கீழே விழுந்து மூலைக்கொருவராக பிரிந்ததையும் சம்பாதி வானரர்களிடம் கூறினான். தான் விழுந்த இடம் நிசாகரர் என்ற முனிவரின் ஆசிரமம். எனவே அவரால் காப்பாற்றப் பட்டதாகவும் ராம காரியத்திற்கு உதவும்பொழுது பழைய சக்தியும் புதிய இறக்கைகளும் ஏற்படும் என்று நிசாகரர் தம் தவ வலிமையால் உணர்ந்து கூறியதாகவும், அவ்வண்ணமே வானரர்களை தான் தற்பொழுது சந்திப்பதாகவும் சம்பாதி கூறினான். பிறகு வானார்கள் உதவியுடன் தன் நம்பி ஜடாயுவிற்கு ஈமக்கடன்களை செய்துமுடித்தான்.

தனக்கு புறப்பார்வையில் நூறு யோஜனை தூரம் பார்க்கும் சக்தியும் வைனதேயரின் வம்சத்தில் பிறந்ததால் அகப்பார்வையான உய்த்துணரும் சக்தியும் உண்டு என்றும், அங்கிருந்து நூறுயோஜனை தாண்டி இலங்கையில் இராவணனின் அந்தப்புரத்தில் வாடிவதங்கிய நிலையில் சீதாதேவி சிறை இருப்பதை தான் பார்ப்பதாகவும் சம்பாதி தெரிவித்தான். அன்றியும் ஒருநாள் தன் மகன் சுபார்சவன் என்ற கழுகு தனக்காக உணவு தேடிச் சென்றபொழுது சீதையை ராவணன் பலாத்காரமாக தூக்கிச் சென்றதைபார்த்ததாகவும் உடனே சுபார்சவன் வலிமையுடன் தாக்க சித்தமானபொழுது இராவணன் சமாதானம் பேசி அக்கழுகுடன் சமரசம்செய்துகொண்டு இலங்கையுள் புகுந்ததாகவும், இச்செய்தியை தன் மகன் சுபார்சவன் சொல்ல தான் கேட்டதாகவும் சம்பாதி வானரர்களிடம் கூறினான்.

இவ்விதம் ராமகாரியத்தில் வானரங்களுக்கு சம்பாதி உதவியதும் அவனது இழந்துபோன பழைய சிறகுகள் முளைக்கத் தொடங்கின. தன் உடலை கவனித்த சம்பாதி கண்களில் ஆனந்த கண்ணீர் பெருக ராம ராம என்று உச்சரிக்கத் தொடங்கினான். மற்ற எல்லா வானரங்களும் வியப்பும் பக்தியும் மேலிட்டு ராம நாமத்தை சம்பாதியுடன் சேர்ந்து இனிமையாக ஒலிக்கத் தொடங்கினர். மகேந்திர மலையிலும், தெற்கு சமுத்திரத்திலும் ராம நாமம் பேரொலியாகப் பரவியது. சம்பாதியின் இரு சிறகுகளும் பூரணமாக வளர்ந்து முழு உருப்பெற்றான். வானரர்களை உடனே இலங்கைக்கு விரையும்படி ஊக்குவித்து விடைபெற்று விண்ணில் பறந்து சென்றான்.

KR சன்ஸ் ஜுவல்லரி
போன். 23033
கடை வீதி
கோவை

பிறகு வானரர்கள் கடலைக் கடப்பது எப்படி என்ற ஆலோசனையில் இறங்கினார்கள். ஒவ்வொருவருக்குமுள்ள தாண்டும் சக்தியைப் பற்றி கூறும்படி அங்கதன் மற்ற வானரர்களை வேண்டிக் கொண்டான். கஜன், கவாக்ஷன், சரபன் போன்ற வானரங்கள் அனைவரும் தத்தம்தாவும் சக்தியை தெரிவித்தனர். அங்கதன் தான் நூறு யோஜனை தூரம் தாண்டுவேன் எனக் கூறியதும் வானரர்களின் கூச்சலும் கரகோஷமும் வானைப் பிளந்தது ஆனால் காரியம் முடிந்ததும் திரும்பி வருவது சந்தேகம் என்று அங்கதன் தெரிவித்தவுடன் வானரர்களின் மௌனமும் சலசலப்பும் சிரிப்பொலியும் ஏற்பட்டன. ஜாம்பவான் உடனே அங்கதனை தூக்கிப் பேசி யுவராஜனை அங்கதனை தூதனுக்கி தனியே செல்ல விடுவது தவறு என்ற கருத்தை தெரிவித்துவிட்டு அனுமனையே அனுப்புவது நல்லது. என்று கூறி ஓர் தனி இடத்தில் அடக்கமாக அமர்ந்திருந்த அனுமனை அணுகினார்.

பூர்வத்தில் புஞ்ஜிகஸ்தலை என்ற அப்ஸர பெண்ணாக இருந்து இராவணனால் பலாத்காரம் செய்யப்பட்டு பிரம்மதேவனைக் குறித்து தவம் செய்து இராவணனின் அழிவிற்கு தானும் ஒரு காரணமாக அமைய வேண்டும் என்று வரம் வேண்டிபெற்று, பிறகு அடுத்த பிறவியில் அஞ்சனை என்ற வானர மடந்தையாக பிறந்தவளுக்கும், வாயுதேவனுக்கும் மகனானவன் அனுமன்.

குழந்தை பிராயத்தில் சூரியனை பழம் என்று எண்ணி முன்னூறு யோஜனை தூரம் உயரம் தாவி இந்திரனின் வஜ்ர ஆயுதத்தால் தாக்கப்பெற்று அனுமன் பூமியில் விழ, வாயு கோபித்து தன் இயக்கத்தை நிறுத்தி ஸ்தம்பித்து நிற்கவே அனைத்து உயிரினங்களும் இறக்கும் தருவாயை அடைந்தன. பிரம்மன் வாயுவை சமாதானப்படுத்தி அனுமனுக்கு எந்த ஆயுதத்தாலும் அஸ்திரத்தாலும் அழிவின்மையையும், பிரம்மாஸ்திரத்திற்கு மட்டும் ஒரே ஒருமுறை ஒரு முகூர்த்தகாலம் கட்டுப்படும் தன்மையையும் வரம் அருளினர். இந்திரனும் என்றும் இறவாத சிரஞ்சீவி தன்மையை அனுமனுக்கு அருளினன். இவ்விஷயங்கள் ராமகாரியத்தின் பொழுது நினைவு படுத்தப்படும் என்றும் அதனால் அனுமனின் சக்தி பெருகும் என்றும் இந்திரன் கூறினார். அதன் படியே பிரம்மனின் அம்சபூதரான ஜாம்பவானால் இவ்விஷயங்கள் நினைவூட்டப்பெற்ற அனுமன் பூரணத்வமான பராக்ரமம் சக்தி இவற்றை அடைந்தவன் ஆனான்.

எல்லா வானரங்களின் வேண்டுகோளின்படி அனுமன் கடலைத் தாண்ட சாமர்த்திக்கான் சூரியனின் சீடனான சூரியனின் இரு குண்டலங்களை அணிந்து அழகுடன் காணப்பட்டவருமான அனுமன் மகேந்திர மலை மீது தாவி தன் சரீரத்தை மேலும் மேலும வானளாவப் பெருக்கிக் கொண்டான், கருடன் சர்ப்பத்தை சுழற்றுவதுபோல, வாலை சுழற்றி மலைமீது அடித்தான் அந்த அதிர்ச்சியால் சர்ப்பங்கள் கற்களைக் கடித்தன. அனுமன் கால்களை மடக்கி, இடுப்பை சுருக்கி இரு பெருங் கைகளையும் மலையில் ஊன்றிக் கொண்டான் முகத்தை நிமிர்த்திக் கொண்டு காதுகளை சுருக்கிக் கொண்டான் ஹிருதயத்தில் ப்ராண வாயுவை இழுத்துக் கொண்டான். தன்னை கருடனாக பாவித்துக்

மூன்று தத்துவம்!

தொட்டில், கட்டில், சுடுகாடு. —கண்ணதாசன்

கொண்டான். ப்ரும்மாதி தேவர்களை நமஸ்கரித்தான். கீழே இருந்த வானரர்களிடம் சீதையை தன்னால் காணமுடியா விட்டால் இலங்கையையே பெயர்த்து எடுத்து வருவதாக சபதம் செய்தான். அனுமனின் வானைத் தொடும் உயரத்திற்கு தக்கபடி மற்ற வானரர்கள் மகிழ்ச்சியால் தாவித் தாவி குதித்தனர்.

பருத்த துடைகளின் வேகத்தால் மரங்களையும், பாறைகளையும் உடனிழுத்துக் கொண்டு ராமபாணத்தைப் போல அனுமன் வானில் கிளம்பினான். தேவர்கள் ஆசி கூறினர். சந்தியாகால மேகம்போல் சிவந்த மூக்கும். சூரியர் சந்திரர் போல அகன்ற கண்களுமகொண்ட அனுமன் தென்திசை நோக்கிச் செல்லும் கொள்ளிபோல் காணப்பட்டான் பத்து யோஜனை அகலமும், முப்பது யோஜனை நீளமும் உடைய வடிவம் எடுத்த அனுமனை கடலில் வாழும் நாகங்கள் கருடன் என்றெண்ணி அஞ்சின.

இடையில் சமுத்திர ராஜனால் அனுமனை உபசரிக்க ஏவப்பட்ட மைனாக பர்வதத்தை அன்புடன் தடவிக் கொடுத்த அனுமன் தன் பயணத்தைத் தொடர்ந்தான். தேவர்களால் அனுமனை சோதிக்க எண்ணி அனுப்பப்பட்ட நாகமாதாவான ஸுரஸையின் வாயில் புகுந்து வெளிவந்தான். தன் நிழலைப் பிடித்து இழுத்த ஸிம்ஹிகை என்ற அரக்கியின உடலைப் பிளந்தும மீண்டும் ஆகாயத்தில் செல்லத் தொடங்கினான்.

இலங்கை நெருங்கியதும் திரிவிக்ரம அவதாரம் எடுத்த திருமால் மீண்டும் வாமன வடிவமாக மாறியது போல். அனுமான் தன்னை மிகவும் சிறியவனாக சுருக்கிக் கொண்டான். இலங்கையை கவனித்தபடியே சமுத்திர கரை ஓரத்தில் உள்ள லம்பகம் என்ற மலைச் சிகரத்தில் பாய்ந்து குதித்து இறங்கினான்.

(தொடரும்)

கௌரி

தேன்கூடு
சிறு சேமிப்பு திட்டம்

இத்திட்டத்தில் எல்லோரும் சேரலாம். ரூ. 10, 25, 50 என்று மாதாமாதம் சேமிப்பதன் மூலம் சிறந்த நகைகளைப் பெறலாம் ஒருவர் எத்தனை சீட்டுக்கள் வேண்டுமென்றாலும் சேரலாம்.

நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக நாணயத்திற்கும், நம்பிக்கைக்கும் பெயர் பெற்றவர்கள் :

கௌரி ஜுவல்லரி மார்ட்

72-85, பைகிராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி,
சென்னை - 600005.

உரிமையாளர் : K. ராமலிங்கம் போன் : 842594

கீதா வாக்கிய மகிமை

கம்பத்தடியான்

அது பிரிட்டிஷார் நம்மைஆண்டு வந்த காலம். அப்பொழுது டில்லியில் கவர்னர் ஜனரலாக இருந்து வந்தார் வாரன் ஹேஸ்டிங் பிரபு என்பவர். அவர் இந்தியர்கள் மீதும் இந்துக்கள் மீதும், இந்து மதத்தின் மீதும் மிக மரியாதை கொண்டவர். இந்தியர்களும் கவர்னர்ஜனரல் மீது அதிக மதிப்பு வைத்து கொண்டு அன்போடு பழகி வந்தார்கள்

வாரன்ஹேஸ்டிங்குக்கு லாரன்ஸ் என்ற மகன் ஒருவன் உண்டு. அவன் இருபத்தி ஐந்து வயது இளம் காளை துடிப்பானவன், அவன் குதிரை ஏற்றத்தில் வல்லவன். அதிகாலையில் லாரன்ஸ் வெள்ளைக் குதிரையை எடுத்துக் கொண்டு கிளம்பிவிடுவான். வெய்யிலில் லாரன்ஸ் ஏறிவிட்டால் கண் மண் தெரியாமல் அதை வேகமாக ஓட்டுவான்.

இப்படி ஒருநாள் குதிரையில் வேகமாக லாரன்ஸ் போகையில். நடுரோட்டில் குதிரை கட்டுக்கடங்காது ஓடி அவனை கீழே தள்ளியது வேகமாக கீழே விழுந்த லாரன்ஸ் மூச்சுப் பேச்சில்லாமல் கிடந்தான்.

வாரன் ஹேஸ்டிங்குக்கு உடனே தகவல் தெரிவிக்க, அவர் டாக்டர் சகிதம் அந்த இடத்துக்குப் போய்ச் சேர்ந்தார். மகனைப் பார்த்து கண் கலங்கினார். டாக்டர்கள் லாரன்ஸை சோதனை செய்து பார்த்தார். உடனே அவனை மாளிகைக்குக் கொண்டு சென்றார்கள். எவ்வளவோ சிகிச்சை செய்து பார்த்தும் பயனில்லை. லாரன்ஸ் போட்டது போட்டப்படி கிடந்தான். கண் விழிக்கவில்லை, உடல் அசைவு கூட இல்லை. கடைசியில் டாக்டரும் தன்னால் முடிந்தது அவ்வளவுதான் இனி இறைவன் சித்தம் என்று பிரபுவிடம் சொல்லி விட்டு விடை பெற்றுக்கொண்டார்.

வாரன் ஹேஸ்டிங் மனம் கலங்கினார். அவருக்கு பிரைவேட் செக்கரட்டரியாக இருந்தவர் ஒரு இந்தியர். துரையின் மனக்கலக்கத்தைக் கண்டு அவர் விரைந்து சென்று சந்நியாசி ஒருவரை கூட்டி வந்தார் துரையிடம் லாரன்ஸை நேரில் சந்நியாசி பார்க்க, சிறிது நேரம் கூட இருக்க அனுமதி வாங்கினார்.

பிறகு சந்நியாசி லாரன்ஸ் அருகே உட்கார்ந்தார். அவன் தலையில் இருந்து கால் வரை அமுக்கி விட்டுக் கொண்டே தன்னை மறந்து தியானத்தில் இருந்தார். ஒரு மணி நேரம் சென்றது லாரன்ஸ புரண்டு படுத்தான். இன்னும் சிறிது நேரம் சென்றது. மயக்கம் தெளிந்து. தெளிவாக எழுந்து உட்கார்ந்தான்

லாரன் ஹேஸ்டிங் ரொம்ப சந்தோஷமடைந்தார். அந்த சந்நியாசியை மிகவும் பாராட்டி, நிறைய சன்மானம் கொடுக்கப் போனார்.

சந்நியாசி வாங்க மறுத்துவிட்டார். மேலும் அவர் ஸ்ரீ கிருஷ்ண பகவான் இயற்றிய ஸ்ரீ பகவத் கீதையில் சாங்கிய யோகத்தைத்தான் நான் பயன் படுத்தினேன். அதன் மகிமையே இது என்று கூறிவிட்டு விடை பெற்றுச் சென்றார்.

அன்றையிலிருந்து ஹேஸ்டிங் ஹிந்து மதத்தின் மீதும், அதில் உள்ள சான்றோர்கள் மீதும் தனி மரியாதை செலுத்தினார். ஹிந்துக்களில் கல்வி, கேள்விகளில் உயர்ந்தவர்களையெல்லாம் ஒன்று கூட்டி, பகவத்கீதையை ஆங்கில பாஷையிலே மொழி பெயர்க்கச் செய்தார். அதன் பெருமைகளை படித்துப் படித்து அதைப் பாராட்டினார். எவ்வளவு உயர்ந்த விஷயங்களை மக்களுக்கு எளிமையாக, புரியும் படியாக அதில் சொல்லியிருப்பதை ஹேஸ்டிங் வெகுவாகச் சிலாகித்தார்.

தனது ஆங்கிலேய நண்பர்களுக் கெல்லாம் கீதையைப் போதித்தார். தானும் பிரதிதினம் ஸ்ரீபகவத்கீதையை பாராயணம் செய்து பெருவாழ்வு எய்தினார் வாரன் ஹேஸ்டிங் பிரபு.

ராஜயோகம்

ஜி. என். நாராயணன்

ஆறறிவு என்று சொல்லக்கூடிய பகுத்தறிவைப் படைத்த மனிதன் தான் நல்லது கெட்டது எது என்பதை சிந்திக்கிறான். காரியத்தில் செயல்படுகின்றான். இதன் காரணமாக மனிதன் இரண்டு விதமான வாழ்க்கையை அனுபவிக்கின்றான். முதலாவது உலக வாழ்க்கை. இரண்டாவது தெய்வீக வாழ்க்கை.

மனிதன் தெய்வீக வாழ்க்கையைக் கடைப்பிடித்து இறைத் தன்மையை அடைய முக்கியமாக நான்கு யோகங்களை அவன் தெரிந்துக் கொள்ள வேண்டும். அவை யாவன:— கர்ம யோகம், பக்தி யோகம், ஞானயோகம், ராஜயோகம் என்பவைகளாகும்.

ஜீவாத்மா பரமாத்மாவை நாடிச் செல்வதை யோகம் எனப்படும்.

உடலைக் கொண்டு பலவித ஸத் கர்மாக்களின் மூலமாக இறைவனை அடைவது கர்மயோகமென்றும், நாம சங்கீர்த்தனத்தாலும், பூஜை, ஆத்ம நிவேதனம் போன்றவைகளினால் இறைவனை ஆராதிப்பது பக்தி யோக மென்றும், அறியப்பட வேண்டியவரை அறிவதற்கு பயன் படும் அறிவை அறிந்துக்கொள்வது ஞானயோக மென்றும், இறைவனை அறிந்துக்கொள்வதற்கு அடிப்படையாக இருக்கும் உடலென்னும் கோவிலை பழுதில்லாமல் கவனித்துக் கொள்வதற்கேற்ற யோகத்தை ராஜயோக மென்றும் கூறுவர்.

கடைசியாக கூறப்பட்டிருக்கும் ராஜயோகத்தைப் பற்றி சற்று கவனிப்போம்.

மனிதரில் மன்னன் எப்படி சிறந்தவனோ, அதுபோல் யோகங்களில் ராஜயோகம் ராஜாவாக மதிப்பிடப்படுகிறது. இதை அஷ்டாங்க யோகம் என்றும் கூறுவர். அதாவது யமம, நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்பாஹாரம், தாரனம, தியானம், சமாதி என்பவைகளாகும்.

இந்த அஷ்டாங்க யோகங்களை அனுஷ்டித்து வரவேண்டுமானால் மனத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். மனத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமானால் அப்பியாசமும் வைராக்கியமும் இன்றியமையாதது

மனம் என்பது கண்ணுக்குத் தெரியாத ஒரு வஸ்து. எண்ணங்களின் கூட்டுத் தான் மனம் என்பது. (Mind in the bundle of thoughts) எணணங்கள் இல்லை என்றால் மனம் என்ற வஸ்துவே இல்லை.

மனோ, வாக்கு, காயத்தால் எவ்வித உயிர் பிராணிக்கும் தீங்கு செய்யாமலிருப்பது அஹிம்சையாகும். "அஹிம்சா பரமோ தாம:" என்ற

பாவம், புண்ணியம்

பாவம் புண்ணியம் என்கிறார்களே, அவை என்ன? உன் மனசாட்சி எதை ஒப்புக்கொள்ளுகிறதோ, அது புண்ணியம்.

உன் மனசாட்சி எதை ஒப்புக்கொள்ளவில்லையோ, அதுதான பாவம்,

—கண்ணதாசன்

முதுமொழிக்கேற்ப, அஹிம்சையே சிறந்த தர்மமாக கருதப்படுகிறது. அஹிம்சையை ஒருவன் கையாளும் பொழுது எல்லா நற்குணங்களும் அதனுடன் சேர்ந்து விடுகின்றன. அஹிம்சையை பூஷணமாக கொண் டவனிடம் அபரிமிதமான மனோ சக்தி இருப்பதை நாம் காணலாம் அவனிடம் அன்பு இருக்கிறது. தயை, மன்னித்து மறந்து விடுதல், காருண்யம போன்ற உயர்ந்த குணங்களைக் காணலாம். புத்தபிரா னும், மகாத்மா காந்தியும் அஹிம் சையின் திருவுருவங்களாக திகழ்ந் ததை நாம் நன்கு அறியலாம்.

அடுத்து சத்யம் என்பது. இறை வனே சத்தியத்தின் திருவுருவமாக திகழ்கின்றார். சத்தியத்திலிருந்து தான் இந்த பிரபஞ்சமே உருவா னது. சத்யம் தேஜோமயமானது மஹாப்பிரளய காலத்தில் எல்லாமே ஒடுங்கி சத்தியம் மட்டும் நிலைத்து நிற்கும். அது அழியாதது. சத்தி யத்தை கையாள்பவனிடத்தில், சத் தியத்தை பேசுபவனிடத்தில தெய் வீக ஒளி வீசுவதைக் காணலாம். "சத்யமேவ ஜயதே" என்ற திருவாக் கின்படி சத்தியமே கடைசியில் வெல்லும் என்பது திண்ணம்.

பிரம்மச்சரியம் என்பது மனோ, வாக்கு, காயம் என்ற திரிகரண சுத்தியுடன் இருப்பதுவே. உண்மை யான பிரம்மச்சாரிகள உலகத் தையே ஆட்டிப் படைக்கும் தன் மையுடையவர்கள் உதாரணமாக ஹனுமார், பீஷ்மர், சுவாமி விவேகா னந்தர் போன்றவர்கள் பிரம்மச்சரி யத்தைக் கடைப்பிடித்து பேரொளி யுடன் பிரகாசித்ததை உலகம் அறியும்.

இறைவனிடம் சரணாகதியாக தன்னை அர்ப்பணிப்பதுவே ஈஸ்வர பிரணிதானம் என்பது. இதன் காரணமாக மனிதன் தன் உடல், பொருள், ஆவி என்ற திரிகரண சுத்தியுடன் தன்னையே இறைவ னுக்கு அர்ப்பணித்து விடுகிறான். அவனுடைய எல்லா செயல்களையும் இறைவன் கவனித்துக் கொள் கின்றான்.

தேக நலனைக் கட்டுப்படுத்த பிராணாயாமம் ஒரு சிறந்த சாதன் மாகக் கருதப்படுகிறது. பிராணா யாமத்தின் மூலமாக மனிதன் எல்லாவிதமான நோய்களையும் கட் டுப்படுத்தலாம். மூலாதாரத்தில் உறங்கிக் கொண்டிருக்கும் குண்ட லினி சக்தியை எழுப்பி நோயற்ற வாழ்வை அடையலாம். பூரகம், கும்பகம் என்ற இரண்டுவிதமான பிராணாயாமத்தின் மூலமாக மனி தன் சித்த விருத்தியை அடைய லாம்.

மனதைக் கட்டுப்படுத்த தியா னம் சிறந்த சாதனமாக திகழ்கிறது. காலையில் நான்கு மணியிலிருந்து ஐந்து மணி வரையுள்ள பிரம்ம முகூர்த்த காலம் தியானத்திற்கு சிறந்த காலமாக கருதப்படுகிறது.

எப்படி முதல் வகுப்பில் படித்த மாணவன் திடீரென்று பத்தாவது வகுப்பிற்குப் போக முடியாதோ அதுபோலவே தியானம் திடீரென்று பலனைத் தரக்கூடியதன்று ஆரம்ப காலத்தில் சாதாரண நிலையிலிருந்து படிப்படியாக ஒருவன் ஆழ்நிலை தியானத்தைக் கடைப்பிடிக்கலாம்.

மனதை ஒருமுகப்படுத்துவதி லிருந்து தியானத்தையும், தியானத் திலிருந்து சமாதியையும் நிறை வேற்ற முடியும். இறைவனை சகுண தியானமாகவும், நிர்குண தியான மாகவும் தியானிக்கலாம். ஆரம்ப

❋

உலகம் உறங்கும் வேளையிலும், இமைகள் மூட விருப்பமின்றி உழைப்பவனே உண்மை மருத்துவன். —ஹிப்போகிரட்டஸ்

காலத்தில் திரி விளக்கை வைத்து அதிலே மனத்தை ஒருமுகப்படுத்தி தியானிப்பது நல்ல பலனைத் தரும். தியான முறைகளை சரியான முறையில் ஒரு நல்ல குருவின் துணைக் கொண்டு கற்று நற்பலனை அடைவதே சாலச் சிறந்தது.

அஷ்டாங்க யோகத்தில் கடைசியாக விளங்குவது சமாதி நிலையாகும். சமாதி என்பது தியான நிலையின் உச்சகட்டமாகும். ராஜயோகத்தின் தலைசிறந்த கட்டமாகும். தன்னை மறந்த நிலையில் குண்டலினி சக்தி சஹஸ்ராரத்தை அடைந்து, ஜீவாத்மா பரமாத்மா என்ற அகண்ட ஜோதியில் லயித்து பிரம்மானந்தத்தை, சச்சிதானந்தத்தை அனுபவித்திருக்கும் நிலையே சமாதியாகும்.

சமாதி இரண்டு வகையுடையது. சவிகல்ப சமாதி, நிர்விகல்ப சமாதி என்பதாகும். சவிகல்ப சமாதியில் அறிபவன், எதை அறிய வேண்டுமோ அந்த அறிவு, அறியப்பட வேண்டியவன் என்ற நிலை ஏற்படுகின்றது. நிர்விகல்ப சமாதியில் கனவற்ற ஆழ்நிலை தூக்கம் போல் அறிபவன், அறியப்பட வேண்டியவனிடத்தில் லயித்திருப்பதாகும்.

ஆகவே இறைவனை அடைவதற்கு உடலும் உள்ளமும் பரிபூர்ண தன்மை ஜீவாத்மா, பரமாத்மாவை அடைய ராஜயோகமே தலைசிறந்த சாதனமாக திகழ்கின்றது.

★

• வயிறுக்கு அடிமையாக உள்ளவன கடவுளை தொழுதல அரிது. —சா. கதி

இருமல் நோயாளிகள் கவனிக்கவும்

உடல் பலஹீனம்-உடல் இளைத்தல், நெஞ்சு வலி-இதயம் படபடப்பு-தொண்டைக் கட்டு-கோழை-கர்முர்ரென்ற சப்தத்துடன் இழுப்பு இருமல்-இளைப்பு-வாய் கசப்பு-பசிக்குறைவு, வயிர் மந்தம்-ருசியில்லாமை-பித்தமயக்கம் - கைகால் அசதி - சோர்வு புட்ணி வலி - உடல் வலி உள்ள நோயாளிகளுக்கு.

உயர்ந்த நம்பகமான முறையான தயாரிப்பு

'சிவராஜ்' நெல்லிக்காய் லேகியம்

பவள சத்து – சிருங்கி சத்து கலந்தது 250 கிராம் புட்டி ரூ. 30-00

வெள்ளி பஸ்பம்–சிருங்கி, சிலா சத்து கலந்தது 250 கிராம் புட்டி ரூ. 40:00

(போஸ்டேஜ் இலவசம்)

தேவையானவர்கள் V. P. பார்சல் மூலம் பெறலாம்.

— ஏஜெண்டுகள் தேவை —

தயாரிப்பு: **சிவராஜ் சித்த வைத்தியசாலை**

(சென்ட்ரல் டாக்கீஸ் வடபுரம் எதிரில்)

காந்தி ஸ்டேடியம் சமீபம், சேலம்—636 007

நாடகமே உலகம்

வைரம் - ராஜகோபால்

"நாடகப் பெண்ணை ஆட்டும் நட்டுவன்போலே யுன்றன்
கூடக சடத்தை யாட்டும் குருவை நீ யறிந்திடாமல்
மூடகமானால் ஞான முதல்வனை அறிவால் தேடி
ஆடக நாகைநாதர் அடியினைப் பணிவாய் நெஞ்சே".

உலக வாழ்க்கையில் நாம் என்னென்ன வேஷம் போட்டாலும், என்னென்ன கார்யங்கள் செய்தாலும் மனமானது சதா அந்தப் பரம்பொருளையே நினைத்துக் கொண்டிருக்க வேண்டுமென்கிறார்கள். கரகம் ஆடுபவன் எப்படி ஆடினாலும், குதித்தாலும் அவனது கவனமெல்லாம் பகவானைப்பற்றியதாகவும், தர்மநியாயமானதுமாகவே இருக்க வேண்டும். குடும்பமும் வேண்டியதுதான். மனைவி மக்களும் வேண்டியதுதான். பணம் பொருள் எல்லாம் வேண்டியதுதான்

ஆனால், இதெல்லாம் இங்கு இருக்கும் வரையில் தான் உபயோகப்படும். அங்கே போகும் போது செய்துள்ள புண்ய பாவம் மட்டுமே கூடவரும்.

ஏன் சார்! நேற்று கோயிலில் முருகனுக்கு அபிஷேக ஆராதனை விபூதிக்காப்பு நடந்ததே ரொம்ப ஆனந்தமாக இருந்தது. சாயந்திரம் நடந்த கந்த புராணம் உபன்யாஸம் கேட்பதற்கு ரொம்ப நன்றாக இருந்தது. நீங்கள் ஏன் வரவில்லை என்று கேட்டால் எங்கே சார்! வீட்டுலே வேறே யாருமில்லை. வீடுவாசலை விட்டுவிட்டு எப்படி சார் வர முடியும்? அதனால் வரவில்லை என்கிறார் பாவம்!

நாளைக்கு யவன் வந்து கூப்பிடும் போது, வீடு வாசலை விட்டுவிட்டு எப்படி வர முடியும்? என்று அவனிடம் கேட்க முடியுமா? கேட்டால் தான் அவன் விடுவானா? அவன் வந்தவுடனே பாவ புண்ணிய மூட்டையை மட்டுமே எடுத்துக் கொண்டு உடனே புறப்பட வேண்டுமே! ஒரு வினாடி தாமதம் செய்ய முடியுமா?

வாழ்க்கையில் எத்தனை தடவை ஆலயத்தைச் சுற்றினோமோ, எத்தனை தெய்வ வழிபாடு செய்தோமோ, எத்தனை தெய்வ கைங்கர்யம் செய்தோமோ, எத்தனை தர்மங்கள், தானங்கள் செய்தோமோ இவைகள் கூடவே வந்து உதவி செய்யும். பாவங்கள் செய்திருந்தால் அதுவும் கூடவே வந்து தொல்லைகள் கொடுக்கும்.

கங்கைக் கரையில் ஒரே கூட்டம் எல்லோரும் கங்கா ஸ்நானம் செய்து விசுவநாதா, அன்னபூரணி! விசாலாக்ஷி என்று நாமஜபம் செய்து கரை ஏறுகிறார்கள். ஒருவன் மட்டும் கரையில் உட்கார்ந்து கொண்டு அவதிப் படுகிறான். முக்கி முனகுகிறான். வயிற்றைப் பிடித்துக் கொண்டு துடிக்கிறான். பாவம்! கடுமையான வயிற்று வலியால் அவதிப்படுகிறான்.

மேலே பார்வதி பரமேச்வரன் வருகிறார்கள். ஏராளமான பக்தர்கள் நாமாவளி சொல்வது காதில் விழுகிறது. சந்தோஷப்பட்டு ஆசீர்வதிக்கின்றனர்.

தனியாக ஒருவன் உட்கார்ந்து அவதிப்படுவதைக் கண்ட பார்வதி,

நாரதா! இதோ இவன் வயிற்று வலியால் அவதிப்படுகிறான் பாருங்கள்! நான் போய் இவனது வயிற்று வலியைப்போக்கி அருள் செய்து விட்டு வருகிறேன் என்றாள்.

அதற்குப் பரமசிவன், வைத்தியம் செய்ய வேண்டியவன் நான் தான்! எனக்கு வைத்யநாதன் என்றே ஒருபெயர் உண்டு. ஆகவே நானே போகிறேன் என்றார்.

அதெல்லாம் முடியாது தாங்கள் ஏற்கனவே ஒரு முறை ஒரு பக்தருக்கு வயிற்றுவலியை (சூலைநோய்) போக்கியிருக்கிறீர்கள், இந்தத் தடவை நான்தான் போவேன் என்றாள் பார்வதி.

இவர்களது வாக்குவாதத்தைக் கேட்டுக் கொண்டே நாரதர் அங்கு வந்தார். விஷயம் என்னவென்று தெரிந்து கொண்டார். சரி! நாங்கள் இருவரும் இது விஷயமாக விவாதம் செய்ய வேண்டாம். இருவருமே அவனிடம் செல்லுங்கள். அவன் அம்மா வயிறு வலிக்குதே என்றால் தேவியார் அந்த வலியைப் போக்கட்டும். அப்பா, வயிறு வலிக்குதே என்று அவன் சொன்னால், தேவரீர் அவனது வயிற்றுவலியைப் போக்குங்கள் என்றார்.

இதைக் கேட்டதும் பார்வதியும் பரமசிவனும் வயிற்று வலிக்காரனிடம் சென்றார்கள். அவன் யாரைக் கூப்பிடுகிறான் என்று கவனித்தார்கள். அவன் ஐய்யய்யோ வலிக்குதே என்றான்.

சரி! இவன் நம்மில் யாரையுமே கூப்பிடவில்லை, வா போகலாம் என்று சொல்லிக் கொண்டே இருவரும் போய் விட்டார்கள்.

பாருங்கள். மனிதனுக்கு வாக்கிலே நல்ல வார்த்தை வரக் கூடாதா? வந்திருந்தால் பகவான் அருள் செய்திருக்க மாட்டாரா?

ஆகவே. நாம் அடிக்கடி பகவான் நாமாவை தியானித்துக் கொண்டிருந்தால், அந்திகாலத்தில் யமன் வரும்பொழுதும் பகவான் திருநாமம் நம்மை அறியாமல் நமக்கு வந்து விடும். பிறவிப் பயன் பெற்று நற்கதி அடையலாம்.

*

இந்தியாவிலுள்ள குழந்தைகளின எண்ணிக்கை 25 கோடி. இது அமெரிக்காவின் மொத்த மக்கட் தொகைக்குச் சமம்.

குடும்பத்திற்கு தேவையான எல்லாவித எவர்சில்வர், பித்தளை பாத்திரங்கள் பிரஸ்டீஜ் குக்கர், முதலிய சாமான்கள் யாவும் நம்பிக்கையான விலையில் எங்களிடம கிடைக்கும்

மாதாந்திர சேமிப்பு திட்டத்தில் சேர்ந்து பயனடையுங்கள்

எல். ராமசாமி நாடார் & பிரதர்

49, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.

காட்சி சாலைகள் :

22, பைக்ராப்ட்ஸ் சாலை, சென்னை-5.

5, ராமகிருஷ்ண மடம் சாலை, (லஸ்) சென்னை-4

தொழிற்சாலை :

38, V. R. பிள்ளை தெரு, சென்னை-5.

ஆசைக்கு அடிமை

முனிகுண்டலீஸ்வரர் என்ற ஒரு முனிவர் இருந்தார், அவருக்கு ஒரு சாபம் ஏற்பட்டது முனிவர் மறு நாள் காலையில் பன்றியாக மாறிப் போவார் என்பதே அவருக்கு ஏற்பட்ட சாபமாகும். முனிவர் மனம் மிகவும் வருத்தமடைந்தது. இருந்திருந்தும் பன்றியாக மாறுவதா என்று மனதிறகுள் தீர்மானித்தார்.

உடனே தன் மகனை அழைத்தார். அவனிடம் நீ ஒரு காரியம் செய்ய வேண்டும். அதனால் உனக்கு இரண்டு பாபங்கள் வந்து சேரும். பரவாயில்லை. எனக்காக அதைச் செய். நாளைக்கு நான் பன்றியாகமாறிவிடுவேன். உடனே என்னை வெட்டிக் கொன்று விட வேண்டும். தகப்பனாரைக் கொன்ற பாபமும், சாபத்தை மீறிய பாவமும் உன்னைச் சேரும், எனக்காக அதைச் செய்வாயா? கேவலம் நான் ஒரு பன்றியாகவா வாழுவது மகனே? என்று தன் உள்ளத்தின் குறையாகக் கூறினார்

தந்தை சொல் மிக்க மந்திரமில்லையல்லவா? தங்களது சொற்படி நடக்கிறேன். தந்தையே என்றான் மகன்.

மறுநாள் முனிவர் பன்றியாக மாறிவிட்டார். மகன் வெட்டுவதற்கு அரிவாளோடு வந்து சேர்ந்தான். அப்பொழுது பன்றி, மனிதனை விட பன்றிக்கு காற்றின் சுவாசமும், அதன் வாழ்வும் சுகமாக கிடைக்கிறது. அதனால் இன்னும் பத்து மாதம் நான் இப்படியே இருந்து அனுபவித்து விடுகிறேன். அப்புறம் நீ வந்து என்னைக் கொன்று விடு, இப்பொழுது நீ சென்று வா என்றது.

சரி! அப்படியே செய்கிறேன், என்று சொல்லிச் சென்றான் மகன்.

பத்து மாதம் ஓடியது, மகன் பன்றியைத் தேடி அதை வெட்டுவதற்காக வந்தான். அப்பொழுது அவன் கண்ட காட்சி? அதோடு இன்னொரு பன்றி நின்றது. அருகே பத்துப் பன்றிக் குட்டிகள் இருந்தன.

மனிதனாய் இருந்து பன்றியாய் மாறியது அப்பொழுது மகனிடம் சொன்னது, என்னை வெட்ட வேண்டாம் நீ போய் விடு. நான் இப்படியே வாழ்க்கையை நடத்துகிறேன். என் குடும்பம் பெருகிவிட்டது. எனக்கு இதில்தான் சந்தோஷம் இருக்கிறது, நீ போய் விடு என்றது.

மகன் புறப்பட்டான். அவனுக்… தன் தகப்பனாருக்கு இருக்கிற சிற்றின்ப வெறியை நினைத்துக் கொண்டான் சபலபுத்தி காரணமாய் முனிவராய் இருந்த அவருக்கு பன்றியாய் மாற சாபம் கிடைத்திருக்கிறது. அவர் மனதில் உறுதி இல்லை.

மறு நாள் பன்றியாய் மாறியவுடன் தன்னை வெட்டி விடும்படி சொன்னவருக்கு, வாழ்க்கையில் ஏற்பட்ட ஆசை எவ்வளவு தூரம் போயிருக்கிறது என்று நினைத்துக் கொண்டான்.

முனிவர் ஆசைக்கு அடிமையானார். அதன் விளைவுதான் பன்றி வாழ்க்கை.

ஆகவே சபலத்திற்கு கட்டுப்பட்டு விட்டால், நிச்சயமாக நற்கதி பெறமுடியாது பகவான் அருளும் ஏற்படாது. உலக வாழ்க்கையில் ஈடுபட்டு உழல வேண்டியதுதான்.

குண்டூசி

வருட சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 20

தனிப் பிரதி ரூ. 1-20

தாயென்றால் நீயல்லவோ...

தாயென்றால் நீயலவோ—பாரில் தாயென்றால் நீயலவோ?
வாவென்றே வரவேற்று—வாயால வாழ்த்துகிற தாயல்லவோ?

திருப்புற்று மண்ணினிலே—தானாய்த் தோன்றித்தான் தாயாகி
மருவத்தூர் தனிவிருந்தே—அருளே மருககொழுந்தாய்ப பரப்புகின்றாய்

பங்காரு அடியார்மேல்—வந்து பாசத்தைப் பொழிகின்றாய்
இங்காரும சுகம்பெறவே—விந்தை எல்லாமும புரிகின்றாய்

சாதிமத பேதமின்றிப்—பூசை செய்திடவே முனைகின்றாய்
ஓதிடவே மந்திரத்தைத்—தமிழில ஒப்பின்றிப் படைக்கின்றாய்

கூட்டுவழி பாட்டாலே—மனத்தில் கூட்டுறவை வளர்க்கின்றாய்
நீட்டுகிற கரங்களுக்கே—அன்பாய நேசக்கை நீட்டுகின்றாய்

பணத்தோடு வருபவரை—அறமே பலபுரிய வைக்கின்றாய்
உணவோடு உடையினையும்—ஏழை உற்றிடவே செய்கின்றாய்

தீராத வினைகளையே—விரும்பித் தீர்த்திடவே பண்ணுகிறாய்
சேராத நாத்திகரைத்—திருத்திச் சேர்த்தேதான் மகிழ்கிறாய

சத்தியமும் மக்களுக்கே—அழியாக்கனிப்பினையே தருகின்றாய்
தத்துவங்கள தேடிவந்தால்—நெஞ்சில நயமாகப் பதிக்கின்றாய்

வேப்பிலையால் அடித்தே நீ—மூடக்கு வாதத்தை நீக்குகின்றாய்
தோப்புக்குள் தலைமரமாய்த் தோன்றித் தமிழ்நாட்டில் சிறககின்றாய்

—கவிஞர் - ஆர்ப்பாக்கம், பாப்பித்தன்

உங்களுக்கு தேவை

வியாபார அபிவிருத்திககு குபேர தன ஆகாஷணம் நகை வியாபாரிகட்கு ஸ்வர்ண காஷண பைரவா, சித்தப்ரமைககு உனமதத பைரவா, ஆபிசாரம் அகல பரதயங்கிராஸதிரம, சதரு பாதைககு அகோராஸதிரம். இழநத பொருளை பதவியோ திருமபபபெற சார்தத வீரயம, கலகியில மேனமைககு மஹேனமணி, விவாஹத் தடை நீஙக ஸவயமவரா பாரவதி, காதயாயனி, மறறும பலவகை ஹோமஙகள, கேரள மாநதரீக உபாஸகா கிரமததில செயது ரக்ஷை அலலது யநத்ரம் பெற கீழககணட முகவரிககு 75 பைசா தபால தலை இணைதது எழுதவும்.
ஸகநத மேருவும் விசேஷ ஆர்டரின் பேரில் செயது தரப்படும் பகவான கிருஷ்ணர், ராமா ஜாதகஙகள இலவசமாய பெற 45 பைசா தபால் தலை இணைதது எழுதவும்.

முகவரி :— மநதரசாஸதிர ரஹஸயகரு, ஜயோதிஷ கலபதரு

ஸ்ரீ குருவாயூரப்பதாஸர் - B சுந்தரராமன், M A ,B Ed.,
பழமாானேரி P·O., வழி - திருக்காட்டுப்பள்ளி-613104.
தஞ்சை மாவட்டம்

குழிமீட்டான் மூலிகை

வைத்தியமேதை - சுவாமி ஹரியானந்தா, லெக்ஷ்மிபுரம், கீழக்கரை.

குழிக்குள் போகும் நிலையில் உள்ளவர்களையும் மீட்டு வாழ்வளிக்கச் செய்யும் அற்புத மூலிகை இது மலையடிவாரங்களில் அதிகம். தமிழ் நாட்டின் செம்மண் பூமிகளில் இம் மூலிகைகளை அருகலாகக் காணலாம்.

இதன் வேர்களைச் சேகரித்து சிறு சிறு துண்டு துண்டாக வெட்டி நிழலில் உலர்த்தி கல்லுரலிட்டுஇடித்து வஸ்திரகாயம் செய்து-குழி அம்மியிலிட்டு இலஞ்சிய மூலியின் சமூலச் சாற்றுல் ஆறுமணி நேரம் நன்கு அரைத்து கடலை அளவு மாத்திரை செய்து காலை மாலை ஒருமாத்திரை விதம் உண்டு பசும் பால் சாப்பிட்டு வர;

மகோதரம், பாண்டு, சோகை, காமாலை இவைகள் தீரும். நல்லபசி உண்டாகும். தேகத்தில் அதிக சக்தியும் வீரியமும் உண்டாகும். நீர்த்துப் போன தாது கட்டிப்படும். சகல இதயப்பிணிகளும் நீங்கும்.

இரத்தக் கொதிப்பு, இதய அடைப்பு, இருதய படபடப்பு காந்தல், எரிவு இவைகள் நீங்கி இதயம் திடப்படும. நாள்பட்ட இருமல், க்ஷயம் நீங்கும். ஈளை இருமல், இளைப்பு, கர்முர் என்ற சப்தத்துடன் கூடிய இழுப்பு-இவைகள் ஒரு மண்டல மாத்திரையில் நல்ல குணமாகும்.

குழிமீட்டான் மூலிகையின் இலைகளைச் சேகரித்து நிழலில் உலர்த்தி இடித்து வஸ்திரகாயம் செய்து குழி அம்மியிலிட்டு-இந்திரவல்லி மூலியின் சமூலச் சாற்றுல் நன்கு அரைத்து மிளகு அளவு மாத்திரை செய்து நிழலில் உலர்த்தி காலை மாலை ஒரு மாத்திரை விதம் உண்டு வர பயங்கர ரோகங்கள் அனைத்தும் நீங்குக். பக்கவாதம், பாரிச வாதம், தேகஒடுவாய்வு, மதுமேகம் அதிமூத்திரம், நீரிழிவு, நீரில் சர்க்கரை, வெட்டை, வெட்டைவாய்வு இவைகள் ஒருமண்டலத்தில் சாந்தியாகும். இருமண்டலத்தில் மேற் கண்ட பிணிகள் பரிபூரணமாகும்.

மூன்று மண்டலம் உண்ண கரும் படை, செம்படை, சகலகுஷ்டம் குறைநோய், காக்கை வலிப்பு, தனுர்வாதம், பித்தபைத்தியம் இவைகள் நீங்கும். நாள்கு மண்டலம்உண்ண தேகப்பிணிகள் அனைத்தும் நீங்கி தேகம் இறுகும். உடல் மன்மதனை ஒத்த அழகுடன் மிளிரும். நரை திரை மாறும். காயம் கற்பமாகும். பூரண ஆயுள் வரை எப்பிணியும் இன்றி வாழலாம்.

இதன் விதைகளைச் சேகரித்து இடித்து சீலை வடிவு செய்து ஆல் வத்திலிட்டு இதன் பூச்சாற்றுல் அரைத்து கடலைப் பிரமாணம் மாத்திரை செய்து காலை மாலை ஒரு மாத்திரை விதம் உண்டு வர பல பிணிகள் நீங்கும். முகவாதம், முடக்கு வாதம், நடுக்கல் வாதம், குன்மம் சூலைவாய்வு. சூதக வாய்வு, சூதகக் கட்டி இவைகள் நீங்கும். பௌத்திரம், நவமூலம் இவைகள் மறையும். உடம்பெங்கும் புது இரத்தம் உண்டாகும். புதுதெம்பும், புது சக்தியும் உண்டாகி-இளமையின் சக்தி அங்கமெங்கும் சுடர் வீசிப் பிரகாசிக்கும்.

குழிமீட்டான் சமூலத்தை பசும் பாலால் அரைத்து பாக்களவு மாத்திரையாக்கி உண்டு வர விஷத்தால் அழிவில்லை. விஷம் அமிர்தமாகும். சகல விஷ நீர்ப் பிணிகளும் விலகும். கண்ணுக்கு குளிர்ச்சியும், கூர்மையான-பிரகாசமிக்க பார்வையும் உண்டாகும்.

மிகவும் சக்திவாய்ந்த மூலிகை இது.

நடராஜா அச்சகத்தில் அச்சிட்டு, வெளியிடுபவர், ஆசிரியர் : கே. ராதாகிருஷ்ணன்
அலுவலகம் : நெ. 78, டாக்டர் பெஸண்ட்சாலை, சென்னை-14, தமிழ்நாடு. போன் : 845484